
கல்கி

KALKI
30.3.97
ரூ. 3.00





கல்கி
ஏப்ரல் 13 தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழில்....
ரா.கி. ரங்கராஜனின்
கைவண்ணத்தில்
11:29
மூலம் : டானியல் ஸ்டீல்
உணர்ச்சிமயமான புதிய தொடர்கதை!
வலம்புரி ஜானின்
வைர வரிகளில் பைபிள் கதைகள்!
வெளிச்சத்தின் விலாசம்
பிரபல எழுத்தாளர்கள் எழுதும் வைட்டமின் கதைகள்...
அட்றா சக்கை! அழகு ஸ்பெஷல்!

தொட்டாலே நோய்கள்

"என்னால் செல்வி ஜெயலலிதாவை எந்த மருந்து மாயமும் இல்லாமல் பூரணமாகக் குணமாக்க முடியும்! ஸ்ரீநாத்தின் கைவலியும் என் கைபட்டால் பறந்தோடி விடும். இப்போது கூட பாரஸ் மஹாம்பரேவை (கிரிக்கெட்டர்) ட்ரீட் பண்ணிவிட்டுதான் வருகிறேன்."

இப்படி தன்னம்பிக்கையுடன் பேசும் மோகன் ஜோஷியின் கைகளைப் பார்த்தால் உங்களுடையதும் என்னுடையதும் போல்தான் சாதாரணமாக இருக்கிறது! ஆனால், நோட்டுகளை எண்ணும் இந்தக் கைகளில் (எஸ்.பி.ஐ. வடாலா (மும்பை) கிளையில் டெல்லராகப் பணி) நோய்களைக் குணப்படுத்தும் அசாதாரணமான சக்தி மறைந்திருக்கிறது!



திருபாய் அம்பானியிலிருந்து, மும்பை முனிசிபல் கார்ப்பரேஷனின் முன்னாள் சூப்பிரண்டெண்ட், மும்பையின் புகழ்பெற்ற மருத்துவமனையின் சேர்மன், மராத்தி இலக்கிய ஜாப்பவான்கள், பாங்க் அதிகாரிகள், ரதி அக்னிஹோத்ரியின் குடும்பத்தார் என வி.ஐ.பி.க்கள் தவிர லட்சக்கணக்கான ஏழைகளுக்கும் இவர் 'கை வைத்தியம்' கைகொடுத்திருக்கிறது.

இந்த அற்புத சக்தி பற்றிய உண்மை, இவரது 32வது வயது வரை இவருக்குத் தெரியாமலேயே இருந்திருக்கிறது! விதர்பாவைச் சேர்ந்த "கொங்கணஸ்த பிராமணர்' வகுப்பில் பிறந்த இவரிடம், சின்ன வயதில் யாரோ ஒரு மகான், 'உன் கையில் பெரிய அதிசயம் மறைந்திருக்கிறது' என்று கூற, அதை விளையாட்டாக எடுத்துக் கொண்டு, தெரிந்தவர்களிடமெல்லாம் சொல்லிச் சிரித்திருக்கிறார்.

பிறகு 1982 மார்ச்சில், உடன் பணிபுரிந்த நரேந்திர நவ்கரே என்பவர், கையில் "காங்கிலியானால்" (வளர்ந்து கொண்டிருக்கும் கட்டி) கஷ்டப்பட எந்த வித மருத்துவமும் குணமளிக்காத விரக்தி நிலையில், 'உன் கையில் ஏதோ சக்தி இருப்பதாகச் சொல்வாயே! என் மீது பிரயோகித்துப் பாரேன்' என வலி பொறுக்காமல் கெஞ்ச, இவரும் தன் கையை அந்தக் கட்டி மீது வைத்துப் பரிசோதித்திருக்கிறார். நாலே நாட்களில் வலியும், நான்கு வாரங்களில் கட்டியும், இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன! மெய்சிலிர்த்துப் போனது நோயாளி மட்டுமல்லாமல், 'டாக்டரும்' கூடத்தான்!

தன்னில் பொதிந்திருக்கும் சக்தியை உறுதிசெய்து கொள்ள, 'பிரபு' எனும் சமூக சேவகர் உதவியுடன், ஏழை மில் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் வசிக்கும் 'வர்லிநாகா' பகுதியில், நோயாளிகளைச் சோதிக்க ஆரம்பித்தார். ஸ்டிரைக்கினால் ஈ.எஸ்.ஐ.எஸ்.

மருத்துவ வசதி தடை செய்யப்பட்டிருந்த நிலையில், இவரது இலவச 'ப்ராக்டிஸு'க்கு எக்கச்சக்க "டிமாண்டு"!

விதவிதமான நோய்களை குணப்படுத்தும் சக்தி தம் கரங்களுக்கு இருப்பதை உறுதிசெய்து கொண்ட பின்னர், ஒரு பத்து வருடங்களுக்கு மனித சமூகத்துக்கு இதை ஒரு சேவையாகவே செய்து வந்திருக்கிறார் மோகன்!

"அண்மையில்தான் தாதரில், போர்ச்சுகீசிய சர்ச்சுக்கு எதிராக ஓர் அறையை வாடகைக்கு எடுத்திருக்கிறார். நோயாளிகளின்

குணமாகும்!

பொருளாதார நிலமைக்கேற்றபடி, இலவசமாகவோ குறைந்த கட்டணம் பெற்றுக் கொண்டோ சிகிச்சை அளிக்கிறார்.

மும்பையின் அவசர வாழ்க்கைக்கு ஏற்ப, ஒரு 'ஸிட்டிங்' என்பது இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள்தான்! அதுவும் வாரம் ஒரே முறை! துவக்க நிலையிலிருக்கும் நோய்களை ஒரே ஸிட்டிங்கிலும், வேரூன்றியவற்றை அதிக பட்சம் பத்து 'ஸிட்டிங்'கிலுமாக குணமாக்குகிறார்! ஸ்பாண்டலைடிஸ், ஸைக்கியா, ஆர்த்தரைடிஸ், பி.பி., ஆஸ்த்துமா, மற்றும் ஈ.என்.டி. சம்புந்தமான நோய்களில் இவர் 'ஸ்பெஷலிஸ்ட்'. (அதனால்தான் ஜெயலலிதாவுக்கு காரண்டி கொடுக்கத் தயாராயிருக்கிறார்.)

"ஸ்லிப் டிஸ்க்குக்கு எம்.ஐ.ஆர். எடுத்தால் 5000 ரூபாய் செலவு! என்னிடம் மிஞ்சி மிஞ்சிப் போனால் 600 ரூபாய்தான்! அதுவும் எந்த 'டயட்' கண்ட்ரோலுமில்லை! மருந்து மாத்திரை இல்லை! மொத்த ட்ரீட்மெண்ட்டே இருபது நிமிடங்கள்தான்" என்கிறார்.

இவருக்கு சவால் விட்ட நோய் 'பார்சீஸ்' - ஒருவித தசை நோய். ஒரு இளம்பெண்ணையும் நடுத்தர வயதுக்காரரையும் குணமேயில்லாத இந்த நரகத்திலிருந்து காப்பாற்றி இருக்கிறார்! கையை மடக்கவே முடியாதிருந்த ஒரு பெண்மணியை இவர் தொட்ட மாத்திரத்தில், கை ஸ்பிரிங் போன்று மாறிய விந்தை இவரையே ஸ்தம்பிக்க வைத்திருக்கிறது!

"என் தங்கையே ஒரு டாக்டர்தான் (எம்.எஸ்.); ஆனால் அவள் இதை எல்லாம் நம்பவில்லை. முதுகுவலியால் துடித்துக் கொண்டு, பெரிய ஆபரேஷனுக்கு தயாராக இருந்த அவள் மாமியாரை நான் நிமிட நேரத்தில் குணப்படுத்திய பின்தான், அவளுக்கே நம்பிக்கை பிறந்தது!" என்கிறார்.

இந்த "சக்தி" இவரைப் பலமுறை பயங்கர விபத்துகளிலிருந்து காப்பாற்றி, வர இருக்கும் அபாயங்களுக்கு முன்னெச்சரிக்கையும் அளித்திருக்கிறதாம்!

இவர் நோய்களைக் குணப்படுத்தும் விதமே அலாதிதான்! கண்களை மூடிக் கொண்டு, முதுகில் ஒரு கையும், நோய்வாய்ப்பட்ட இடத்தில் ஒரு கையையும் வைக்கிறார். முகத்தைச் சுற்றி கைகளைக் கொண்டு வரும் போது, 'ஜில்'லென்று ஒரு சூடு பரவுகிறது! சில சமயங்களில் இவர் கைகளில் அதிர்வுகள் கூட ஏற்படுவதுண்டாம்! இரண்டே நிமிடங்கள் தான்! கண்களைத் திறந்து விடலாம்!

"இரண்டு கைகளையும் அபய முத்திரை போல் வைத்துக் கொண்டு அமர்ந்து விடுவேன்; ஆயிரக்கணக்கான நோயாளிகள் என் கையையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருப்பர்! இந்த முறையிலும் நிறைய பலன் தெரிகிறது" என்கிறார். ஹைதராபாத்தில் இவருக்கு நிறைய பேஷண்டுகள்; சென்னையும் வருவதுண்டாம். கொழும்பு (ஸ்ரீலங்கா) பல்கலைக் கழகம், அகில உலக மாநாடு ஒன்றைக் கூட்டி, இவருக்கு டாக்டர் பட்டம் அளித்து கௌரவித்துள்ளது! ஆனால் இவர் அந்தப் பட்டங்களை எல்லாம் பெயரோடு ஒட்ட வைத்துக் கொள்ளவில்லை!

"விஞ்ஞான முறையில் என் சக்திக்கொரு விளக்கம் அளிக்க முடியாத வரை பட்டங்களும் பகட்டும் எதற்கு? அஞ்ஞான ரீதியாக நான் சிந்தித்துப் புரிந்து கொண்ட அளவிற்கு விளக்கமளிக்கிறேன்" என ஆரம்பித்தார்.

"அகண்ட பிரம்மாண்டத்தில் நம் கண்ணுக்குப் புலப்படாத பல சக்திகள் இயங்கி வருகின்றன. நாம் கண்களை மூடிக்கொண்டு, சிந்தனைகள் அனைத்தையும் நீக்கி, மனத்தில் ஒரு வெற்றிடத்தை உருவாக்கி, அங்கே இந்த வெளியுலக சக்தியை அழைக்க வேண்டும்; பிறகு மனதை ஒருநிலைப்படுத்தி, ஒரே நினைப்பை (நோய் குணமாக வேண்டும்) ஸ்திரப்படுத்தினால், அந்த சக்தி, இந்தச் செயலை வெற்றிகரமாகச் செய்து முடித்து விடுகிறது! அந்தச் சக்தியை கடவுள் என்றாலும் சரி! அமானுஷ்ய சக்தி என்றாலும் சரி!" - சொல்லி முடிப்பவருக்குக் கடவுள் நம்பிக்கையே கிடையாதாம்!

மும்பையிலிருந்து : **ஜேயார்**



என் மீது தொடுக்கப்பட்ட
முதல் பாலியல் பலாத்காரம்
என் பதினான்காம் பிராயத்தில்
நிகழ்ந்தது.

அப்பாவுக்கு கடும் தலைவலி.
மாத்திரை வாங்கிவர
அம்மா என்னை
கடைக்கு அனுப்பினாள்.
வழியில், இரு ''பசங்கள்''
அடித்த கமெண்ட் :
''செம குட்டிடா!''

அன்று வார்த்தைகளாலேயே
கற்பழிக்கப்பட்ட அனுபவம்
கொடியது.

தொடர்ந்து, என் மனம்
மீண்டும் மீண்டும்
கற்பழிக்கப்பட்டது.
பல சந்தர்ப்பங்களில்,
பல சூழ்நிலைகளில்.

விரல்களைத் தொடுவதனாலேயே
கற்பழிக்க முடியும் என்று
நிரூபித்த பஸ் கண்டக்டர்.

பஸ் நெரிசலில்
தங்களது
உரசல்களால் கூட
கற்பழிக்க முடியும்
என்பதைக் காட்டிய
சக பிரயாண மிருகங்கள்.

அலுவலகத்தில்,
என் செவிப்புலனை
கூர்க்கவென்றே
உரத்த குரலில்,
தங்கள் வீட்டில் நிகழ்த்திய
''மாட்டினி ஷோ'' பற்றிப் பேசி
என் மூளையைக் கற்பழித்த
இன்பியல் ''மேனியாக்''கள்.

இவர்களெல்லாம் என் மனதை
மீண்டும் மீண்டும்
கற்பழிக்க,
மரத்துப் போன மனதுடன்
எனக்கு ஒருநாள்
திருமணம் நிகழ்ந்தது.

இரவு,
அம்மா கொடுத்த
பால் செம்புடன்
களைத்த உடலுடன்
அறைக்குள் நுழைந்து
கதவைச் சாத்தி,
கணவரின் காதோரம்
கனிவாக வேண்டுகோள் விடுத்தேன்,
"அசதியா இருக்கு,
இன்னைக்கு வேண்டாங்க."

ஆனால்
என் கோரிக்கை
நிராகரிக்கப்பட்டது.

அன்று என் மனதோடு
என் உடலும்
என் கணவராலேயே
கற்பழிக்கப்பட்டது.

இருபது ஆண்டுகள் ஓடிய பின்னர்,
இன்று காலை,
என் எழுபத்தி நான்கு வயது
அப்பாவைப் பார்க்க வந்தேன்
அவருக்கு நெஞ்சுவலி.
அம்மா மருந்து வாங்கிவர
என்னை
கடைக்கு அனுப்பினாள்.

வழியில், இரு "பசங்கள்"
இந்த
நாற்பத்தி ஒன்றைப் பார்த்து
அடித்த கமெண்ட் :
"செம கட்டைடா!"

இதுதான்
ஒரு "குட்டி",
"கட்டை"யான சோக வரலாறு.

ஓ, ஆண்களே,
இனி எங்களிடம்
அழிப்பதற்கு
ஒன்றுமேயில்லை.

எம்மில் யாராவது
இனி
இடது மார்பைத்
திருகி எறிந்தால்,
மதுரை என்ன
ஒரு மெழுகுவர்த்தி கூட
எரியாது.

— ஜோசப் குமார்



சூப்பர் ஸ்டாருக்கு சுடலை எழுதியது...

அன்புக்கும் வணக்கத்துக்கும் உரிய சூப்பர் ஸ்டார் அவர்களுக்கு,

தங்கள் வீட்டில் கொள்ளையடித்த சுடலை எழுதிக் கொண்டது.

நான் உங்களோட விசிறிங்க. சிவாஜி, எம்.ஜி.ஆர். எல்லாரையும் தூக்கிச் சாப்பிடற மாதிரி டாப் டக்கரா நடிக்கிறீங்க. அருணா சலத்தை ஆவலோட எதிர்பார்க்கிறேனுங்க.

சிவாஜி, 'கள்வனின் காதலி'யிலும் எம்.ஜி.ஆர். 'மலைக்கள்ள'னிலும் நடிச்சதை சின்னப் புள்ளையா இருக்க சொல்ல பார்த்திருக்கேனுங்க. அப்பக் கூட கொள்ளைக்காரனா மாறணும்கிற எண்ணம் எனக்கு ஏற்பட்டதில்லீங்க. ஆனா பாருங்க, நாளாக ஆக, இந்த அரசியல்வாதிங்க ஏராளமா கொள்ளையடிக்க ஆரம்பிச்சாங்களா, அப்பத்தான் எனக்குத் தோணிச்சு, "இந்தப் பசங்க நாட்டையே கொள்ளையடிக்கிறானுங்களே, நாம ஏன் சில வீடுங்களைக் கொள்ளையடிக்கக் கூடாது'ன்னு. அப்படித்தாங்க நான் இந்த தொழிலில் இறங்கினது.

இப்பக் கூட உங்க வீட்டுல நான் கொள்ளையடிச்சதுக்கு உங்க ஏரியாவுலயே – அதாங்க போயஸ் கார்டன் – வசிக்கிற அந்த அம்மா 'லபோ லபோ'ன்னு அடிச்சுக்கப் போறாங்க. "கருணாநிதி ஆட்சியிலே சட்டம் – ஒழுங்கு குலைஞ்சு போச்சு; எங்க பார்த்தாலும் கொள்ளை! கருணாநிதிக்கும் சிதம்பரத்துக்கும் ஆதரவா தேர்தல் சமயத்துல பேசின ரஜினி வீட்டிலேயே கொள்ளை!" அப்படி இப்படின்னு பொளந்து கட்டு வாங்க! நீங்க ஒண்ணும் கண்டுக்காதிங்க. உண்மைல அவங்க வீடுதாங்க எனக்குக் குறி! அவங்களும் அவங்களோட உடன்பிறவா சகோதரியுமா சேர்ந்து பண்ணின அட்டகாசமெல்லாம் ஒண்ணொண்ணா அம்பலத்துக்கு வர வர, வேதா நிலையத்துல பூந்து புறப்படணும்னு எனக்கு ரொம்ப ஆசை. ஆனா பாருங்க, ஏகப்பட்ட செக்யூரிட்டி, கறுப்புப் பூனைங்க, இசட் பாதுகாப்பு, அது இதுன்னு அமர்க்களப்பட்டுதா? தயக்கமா இருந்திச்சு.

தேர்தல்ல ஜனங்க பாடம் புகட்டினாங்களா, 'சரி இனிமே செக்யூரிட்டி அதிகமா இராது, நம்ம வித்தையைக் காட்டலாம்'னு நினைச்சிருந்தேன். அதுக்குள்ள ஸி.பி.ஐ., விஜிலன்ஸு, அமலாக்கப் பிரிவு வகையறாங்க பூந்து விளையாடிட்டாங்க. எனக்குக் கொள்ளையடிக்க ஒண்ணும் பாக்கி வைக்காம துடைச்சு எடுத்துக்கிட்டுப் போய், கடை பரப்பி, பப்ளிசிட்டி பண்ணிட்டாங்க. என் ஆசை பாழாயிடுச்சு.

அதுக்காக உங்க வீட்டுக்கு விஜயம் பண்ணணுமான்னு கேட்டா, அதுல எனக்கும் ஒரு இமேஜ் கிடைக்குது இல்லீங்களா, அந்தப் பெருமைக்காகத்தானேயொழிய, பிசாத்து ஒன்னரை லட்சம் ரூபா நகைக்காக இல்லீங்க. பேப்பர்ல படிச்சு மதிப்பு தெரிஞ்சுக்கிட்டேனுங்க. இதை உருக்கறதுக்காக விற்கப் போனா ஐம்பதாயிரம் கூட தேறாதுங்க. காரணத்தை விளக்க வேண்டியதில்லீங்க. இதுவே, பணத்துல புரள்ற ஒரு அரசியல்வாதி வூட்ல பூந்திருந்தேன்னா, ஸூட்கேஸ் ஸூட்கேஸா பணம் கிடைச்சிருக்குமே!

அது போவட்டும், உங்க வாட்ச்மேன்கிட்ட கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க. அவரு கெட்டா கட்சி போல. வாசல் பக்கமே ஸ்டூல்ல உட்கார்ந்து குறட்டை விடறாரு. வாட்ச்மேன்னு சொன்னா வீட்டைச் சுற்றிச்சுற்றி வரவேணாமுங்களா? அப்புறம் உங்க கண்டிராக்டரையும் தலைல தட்டி வையுங்க. எதுக்குங்க ஆளுயர சுவர் கட்டறது? யாரும் ஏறி குதிக்கக் கூடாதுன்றதுக்குத்தானே? அதுலயே வெள்ளையடிக்கிறேன் பேர் வழின்னு சாரம் கட்டி வைச்சா, "வா வா, ஏறு ஏறு'ன்னு ஆசை காட்டுது, இல்லீங்களா?

ஜன்னல் கிரில் டிசைனை ஸ்குரு நீக்கி கழற்றிவிட்டு, உள்ள பூந்தப்ப, உள்ளூர எனக்கு ஒரு ஆசை இருந்துச்சுங்க. எப்படியும் சத்தம்

செம்பியன்



கேட்டு நீங்க எழுந்து வருவீங்க; என் சாமர்த்தியத்தைப் பார்த்து ஆச்சர்யப்படுவீங்கன்னு நினைச் சேன். அப்படி நடந்திருந்தா உங்க கை குலுக்கிட்டு, கொள்ளை யடிச்சதை உங்க காலடியிலேயே சமர்ப்பிச்சுட்டு, படர் 'த்ரில்' லோட திரும்பிப் போயிருப் பேன். அதுக்காகவே கொஞ்சம் சத்தப்படுத்தியும் பார்த்தேன். ஆனா, அருணாசலம் படம் ஷூட் டிங்குக்கு அப்புறம் நீங்க ரொம்ப டயர்ட் ஆயிட்டாப்பல. லதா அம்மா தான் எழுந்து வந்தாங்க. அவங் களுக்கு என் முக தரிசனம் கொடுத் துட்டு திரும்பிட்டேன். அது சரி, என்னதான் ஆக்ஷன் ஹீரோன்னாலும் பீரோ கதவுகளைப் பூட்டாமல் திறந்தா வைச்சிருப்பீங்க? ரொம்ப தப்புங்க.

போலீஸ் அவுட் போஸ்ட் இருந்தும் கூட ரஜினி வீட்டில கொள்ளைன்னதும் காக்கி சட்டை அதிகாரிங்க அல்லாரும் கும்பலா வந்து உங்க வூட்ல குந்திக்கிட்டாங்க. கமிஷ்னர் வந்தா பத்தாதாமா? கூடுதல் கமிஷ்னர், இணை கமிஷ்னர், உதவி கமிஷ்னர்னு எத்தினி பேரு! அவனவனுக்கு வேற வேலை இல்லை? பத்தாக்குறைக்கு தேனாம்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டருங்க ரெண்டு பேரு! மோப்ப நாய் வேற! எல்லாரும் ஷோ காட்டறானுங்க. பாழாப் போன பப்ளிசிடி ஆசை யாரை விட்டு துன் நீங்க! இவங்களுக்குக் காப்பி கலந்து கொடுத்தே லதா அம்மாவுக்குக் கை ஒடிஞ்சு போயிடும்!

என்னோட விரல் ரேகைகள் கிடைச்சுதாம்; பீடி துண்டு கிடைச்சுதாம்; என்னை புடிக்க ஸ்பெஷல் ஸ்குவாடாம்! ரஜினி வூட்ல கொள்ளையடிக்கப் போய்த்தானே என்னை இப்படி ஸ்பெஷலா கவனிக்கிறாங்க!

எதுவும் எங்கப்பன் காத்தவராயன் சித்தப்படி நடக்குமுங்க. நான் மாட்டிக் கணும்னு காத்தவராயன் நினைச்சா அப்படித்தான் நடக்கும். ஆனா ஒன்னு, எப்பேர்ப்பட்ட போலீஸ் அதிகாரியானாலும் சரி, சுப்ரீம் கோர்ட் நீதிபதியேயானாலும் சரி, 'சூப்பர் ஸ்டார் வீட்லயே தேட்டை போட்டவன்'ற பெத்த பெருமையை என்கிட்டேருந்து யாரும் தட்டிக்கிட்டுப் போக முடியாது பாருங்க!

11வது 12வதும்

'ராஜபார்வை' தாத்தா மாதிரி, காதல் கல்யாணத்தை 'என்கரேஜ்' செய்ய, நிஜவாழ்க்கையில் யாராவது இருக்க முடியுமோ? நமக்குத் தெரிந்து ஒருவர் இருக்கிறார்; வாட்டசாட்டமான வி.என். சுப்பிரமணியம். ராஜா அண்ணாமலைபுரம்வாசி. எக்ஸ்நோரா இன்டர்நேஷனலின் பொதுச் செயலர். எம்.பி. நிர்மலின் வலக்கரம். காதல் வசப்பட்டு, 'காற்றில் ஏறி விண்ணையும் சாடுவோம்' என்று தீர்மானம் செய்து கொள்ளும் எந்த ஒரு பெண்ணும் பையனும், எதிர்ப்பு இருந்தால், நாடுவது வி.என்.எஸ். ஸைத்தான்! அவரை நாமும் நாடினோம்; அனுபவங்களைக் கேட்க...



• வி.என்.எஸ்.

"முரளின்னு ஓர் இளைஞர். எனக்கு நல்லாத் தெரிஞ்சவர். ஒரு ஷோ விஷயமா பம்பாய் போனார். திரும்பி வர்றபோது, 'சார், அங்க ஒரு பொண்ணை லவ் பண்றேன். கல்யாணம் பண்ணிக்கிறதா முடிவு பண்ணிட்டோம். ஆனா அவ கிறிஸ்தவப் பெண்'னார். 'இது என்ன கண்டதும் காதலா, கிளுகிளுப்புக் காதலா? கல்யாணம் பண்ணிக் கொண்டால் ஒழுங்காக வைத்துக் காப்பாத்த முடியுமா? சும்மா காதலிச்சா மட்டும் போதாது. பின் விளைவுகள் என்னன்னு யோசிக்கணும்'னு சீரியஸா சொன்னேன். 'எல்லாம் யோசிச்சாச்சு. கல்யாணம் பண்ணிக்கிறதா தீர்மானம் பண்ணிட்டோம். நீங்கதான் உதவி பண்ணணும்'னார்.

"முதல்ல அவளை இந்துவாகப் பெயர் மாற்றினேன். ஒரு புரோகிதர் கிட்டப் போய், 'அவசரமா ஒரு கல்யாணம் நடத்தியாகணும்'னேன். 'இது ஆடி மாதம். யாரும் கல்யாணம் பண்ண மாட்டார்கள்'னார். 'ஆடி மாதம் கல்யாணம் ஆனா சித்திரையில் குழந்தை பிறந்து' வெயில் காலத்தில் பெரிய அவஸ்தைப்படும்ங்கிற காலம் எல்லாம் மாறியாச்சு. இப்போ ஃபேன், ஏ.ஸி. எல்லாம் வந்தாச்சு... இப்போ இவர்களுக்குக் கல்யாணம் நடத்தி வைக்கவில்லை என்றால், நடுவில் ஏதானும் தப்புத் தண்டா நடந்து விட்டால், நீரும் நானும்தான் பொறுப்பு'ன்னு ஒரு போடு போட்டேன். புரோகிதர் மனமிளன்னு ஏற்பாடு பண்ணி, கல்யாணத்தை முடிச்சு வைச்சார்!" என்கிறார் வி.என்.எஸ்.

"இன்னொரு முஸ்லீம் பையன். நியூ காலேஜ்ல எம்காம். பண்ணிட்டிருந்தான். ஒரு பிராமணப் பெண்ணை லவ் பண்ணான். காதல் ரொம்பவும் 'முத்தி'ப் போய், அவ பிரக்னன்ட் ஆயிட்டா. இரண்டு பேரும் எங்கிட்ட வந்தாங்க. பையனுக்குக் கல்யாணத்துல இஷ்டம் இருக்கலே. காரணம் அப்பா கிட்ட பயம். அப்பா சிங்கப்பூர்ல இருந்தார். பையனின் அப்பாவோட சிங்கப்பூர் டெலிஃபோன் நெம்பரை வாங்கி, ஃபோன் பண்ணினேன். 'ஒரு பையன் ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுவதாகப் பேசி, தீவிரமா காதலிச்சு, அவளை ஒரு குழந்தைக்குத் தாயாக்கிட்டான். நீங்களா இருந்தா என்ன செய்வீங்க?'ன்னு கேட்டேன். 'என்ன பண்ணுவேனா! அந்தப் பையன் யாரா இருந்தாலும் பிடிச்சு வச்சு, அந்தப் பொண்ணுக்கே கல்யாணம் பண்ணி வைப்பேன்'னார். 'அது உங்க பையனாவே இருந்தா என்ன பண்ணுவீங்க?'ன்னு கேட்டேன். 'என் பையனா இருந்தாலும் அப்படித்தான் செய்வேன். நீங்க தேதி பார்த்து, எல்லா ஏற்பாடும் செய்யுங்க. நான் வந்து நடத்தி வைக்கறேன்'னார்.

எம்.பி. நிர்மல், 'அமெரிக்கா' நாராயணன், நான் எல்லாருமாகக் கல்யாணத்தைப்

பிரமாதமா நடத்தி வச்சோம்!"

"போலீஸ் வரை எல்லாம் போகலியா?"

"அது வேற ஒரு ஜோடி. எண்ணூரில் ஒரு நாயுடு பையன். பெண் வன்னியர் குலத்தைச் சேர்ந்தவள். பெண்ணோட அப்பா, விஷயத்தை முதல்ல கேட்டதும் 'நீ கல்யாணம் கட்டிக்கிட்டா வெட்டிப் போட்டுருவேன்'னு கூச்சல் போட்டார்... வடபழனி கோயில்ல தான் திருமணத்தை நடத்தி வச்சோம். போலீஸ் இன்ஸ்பெக்டர் வரைக்கும் முதல்ல விஷயம் போனதுனால, அவர் இரண்டு குடும்பத்துக்காரங்களையும் கூப்பிட்டு காம்ப்ரமைஸ் பண்ணி வச்சார்" என்கிறார் வி.என்.எஸ்.

"பத்து ரூபாயில மாலை மாத்திக்கிட்டு,

• மகன் கல்யாணத்தில்....



சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டால், அது செல்லும்னு சட்டம் இருக்கறது தமிழ்நாட்டுல மட்டும்தான்" என்றவர், தொடர்ந்தார்.

"கோடம்பாக்கத்துல ஒரு தவில் வித்துவான். அவர் பையன் கம்ப்யூட்டர் இஞ்சினியர். நல்ல குடும்பம். பையன் ஒரு பிராமணப் பெண்ணை லவ் பண்ணிட்டான். அவள் எம்.ஏ. படிச்சிட்டிருந்தா. பெண்ணோட அம்மா, என்ன சொல்லியும், கல்யாணத்துக்குச் சம்மதிக்கவே இல்லே. 'நம்ம பிராமின் ஃபேமிலிலேயே உனக்கு நல்ல பையனாப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கறேன்னா. பொண்ணு மாட்டேன்னுட்டா. பையனையும், பெண்ணையும் கோடம்பாக்கம் ரிங் ரோட்டில இருக்கற அம்மன் கோயிலுக்கு வரச் சொன்னேன். கல்யாணம் பண்ணி வச்சோம். பெண்ணோட சித்தி, அதாவது அம்மாவோட தங்கை, அங்கே வந்திருந்தா. அவ காலில் விழுந்து வணங்கற போது போட்டோ ஒன்னு எடுத்து, அவங்க வீட்டுக்குக்

• ஜகதீஷ் - லக்ஷ்மி:
வி.என்.எஸ். திருமணம்
நடத்தி வைத்த
ஜோடிகளில் ஒன்று



ஜோடி; தயார்!

கொடுத்து அனுப்பி, அவங்க அம்மாட்ட கொடுக்கச் சொல்லிட்டேன். இப்போ எல்லாரும் சமாதானமாகி சந்தோஷமா இருக்காங்க!"

"**அ**டையாறு கேட் ஹோட்டல்ல மோகன்னு ஒரு மலையாளத்துக்காரப் பையன். அஞ்சலின்னு ஒரு தமிழ்ப் பொண்ணைக் காதலிச்சான். அவன் திடீர் நகர்ல இருக்கிறான். அப்பன்காரன் பயங்கர எதிர்ப்பு. 'எவ்வளவு பணம் கொடுப்பாங்க?'ன்னு வேற டிமாண்ட் பண்ண ஆரம்பிச்சிட்டார். ஒரே வாரத்துல எல்லாம் அரேஞ்ச் பண்ணி வேலூர்ல கல்யாணத்தை நடத்தி வைச்சேன். ரெஜிஸ்தர் மாரேஜ்தான்!

"இத்தோட பத்துக் கல்யாணங்கள் - காதல் கல்யாணங்கள் பண்ணி வச்சுட்டேன். சில சமயம் போலீஸ் ஸ்டேஷன்லயும் போயி நின்னு பதில் சொல்லியிருக்கேன்!" என்ற வி.என்.எஸ்.ஸிடம், "சரி சார், உங்க பையனா இருந்தா இப்படி அதிரடி கல்யாணம் பண்ணி வைப்பீர்களா?" என்று கேட்டோம்.

"இதோ, பிடியுங்கள் இன்விடேஷன். என் பையன் கார்த்திக்குக்கும், சௌம்யாவுக்கும் கல்யாணம். கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில்!" என்று பத்திரிகையை நீட்டினார்.

"இதுவும் காதல் கல்யாணம்தான். பெண் வீட்டுக்காரங்க தெலுங்கு. பையன் ஒரு வருஷமா லவ் பண்றான். முதல்ல அவங்க சம்மதிக்கலே. போன வாரம் அவங்க வீட்டுக்குப் போனேன். சௌம்யாட்ட, உனக்கு என் மகன் கார்த்திக்கைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டமான்னு கேட்டேன். எஸ்னு சொன்னா. கார்ல ஏறச் சொன்னேன். நேரே க்ரீன்வேஸ் ரோடுல இருக்கற முண்டகக் கண்ணி அம்மன் கோயிலுக்குக் கூட்டிட்டுப் போனேன்.

"இனோடா தலைவர் 'அமெரிக்கா' நாராயணனை அங்கே வரச் சொன்னேன். நிர்மல் சாரையும் வரச் சொன்னேன். சாமி சந்நிதியில மாலை மாத்தி, கணவன் - மனைவியா ஆயிட்டாங்க. பொண்ணோட பெற்றோருக்குக் கொஞ்சம் கோபம்தான். போலீஸ் ஸ்டேஷன்ல போய் கம்ப்ளெயின்ட் கூடக் கொடுத்துட்டாங்க. நானும் அங்க போய் எல்லாம் விளக்கமா இன்ஸ்பெக்டர்ட்ட சொன்னேன். பெண் வீட்டுக்காரங்களும் யோசிச்சு நல்ல முடிவுக்கு வந்தாங்க. கலாட்டா எதுவும் இல்லாம கல்யாணம் சுபமா நடக்குது... சார், இன்னொரு விஷயம்" என்ற வி.என்.எஸ். "பன்னிரண்டாவது காதல் ஜோடியும் தயார்!" என்றார் சந்தோஷத்தோடு.

"நானும் என் மாமியாரும் போடுற சண்டை எங்க ஏரியா பூரா பிரபலமாயிடுச்சு!"

"அட, அப்படியா?"

"ஆமா, ஒரு கம்பெனிக்காரங்க வந்து, 'அப்பப்ப சண்டைய நிறுத்தி, தாங்க தர்ற விளம்பரத்தை சொல்ல முடியுமா'ன்னு கேட்டாங்கன்னா பார்த்துக்கோயேன்!"

— அம்பை தேவா



காதல் கல்யாணம் கலாட்டா கல்யாணம் ஆகிவிடாமல் இருக்க, முதலிலேயே தீர விசாரித்து விடுகிறார் வி.என்.எஸ். இருவருக்கும் உண்மையிலேயே கல்யாணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தும் எண்ணம் இருந்தால் மட்டுமே முழுமூச்சாக இறங்குகிறார்.


'காதலர்களுக்குக் கலங்கரை விளக்கம்' என்ற புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறார். இதில் குறிப்பிட்ட ஏரியாக்களில் வீட்டு வாடகை நிலவரம், பால், கறிகாய் விலை விவரம், ஒரு குடும்ப பட்ஜெட், விலைவாசிக் குறியீட்டு எண், முதலிய சகல விஷயங்களையும் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்! விரைவிலேயே இப் புத்தகம் வெளியாக இருக்கிறது.

முக்கியமான ஒரு பாஸிடிவ் அம்சம், இவர் திருமணம் நடத்தி வைத்த தம்பதிகள் எல்லோருமே சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறார்கள்!

— **சாருகேசி**


அட்டையில் : **கார்த்திக் - சௌம்யா**

அட்டை வண்ணப்படமும், படங்களும் : **யோகா**


காஸ்ட்லி
கசப்பு
ஜோக்ஸ்
சுரகூஸ் காப்பி மார்ட்
தொள்ளாயிரம் கிராம் சிக்கிரி, நூறு கிராம் காபி பொடி குடுங்க
?!?!?!?
சுரகூஸ் காப்பி
சார்! எங்க புரட்சிகரமான திட்டம் பத்தி சொல்றேன். "பென்ஷனர் சொர்க்கம்" திட்டத்துல ஒரு லட்சம் ரூபாய் போட்டா, மாசம் ஒரு கிலோ காப்பிப் பொடி கொடுப்போம்
காபி விலை ஏறிட்டதாலே கழுநீரே கொடுத்திட்டேன்
என்ன காபி ஒரு மாதிரி டேஸ்ட்டா இருக்கு?
நீங்கதானே நான் போடுற காபி கழுநீர் மாதிரி இருக்குன்னு சொல்லுவீங்க?
அதனால?
நீயே சொல்லு! அது நமக்கு கட்டுபடியாகிற விஷயமா?
போங்க! திருமண நாளுக்கு, நகை, பட்டுப்புடவையா கேட்கிறேன்! ஒரு கிலோ காபி பொடி தானே கேட்டேன்!



கருத்து: ஜாலி
படம்: செல்வம்



கிரீஸ் நாட்டுக் கலைஞர் யானியின் நிகழ்ச்சியை டீவியில் பார்த்த வயலின் மேதை லால்குடி ஜெயராமன் சொல்கிறார்.

பிரமிக்க வைத்த இசை - யானி!

யானி இந்திய இசையை மிகவும் ரசித்து, அதில் ஈடுபாடு காண்பித்திருக்கிறார் என்பது, அவரது முதல், இரண்டாம் காம்போஸிஷன்களில் நன்றாகத் தெரிந்தது.

முதலில், கிட்டத்தட்ட நம் வகுளாபரண ராகத்தின் வடிவில் ஒரு பாவத்தை வெளிக்கொணர்ந்தார். அடுத்தது மிஸ்ர சாபு தாளகதியில் வந்தது. அத்தனை கனகச்சிதமாக அமைந்திருந்தது அது. அவருக்கு நம் சங்கீதத்தில் ஈடுபாடு என்பதைத் தவிர, நம் லயத்தில் ஈடுபாடு இருப்பதும் புரிந்தது. தாளத்தில் ஊடுருவி அந்த வயலினும், ஃப்ளூட்டும் வாசித்தது ரொம்ப அழகாக இருந்தது.

சாதாரணமாக வெஸ்டர்ன் மியூசிக்கில் எல்லாம் சுருதி மாற்றிக் கொண்டே போவார்கள், நம் சுருதி பேதம் மாதிரி. அது அவர்களுடைய வழக்கம். இவரோ சுருதியை மாற்றாமல் நம் இசை மாதிரியே ஒரு சுகபாவத்தோடு வாசித்தது ஆச்சரியமாய் இருந்தது.

அவ்வளவு வாத்தியங்களையும் அந்தந்த இடத்தில் வாசிக்க வைத்து, ஒரு முழுமையான வடிவம் கொடுத்து, அழகுணர்ச்சியை அதில் பளிச்சென்று தெரியவைத்தது அநாயாசமாக இருந்தது.

இவ்வளவு வாத்தியக் கருவிகளை வைத்துக் கொண்டு, ஏகப்பட்ட கற்பனை வேலைப்பாடுகளைச் சேர்த்து இந்த அளவுக்கு சின்க்ரனைசேஷன் வர வேண்டுமென்றால், எத்தனை தீவிர முயற்சி செய்திருக்க வேண்டும் என்று யோசிக்க வைக்கிறது. அவ்வளவு பர்ஃபெக்ட்.

ஒரு சிறிதும் வேறுபாடின்றி, ஒருங்கிணைந்த ஒலியாக அவர் வழங்குவது பிரமிக்க வைக்கிறது. ஆனால் இதை ஒரு மிக்ஸர் என்றுதான் சொல்ல வேண்டும். இந்திய சாஸ்த்ரீய இசை, வெஸ்டர்ன் கிளாசிகல், ஜாஸ், கொஞ்சம் ராக் என்று அழகான கலவை.

முதலில் இருந்த கிளாசிகல் தன்மையை, ஜனங்களுக்காகக் கடைசியில் கொஞ்சம் விட்டுக் கொடுத்து, டிரம்ஸ், பீட்ஸ் என்று தாளத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வாசித்தார்.

அந்தத் தாளகதிக்கு ஏற்ப ஜனங்களும் உணர்ச்சிவசப்பட்டு ஆட ஆரம்பித்ததைச் சொல்லுகிறேன்.

வயலின் வாசித்த ஆப்பிரிக்கப் பெண்மணி ஈடுபாட்டோடு, ரசித்து வாசித்ததைப் பார்க்கவும் கேட்கவும் ருசியாக இருந்தது. இன்னோர் ஆண் வயலினிஸ்ட் ஜுகல்பந்தி மாதிரி, அடிப்படையான தாளகதியில் வாசித்ததும், பிறகு இருவரும் மாற்றி மாற்றி ஜாஸ் அடிப்படையில் வாசித்ததும் அழகு மட்டுமல்ல, அருமை.

எல்லாவற்றையும் விட இந்திய மண்ணில், தாஜ்மகால் பின்னணியில், இசைக்கு ஏற்ப அரங்கத்தில் விளையாடும் ஒளி அமைப்பில் இந்த நிகழ்ச்சியை நடத்த யானி விரும்பியதில் அவருக்கு ஆத்ம திருப்தி கிடைத்திருக்கும்.


இவர்கள் இசையின் தரத்துக்கு எத்தனை முக்கியத்துவம் தருகிறார்களோ, அத்தனை முக்கியத்துவம் ஒலி அளவுக்கும் தருகிறார்கள். அதீத சப்தத்தினால் உருவாக்கக் கூடிய 'எஃபெக்ட்' இவர்களுக்கு அவசியமாயிருப்பதை உணர முடிந்தது.

சந்திப்பு: **எஸ்.வி.என்.**

தில்லி நியூஸ்:

கௌடாவுக்குக் கிடைத்த வசவுகள்!

கம்ப்யூட்டர் மன்னர் பில் கேட்ஸ் வந்திருந்தார் அல்லவா? அவரை வாசலுக்கு வந்து வரவேற்றார் பிரதமர் தேவேகௌடா. "யார் இந்த ரூபர்ட் முர்டோக், பில் கேட்ஸ் எல்லாம்? ஏன் இவர்களை இப்படித் தலையில் வைத்துக் கொண்டு ஆடுகிறீர்கள்? மின்னணுத் துறைச் செயலர் அவரை வரவேற்றால் போதாதா? நீங்கள் பிரதமராய் இருந்து கொண்டு, ஓடோடிப் போய் அவரை வரவேற்கத்தான் வேணுமா?" என்று சகட்டுமேனிக்கு, முன்னாள் பிரதமர் சந்திரசேகர் விளாசித் தள்ளிவிட்டாராம், தமது போண்ட்சி ஆசிரமத்து வீட்டுக்குக் கூப்பிட்டு. அதோடு நிற்கவில்லை சந்திரசேகர். சி.பி.ஐ. தலைவர் ஜோகீந்தர் சிங்கையும் வசைமாரி பொழிந்து தள்ளினார். சந்திரசேகர் பிரதமரை விளாசிக் கொண்டிருக்கும்போது, சுப்பிரமணியம் சுவாமியும் வந்து சேர்ந்து கொண்டாராம்!



• கௌடா

● தமிழக போலீசார் (சசிகலா) நடராஜனைப் பிடிக்க ஆன மட்டும் முயற்சி செய்கிறார்கள். ஆனால் இதுவரை ஆசாமி பிடிபட வில்லை. ஒரு நிமிடம் இருந்த இடத்தில் மறு நிமிடம் இருப்பதில்லை. தில்லியில் போய், தமது மனைவியை மட்டுமல்ல, முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவையும் எப்படியாவது காப்பாற்றி விடுவதில் மும்முரமாய் இருக்கிறாராம். 25 முதல் 30 வகை கிரெடிட் கார்டுகள் வைத்திருக்கிறார் நடராஜன். ஏர் டிக்கெட், ஐந்து நட்சத்திர ஹோட்டல் வாசம் எல்லாம் கிரெடிட் கார்டுகள் வழியாகத்தான் 'செட்டில்' செய்யப்படுகின்றன. இந்த கிரெடிட் கார்டுகளை முதலில் எப்படியாவது பிடித்து முடக்கிவிட தமிழக போலீஸ் ஆன மட்டும் முயன்று வருகிறது.

● ராஜ்யசபாவில் உள்ள அ.தி.மு.க. எம்.பி.க்கள் எல்லாரும் சேர்ந்து முரசொலி மாறன் மீது ஒரு குற்றப் பத்திரிகை தயாரித்து வருகிறார்கள் - ஜெ உத்தரவுப்படி. சன் டீவிக்குக் கிடைக்கும் விளம்பரங்கள் பற்றியும், அவர்கள் தொழில் துறையோடு செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தங்கள் பற்றியும் விவரமான தகவல்கள் திரட்டிக் கொண்டிருக்கிறார்களாம்.

● இளைஞர் காங்கிரஸ் தலைவரான சத்யஜித் சிங் கெய்க்வாடுக்கு 35 வயது ஆகி விட்டது. இதைக் காரணம் காட்டி, அவரைப் பதவியிலிருந்து இறக்கிவிடச் சிலர் கேசரியிடம் முயன்று வருகிறார்கள். அதை எல்லாம் கேசரி காதிலேயே போட்டுக் கொள்ளுவதில்லையாம்!

● கான் மார்க்கெட்டிலுள்ள பாரி சன்ஸ் புத்தகக் கடை நிலவரப்படி, இந்த மாதத்து மிகச் சிறந்த பத்துப் புத்தகங்களில், முதல் இடத்தைப் பிடித்து வந்திருக்கும் நூல் சித்ரா சுப்பிரமணியம் எழுதிய இந்தியா விற்பனைக்கு - 'இந்தியா இஸ் ஃபார் ஸேல்'!

● 'மாசுக் கட்டுப்பாட்டை மீற மாட்டோம்' என்ற சான்றிதழ் பெறாத வாகனங்களுக்கு, பெட்ரோலோ, டீஸலோ விற்கக் கூடாது என்று தில்லி மாநில அரசு தீர்மானித்திருக்கிறது.


● பாயல் 13 வயது மாணவி. கிருஷ்ணா நகர் ஆதர்ச பாரதி பள்ளியில் ஏழாம் வகுப்புப் படித்து வந்தாள். தேர்வுகள் வெகு கடினமாக இருந்ததாம் இந்த வருடம். மத்தியானம் இரண்டு மணிக்குப் பள்ளியிலிருந்து திரும்பி வரும் பெண்ணுக்கு, அம்மா சாப்பாட்டைத் தயாராக வைத்துக் கொண்டு காத்திருந்தாள். முதல் மாடி பாத்ரூமுக்குப் போன பாயல், மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு கருகிப் போனாள். பொசுங்குகிற நாற்றம் உணர்ந்து, அம்மா மேலே போய்க் கதவைத் தட்டுவதற்குள், கரியாகிப் போயிருந்தாள் பாயல். இத்தனைக்கும் 'முதல் நாள் வரை கூட, எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டவில்லையே' என்று அழுது புலம்புகிறார்கள் பெற்றோர்கள்.

• நடராஜன்:
டிமிக்கி கொடுக்கிறார்?



● மிகக் கட்டுப்பாடு உள்ள கட்சி என்று பா.ஜ.க.வைச் சொல்லி வந்த காலம் மலை ஏறி விட்டது. தில்லி பா.ஜ.க.வில் யாரும் யார் பேச்சையும் கேட்பதில்லை என்பது மட்டுமல்ல; நிர்வாகத்தில் அநாவசியமாகத் தலையீடு செய்வதும் அதிகமாகி விட்டதாம்!

— நியூஸ்வாலா





1997 மார்ச் 30
தாது பங்குனி 17
மலர் : 55
இதழ் : 35

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



தி.மு.க. ஆட்சிக்குப் பின்னடைவு!

திருப்பத்தூரில் அரசு சந்தனக் கிடங்கில் அறுபத்தெட்டுக் கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தனக் கட்டைகள் கருகிச் சாம்பலானது தி.மு.க. ஆட்சிக்குப் பெரிய பின்னடைவு.

போதுமான இடைவெளி விட்டு கட்டைகளை முறையாக அடுக்கி வைக்கவில்லை;

பாதுகாப்பு கருதி கிடங்கில் நிறுத்தி வைத்திருக்க வேண்டிய தீயணைப்பு இஞ்சின்கள் அவ்வாறு வைக்கப்படவில்லை;


தீ பற்றியது மாலை நாலு மணி அளவில் என்றபோதிலும், பல்வேறு ஊர்களிலிருந்து ஃபையர் இஞ்சின்கள் வந்து சேர இரவு ஏழு மணி ஆகியிருக்கிறது;

அவ்வாறு வந்தவற்றுள் பலவும் சரியாக இயங்காததால் தீயை விரைவாகக் கட்டுப்படுத்த இயலவில்லை; தீயை அணைக்க 24 மணி நேரத்துக்கும் அதிகமாக ஆகியிருக்கிறது.

இத்தனைக்கும் மேலாக, கிடங்கில் இருந்த 'ஸ்டாக்' முழுவதுமே இன்ஷ்யூர் செய்யப்படாமல் இருந்திருக்கிறது! - சம்பந்தப்பட்ட கோப்புகள் அமைச்சகத்திலிருந்து ஒப்புதல் பெற்று வந்தபாடில்லை.

சதிவேலை காரணமாகத்தான் இப்படியொரு நாசம் விளைந்தது என்று வாதாடப்படுகிறது.

அது உண்மை என்பதாகக் கண்டறியப்படுமானால் கூட, முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்குமானால் சதித்திட்டம் வெற்றி பெற்றிருக்க வாய்ப்பில்லை.



அரசு, தகுந்தவர்களைக் கொண்டு விசாரணை நடத்தத்தான் போகிறது. அறிக்கையும் தயாரிக்கப்படும். வேறு எத்தனையோ பல அறிக்கைகளுடன் இதுவும் சேர்ந்து தூசுப் போர்வையில் உறங்கும்!

தமிழக அரசுக்கு ஏற்பட்டுள்ள இந்த நஷ்டத்தை, வரி செலுத்தும் சாமானிய மக்கள்தான் தாங்கப் போகிறார்கள்.... எரிந்து சாம்பலானது சந்தனக் கட்டைகள் மட்டுமல்ல; பல்லாயிரம் ஏழைகளின் உழைப்பும்தான்.

கல்பனாத் ராய் பெற்ற கடும் தண்டனை!


எம்.பி. பதவி வகிக்கின்ற ஒருவருக்கு - முன்னாள் மத்திய அமைச்சருக்கு முதல் முறையாக தடா நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்திருக்கிறது! தண்டனை பெற்றிருப்பவர் கல்பநாத் ராய்.

தண்டனை சாமானியமானதல்ல.... பத்து வருடக் கடுங்காவல்; பத்து லட்சம் ரூபாய் அபராதம்! அபராதம் செலுத்தாவிட்டால் மேலும் இரண்டாண்டு சிறைவாசம்!

நேர்மையாகவும் துணிச்சலுடனும் நீதி வழங்கியிருக்கும் தடா நீதிமன்ற நீதிபதி எஸ். என். திங்க்ரா பாராட்டுக்குரியவர். விழிப்புடன் செயல்பட்டுவரும் நீதித் துறையை மெச்சத் தோன்றுகிறது.

ஆனால், நாட்டின் அரசியல் நிலவரம்தான் சற்றேனும் மெச்சும்படியோ, பாராட்டும்படியோ இல்லை.

பம்பாய் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் தொடர்புடைய தாவூத் இப்ராஹிமின் கூட்டாளிகள் அரசு விடுதியில் தங்க ஏற்பாடு செய்து தந்திருக்கிறார் கல்பநாத்ராய். இந்த விஷயம்



அன்றைய பிரதமர் நரசிம்மராவின் கவனத்துக்கு வராமலிருக்க வாய்ப்பில்லை. அவர் தமது சகா மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டிருக்கிறார். ஒரு கடுமையான குற்றத்தினைச் செய்தவர் பேரில் உடனடி நடவடிக்கை எடுக்கும் தார்மீக பலம் இன்றித்தான் அன்றைய காங்கிரஸ் தலைமை இருந்திருக்கிறது.

பின்னால் சர்க்கரை பேர ஊழல் வெடித்தபோதுதான் வேறு வழியின்றி ராவ், கல்பநாத் ராயின் ராஜினாமாவைக் கோர நேர்ந்திருக்கிறது.

இன்றைக்கு மட்டும் என்ன...? பீஹார் மாட்டுத் தீவன ஊழலில் கழுத்தளவு மூழ்கிக் கிடக்கும் முதல்வர் லல்லு பிரசாத் யாதவைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கொண்டாடுகிறார் பிரதமர் தேவேகௌடா. ஒரு பக்கம் ஊழல் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடக்கிறது; மறுபக்கம் 'லல்லு நடத்திய ஏழைகள் மாநாடு ஒரு மகா யக்ஞம்' என்று வர்ணிக்கிறார் பிரதமர். 'லல்லுவின் எதிர்ப்பாளர்கள் ஏழைகளின் எதிரிகள்!' என்று எச்சரிக்கிறார்!

குற்றவாளிகளுக்காக வாதாடி, அவர்களின் செயல்களை நியாயப்படுத்துவது என்பது, எல்லா அரசியல் கட்சிகளுக்குமே 'பண்பாடாகி' விட்டது.

இன்னும் ஒரு படி மேலே போய் கிரிமினல் குற்றவாளிகளுக்கும் மத வெறியர்களுக்கும் தேர்தல் டிக்கெட் கூட தரப்படுகிறது.

கட்சிப் பாகுபாடு இன்றி அனைத்து அரசியல்வாதிகளிடையேயும் ஊடுருவியிருக்கும் இந்தச் சீர்கேடு, வேலிக் கம்புகளை உள்ளூர செல்லரிக்க விட்டு பலவீனப்படுத்தியது போன்றதாகும். நாட்டின் பாதுகாப்புக்கே இதனால் ஆபத்து.

பொருளாதார தாராளமயமாக்கலோ, தொழில்நுட்ப வளர்ச்சியோ, மக்களின் உழைப்போ பெற்றுத்தரக்கூடிய மேன்மைகளை, அரசியல்வாதிகளின் இத்தகைய குற்றங்கள் பயனற்றுப் போகச் செய்துவிடும்.

தேரோட்டம்-12

சிகரத்தின்

'நாம் இருவர்' வெளியாகி, பெருவெற்றி பெற்ற நேரம். அந்தப் படத் தயாரிப்பில் சம்பந்தப் பட்ட அனைவருக்குமே ஒரு பொற்காலத்தை உருவாக்கித் தந்தது. படத்தில் கிடைத்த லாபத்தில் ஏவி.எம். அவர்கள் ஸ்டுடியோ கட்டினார்: பாங்கர் சண்முகம் பிள்ளையாக நடித்த எனக்கு நிறைய பட வாய்ப்புகள் வந்து குவியத் தொடங்கின. பிற நடிக நடிகையருக்கும் ஏரான படங்கள் புக் ஆகின. ஹீரோவாக நடித்த டி.ஆர். மகாலிங்கத்துக்கு அச்சமயம் ஓர் அழகிய ஆண் குழந்தை பிறக்க, சந்தோஷத்தில், அக் குழந்தைக்கு அப் படத்தில் தாம் ஏற்ற 'சுகுமாரன்' என்ற பெயரையே வைத்தார்.

அத்தோடு மட்டுமல்ல; குழந்தை பிறந்ததைக் கொண்டாடும் வகையில் சோழவந்தானில் ஒரு பெரிய விழாவையே ஏற்பாடு செய்திருந்தார் மகாலிங்கம்! ஒரு படத்தின் வெள்ளிவிழா போல, அத்தனை கோலாகலம் அங்கே!

எத்தனை தயாரிப்பாளர்கள்! இயக்குநர்கள்! நடிக – நடிகையர்! கலை வித்தகர்கள்! முக்கியப் பிரமுகர்கள்!

அந்த விழாவில் கலந்து கொண்டு சென்னை திரும்பியதுதான் தாமதம். சேலத்திலிருந்து 'மேக்-அப்' பாஸ்கரன் என்ற தயாரிப்பாளர் என்னைத் தேடி வந்தார்.

நாம் இருவரில் என் நடிப்பைக் கண்டு மிகவும் வியந்ததாகவும் தொடர்ந்து அவர் எடுக்கவிருக்கும் 'சொர்க்கத்தில் காந்தி' என்ற படத்தில் நான் நடிக்க வேண்டும் என்றும் கேட்டார். நான் உடனே சேலம் புறப்பட வேண்டும் என்றும் சொன்னார்.

ஒரு கலைஞனுக்குப் பாராட்டும் அடுத்தடுத்துக் கிடைக்கிற வாய்ப்புகளும் எத்தனை உற்சாகம் தரக்கூடும் என்று இலேசில் சொல்லி விட முடியாது. மிகுந்த சந்தோஷத்துடன் நான் நடிப்பதாக ஒப்புக் கொண்டு சேலம் புறப் பட்டேன். என் சந்தோஷத்துக்கு இன்னொரு காரணம், அந்தப் படத்தில் நான் மட்டு



மில்லை; என் நண்பர்களான டி.கே. ராமச்சந்திரன், சாய்ராம் ஆகியோரும் இருந்ததுதான்!

சேலத்தில் திரு. பாஸ்கரன் அவர்களின்

நாம் இருவரில் என் கிழவேஷத்தைப் பார்த்துவிட்டு எனக்கு சுமார் அறுபது வயது இருக்கும் என்று டி.ஆர். சுந்தரம் நினைத்தாராம்.. என்னை நேரில் பார்த்ததும் ஆச்சர யப்பட்டவர், அப்போதும் என்னை 'அண்ணே, அண்ணே' என்றுதான் கூப்பிட்டார்! வேடிக்கை என்னவென்றால், என்னை விட, வயதில் மூத்தவரான டி.ஆர். ராமச்சந்திரனை அவர் 'தம்பி' என்று கூப்பிட்டதுதான்!

• டி.ஆர். சுந்தரம்



குகையில் சில நாட்கள்!

வி.கே. ராமசாமி

கம்பெனி இயங்கி வந்த இடம் ஒரு பெரிய பங்களா. நகருக்குச் சற்று ஒதுக்குப்புறமாக அமைந்திருந்த அமைதியான இடம் அது. பகலெல்லாம் பாடல் கம்போஸிங் நடக்கும். இரவில் மிக நிசப்தமாகி விடும். யாரும் நபர்கள் இருக்கிறார்களா என்பதே தெரியாத அளவுக்கு அமானுஷ்யமான அமைதி நிலவும், அங்கே.

வேளைக்குச் சாப்பாடு மட்டும் கிடைத்து விடும். மற்றபடி பாடல் கம்போஸிங்கைக் கேட்டுக் கொண்டு இருக்க வேண்டியதுதான்.

கதை தயாரா? வசனம் எழுதியாச்சா? ஷூட்டிங் எப்போது ஆரம்பிப்பார்கள்?

எதுவும் தெரியவில்லை.

ஒருநாள், இரண்டு நாள், ஒரு வாரம் என்று காலம் ஓடிக் கொண்டிருந்தது. ஷூட்டிங் மட்டும் ஆரம்பித்தபாடாக இல்லை!

எனக்குப் பொறுக்கவில்லை. எத்தனை நாள் இப்படி சும்மா வெட்டியாகப் பொழுதைக் கழிப்பது?

ஒருநாள் துணிந்து பாஸ்கரனிடம் கேட்டு விட்டேன் : "எப்பாங்க ஷூட்டிங்? படம் எடுக்கறீங்களா? இல்லையா?"

இப்போது, அப்போது என்று இழுத்தாரே தவிர உறுதியாக இந்தத் தேதியில் படம் ஆரம்பிப்பதாக அவரால் சொல்ல முடியவில்லை! காரணம் - பைனான்ஸியரிடமிருந்து பணம் கிடைக்காததுதான்.

எதிர்காலம் பற்றிய ஏராளக் கனவுகளுடனும் நிகழ்காலத் தேக்கம் குறித்தும் பேசியபடி நானும் டி.ஆர். ராமச்சந்திரனும் சாய்ராமும் மாலை வேளைகளில் சேலம் நகரில் உலா வருவோம்.

அப்படி ஒருநாள் வாக்கிங் போகையில் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸின் நிர்வாகி எம்.ஏ. வேணு எதிரே கையில் ஒரு நாய்க் குட்டியைப் பிடித்தபடி வந்து கொண்டிருந்தார். தற்செயலாக என்னைப் பார்த்தவர், "என்னண்ணே, இப்படிப் பண்ணிட்டீங்க? வராம போயிட்டீங்களே?" என்றார் திடீரென்று.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. இவர் என்ன சொல்கிறார்? எங்கு வராமல் போய் விட்டேன்? ஒன்றும் புரியவில்லை.

"புரியலீங்களே?" என்றேன். "லெட்டர் போட்டிருந்தோமில்லே. திகம்பர சாமியார் எடுத்திட்டிருக்கோம். சட்டநாதன் பிள்ளைன்னு ஒரு அற்புதமான வில்லன் வேஷம். நாம் இருவர் பார்த்துட்டு 'நம்ம படத்துல வர்ற வயசான வில்லன் கேரக்டருக்கு வி.கே. ராமசாமி பண்ணா பொருத்தமா இருக்கும்'னு முதலாளியே சொன்னார். 'உடனே கூப்பிடு வாங்க'ன்னு லெட்டர் போட்டிருந்தோமே!"

"ஐயோ, அப்படி எந்த லெட்டரும் வரலையே? நீங்க எந்த அட்ரஸுக்குப் போட்டீங்க?" என்றேன் பதைத்து.

"ஏவி.எம். அட்ரஸுக்குத்தான் போட்டேன்."

ஏவி.எம்முக்குக் கடிதம் வந்தால் அது கட்டாயம் கிடைத்து விடும். என்ன காரணத்தினாலோ அந்தக் கடிதம் எங்கோ தவறி இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு, "இப்ப என்னங்க செய்யறது?" என்றேன் கவலையுடன்.

டி.ஆர். சுந்





"தலைவர் நேரத்துக்கு தகுந்தாப்போல பதில் தர்றதில் கில்லாடி!"

"எப்படி சொல்றே?"

"எப்படி இவ்வளவு தங்கம் கிடைச்சது'ன்னு சி.பி.ஐ. கேட்டதுக்கு 'வாரப் பத்திரிகைகளில் வந்த சவரன் போட்டிகளில் கலந்து பரிசாக வாங்கியது'ன்னு சரடு விட்டிருக்கிறார்!"

— பாஸு

தரம் அவர்களின் மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களில் தலைகாட்டினால் கூடப் போதும்; அதுவே பெருமை என்று நடிகர்கள் எண்ணிய காலம் அது. அந்த நிறுவனத்தின் பெயரும் புகழும் அத்தகையது. அப்படிப்பட்ட நிறுவனம், தானே என்னை நடிக்கக் கூப்பிட்டு, கடிதம் எனக்குக் கிடைக்காமல் போனதென்றால் அதை விதி என்பதா? வேறு என்ன சொல்வது?

என்னிடமிருந்து பதில் இல்லாததால் டி. பாலசுப்ரமணியம் என்பவரை அந்த சட்டநாதன் பிள்ளை பாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்து விட்டதாக எம்.ஏ. வேணு சொன்னார்.

நான் சோர்ந்து போனேன். "அது சரி, நீங்க இப்ப எதுக்கு சேலம் வந்திருக்கீங்க?" என்று வேணு கேட்டார்.

'சொர்க்கத்தில் காந்தி' படத்தில் நடிக்க வந்து, ஷூட்டிங் ஆரம்பிக்காமல் சும்மா இருப்பதைச் சொன்னதும் வேணு சற்று யோசித்தார்.

"வில்லன் பாத்திரத்துக்கு வேறு நபர் ஏற்பாடு செய்தாயிற்று. வேறொரு சிறிய ரோல் இருக்கிறது. செய்கிறீர்களா?" என்றார்.

போதாதா?

சந்தோஷமாக ஒப்புக் கொண்டேன். என்னுடன் டி.ஆர். ஆருக்கும் ஒரு வேடம் கொடுத்தார்.

ஒரு தமாஷான விஷயம் ஞாபகம் வருகிறது. நாம் இருவரில் என் கிழவேஷத்தைப் பார்த்து விட்டு எனக்கு சுமார் அறுபது வயது இருக்கும் என்று டி.ஆர். சுந்தரம் நினைத்தாராம். வேணுவும் அவ்வண்ணமே நினைத்திருக்கிறார். என்னை நேரில் பார்த்ததும் ஆச்சர்யப்பட்டவர், அப்போதும் என்னை 'அண்ணே, அண்ணே' என்றுதான் கூப்பிட்டார்! வேடிக்கை என்னவென்றால், என்னை விட, வயதில் மூத்தவரான டி.ஆர். ராமச்சந்திரனை அவர் 'தம்பி' என்று கூப்பிட்டதுதான்!

மேக்-அப் பாஸ்கரனின் 'சொர்க்கத்தில் காந்தி' ஆரம்பிப்பதாகவே இல்லை. நானும் ராமச்சந்திரனும் அவரிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு, மாடர்ன் தியேட்டர்ஸின் ரிகர்ஸல் ஹாலுக்குக் கிளம்பிப் போனோம்.

'இகம்பரசாமியார்' படத்தின் கதை, அந்நாளில் புகழ்பெற்ற துப்பறியும் கதாசிரியர் வடுவூர் துரைசாமி ஐயங்காரு டையது. பொம்மன் – டி – இரானி என்பவர்தான் படத்தின் இயக்குநர். படம் ஆரம்பித்த சில நாட்களுள், என்ன காரணத் தாலோ இரானியை நீக்கி விட்டு, டி.ஆர். சுந்தரமே படத்தை இயக்கிக் கொண்டிருந்தார்.

டி.ஆர். சுந்தரம் பற்றிச் சொல்லும்போதே எனக்கு மயிர்க்கூச்செரிகிறது! ஏதோ வியாபார விஷயமாக வெளிநாடு சென்றவர் வியாபாரத்தை விட்டுவிட்டு, சினிமாவைக் கற்றுக் கொண்டு வந்து விட்டார் என்று சொல்வார்கள். அவரைப் போன்ற ஒரு மனிதரை நான் இதுவரை பார்த்ததில்லை. 'டிஸிப்ளின்' என்ற வார்த்தைக்கு ஒரு மனித உருவம் கொடுத்தால் அது டி.ஆர். சுந்தரமாக எழுந்து நிற்கும்.

'மிலிட்டரி ஒழுங்கு' என்பார்களே; அப்படி இருக்க வேண்டும் அவருக்கு! எத்தனை பெரிய நட்சத்திரமானாலும் சரி; மாடர்ன் தியேட்டர்ஸின் வாசல் படியை மிதித்து, உள்ளே நுழைந்து விட்டால், சிங்கத்தின் குகைக்குள் நுழைந்தது போலத்தான்.... அவர் சொன்னபடிதான் கேட்டாக வேண்டும். அங்கே அவர் வைத்ததுதான் சட்டம். அவர் கருத்துக்கு மாறாக ஒரு சொல் யாரும் பேசி விட முடியாது. உடனே கணக்கை செட்டில் செய்து அனுப்பி விடுவார்.

ஒழுங்கீனமாக ஒரு காரியம் அங்கே நடக்க முடியாது. மது – சிகரெட் – மங்கை... மூச்!

மாடர்ன் தியேட்டர்ஸ் ஒரு ராணுவக் கூடாரம்தான். ஒரே ஒரு வித்தியாசம் – சைவ ராணுவக் கூடாரம்!

அலுவலர்களாகட்டும் நடிகர்களாகட்டும், பிற தொழில்நுட்ப வல்லுநர்களாகட்டும் – அசைவ உணவைக் கனவில் கூட நினைக்க முடியாது அங்கே!

சுத்தமான சைவ உணவுதான் அங்கே சமைக்கப்படும். சாம்பார், ரசம், கூட்டு, பொறியல், அப்பளம், வறுவல், மோர் இவற்றுடன் ஒவ்வொருவருக்கும் தனித்தனி கேரியரில்

பெயர் எழுதி ஒட்டி, வேளைக்குச் சரியாக அனுப்பி விடுவார்கள். அசைவ விரும்பிகள் வெளியே சென்று சாப்பிட்டு வரவெல்லாம் முடியாது. டி.ஆர். எஸ்ஸின் சட்ட திட்டங்கள் அப்படி.

செட்டில் அவர் இருக்கிறாரா இல்லையா என்பது சுமார் ஐம்பதடி தூரத்திலேயே தெரிந்து விடும்.

மனித நடமாட்டமே இல்லாத ஆர்ட்டிக், அன்டார்ட்டிக் துருவப் பிரதேசங்களில் கூட ஏதாவது சப்தம் கேட்கலாம். சுந்தரம் செட்டுக்குள் இருந்தால் அங்கே மயான அமைதிதான் நிலவும்!

செட்டில் அவரைத் தவிர வேறு யாருக்கும் நாற்காலி இருக்காது. யாராக இருந்தாலும் நிற்கத்தான் வேண்டும்!

இப்போதெல்லாம் ஷூட்டிங்கில் யாராவது பேசினால் 'சைலன்ஸ்..' என்று தலைக்குத் தலை அலறுவார்கள். மாடர்ன் தியேட்டர்ஸில் விஷயமே வேறு. ஒரு சிறிய ஓசை வந்தால் போதும். 'கொ..ய..ட்' என்று ஒரு உறுமல் கிளம்பும் சுந்தரத்திடமிருந்து. மூச்சடைத்து விடும்!

அத்தனை ஒழுங்கு, கட்டுப்பாடு இருந்ததால்தான் தமிழகத்தில் தன்னிகரில்லாத படத் தயாரிப்பு நிறுவனமாக, தொடர்ந்து சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட படங்களை மாடர்ன் தியேட்டர்ஸால் எடுக்க முடிந்தது.

திரு. சுந்தரத்தின் ஒழுங்கு நடவடிக்கைகள் இந்த விஷயங்களில் மட்டும் அல்ல. பண விஷயத்தில் அவர் கடைப்பிடித்த கண்ணியமும் கட்டுப்பாடும் வேறெந்த தயாரிப்பாளரிடமும் எப்போதும் காணக்கிடைக்காதது!

வெளியே ஒரு நடிகர் எத்தனை லட்சம் வேண்டுமானாலும் வாங்கலாம். ஆனால் மாடர்ன் தியேட்டர்ஸைப் பொறுத்த வரை சுந்தரம் அவர்கள் நிர்ணயித்துச் சொல்லும் 'ரேட்'டுக்கு மேல் ஒரு பைசா கூடக் கேட்க முடியாது.

பேசிய பணத்தை இரண்டு தவணையிலோ மூன்று தவணையிலோ குறிப்பிட்ட தேதிக்குள் தந்து விடுவதாக முன்னதாகவே சொல்லி விடுவார்.

சொன்ன சொல் மாறாது. துல்லியமாகப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு விடும்!

'ஸ்டார் வேல்யூ' பற்றிக் கவலையே பட மாட்டார் சுந்தரம். 'யார் நடிக்கிறார்கள் என்பது முக்கியமல்ல; எப்படி நடிக்கிறார்கள் என்பதுதான் முக்கியம்' என்பார். சொன்னபடியே, எத்தனை கனிமன் ஆனாலும் அவர் கரம் பட்டு ஜொலிக்கச் செய்து விடுவார்!

மிகச் சிறிய வேடம்தான் என்றாலும், 'திகம்பர சாமியாரில் திரு டி.ஆர். சுந்தரம் அவர்களின் இயக்கத்தில் எனக்கு நடிக்கக் கிடைத்த வாய்ப்பு ஆயுசுக்கும் மறக்காது. அந்த ஒரு படமே எனக்கு நூறு படங்களில் நடித்தாற் போன்ற அனுபவத்தைக் கொடுத்தது.

பயந்து பயந்து, ஒவ்வொரு ஷாட்டையும் நடித்து முடித்து, 'சரியாக வந்திருக்கிறதா' என்று அவர் முகத்தில் திருப்தியைத் தேடித் தவித்த அந்த தினங்களை மறக்கவே முடியாது.

பின்னாளில் இதே டி.ஆர். சுந்தரம் ஒரு சந்தர்ப்பத்தில் என்னைத் தேடி என் அலுவலகத்துக்குத் தாமே வந்தார்.

அப்போது நான் பார்த்த சுந்தரம்...

(தொடரும்)

கூட்ட பழம்

"என்னோட அட்வைஸ் - ஒரு நடிகன் தப்பு செய்யலாம். அது தப்பேயில்லை. இரண்டு என்ன.. நிறைய பொண்ணுங்க கிட்டே சகவாசமே வைச்சுக்கலாம். அதையும்கூட தப்பு சொல்ல மாட்டேன். ஆனா என்ன பிரச்னை வந்தாலும் தன்னோட மனைவியையும், குழந்தைகளையும் விட்டு எந்தக் காலத்திலும் போகக் கூடாது..."

— ஜெமினி கணேசன்

கனிந்த சிந்தனை:

"மூக்கால் செஞ்சுரி போட்ட கிழங் கட்டைங்களை பேட்டி கண்டா இப்படித்தான் 'தப்பு-தப்பேயில்லை'ன்னு எதையாவது முன்னுக்குப் பின் முரணா உளறுவாங்க...' - இலேசான அனுதாபத்தோடு அலுத்துக் கொள்கிறார் ஒருவர்.

அனுதாபத்தை விணடிக்க வேண்டாம்! எழுபத்தேழு வயதிலும் ஜெமினி, காலில் வெள்ளிக் கொட்டிய சுறுசுறுப்போடு இருப்பதாக அவர் மனைவியே சான்றிதழ் கொடுத்திருக்கிறாரே! அப்பேர்ப்பட்ட சுறுசுறுப்பான மூளையின் கடைந்தெடுத்த சிந்தனையைக் கேள்வி கேட்க நாம் யார்!

'நாங்கள் கேட்காமல் யார் கேட்பதாம்? - இப்படியா பெண்மையை, பெண்களைக் கேவலப்படுத்துவது...'?' - மகளிர் அமைப்புகள் கொடி பிடிக்கவே தயாராகிவிட்டன!

ஷ்! அமைதியுறுங்கள் அம்மணிகளே! முதுபெரும் நடிகரின் தனிப்பெரும் சமநோக்கைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள் - சராசரி கணவன்மார்கள், கேவலம், ஒரு பெண்ணிடம் தான் நேர்மையாய் நடந்து கொள்ள முடியும். ஜெமினியின் 'அட்வைஸ்' கேட்பவர்களோ எண்ணற்ற பெண்களிடம் 'நேர்மையாய்'த் தப்பு செய்யலாமே!


'இப்படிக் கெட்டொழிய விரும்புவோருக்கு மனைவி, குழந்தை, குடும்பம் ஒரு கேடா...? குடும்ப அமைப்பையாவது கொச்சைப்படுத்தாமலிருக்கக் கூடாதா?' பழைமைவாதிகள் புலம்புகிறார்கள்!

இவர்களின் அறியாமையை என்ன சொல்வது! கசப்பென்று ஒன்று இருப்பதால்தானே இனிப்புக்கு மகிமை! ஜெமினி அட்வைஸ்படி நடக்கக்கூடிய ஆண்கள் இல்லாவிட்டால், மல்லிகைப்பூ வாங்கித் தந்து மோர் சாதம் சாப்பிட்டுக் குடும்ப அமைப்பைக் காப்பாற்றி வரும் அசடுகளுக்கு ஏதாவது மதிப்பு இருக்குமா!

'விட்டால் ஜெமினிக்கும் அவர் சிஷ்யர்களுக்கும் விழாவே எடுத்துடுவீங்களோ!' - 'கடயராக'ப் பேசுவதாக நினைத்துக் கொள்கிறார்கள் சில சில்மிஷப் பேர்வழிகள்!

கிண்டலே வேண்டாம்! ஏப்ரல் பத்தாம் தேதி ஜெமினிக்கும் வேறு சில திரையுலகத் திலகங்களுக்கும் விழா நடக்கவுள்ளதாம். அதிலேயே இந்தப் பாராட்டையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆஃப்டர் ஆல்... அவருடைய பிரத்யேக 'அட்வைஸ்' நடிகர்களுக்குத்தானே!

— சில்மிஷா


FOOL'S DAY
Look out for
'All Fool's Day'
Stories and poem
and lots more
in the
April '97 issue!
Rs. 5/-
GOKULAM
The monthly magazine for children
GOKULAM - EKKADUTHANGAL - CHENNAI - 97
AF
KALA

கலா- உலா :

ஓதுவார்;

அருள்மிகு கபாலீசுவரர் கோயில் சந்நதிகளில், பன்னிருதிருமுறை ஓதும் ஓதுவாமூர்த்தி நாகநாதனைச் சந்தித்தோம். வயது ஐம்பதுக்கும் குறைவாகவேதான் இருக்கும். கம்பீரமான உருவம். குரலில் இனிமை.

● *பரம்பரையாகவே, நீங்கள் ஓதுவார் குடும்பத்தில் பிறந்து ஓதுவா மூர்த்தியாக இங்கே இருக்கிறீர்களா?*

ஆமாம். நாங்கள் தேசிகர் பிரிவைச் சேர்ந்தவர்கள். தண்டபாணி தேசிகர் கேள்விப்பட்டிருப்பீர்களே? என் தகப்பனார் கந்தரேச தேசிகர். பாட்டனார் தியாக ராஜ தேசிகர். ஆனால் இந்தப் பரம்பரையைச் சேராதவர்களும் ஓதுவா மூர்த்திகளாய் இருக்கிறார்கள். தருமபுரம் சுவாமிநாதன், காஞ்சிபுரம் விநாயக முதலியார்...

● *தேவாரத்தை இப்படித்தான் பாடவேண்டும் என்று வழிமுறை ஏதாவது இருக்கிறதா?*

திருக்கோயில்களில் பாடும்போது மட்டும் ஒரு குறிப்பிட்ட ராகத்தில், காலங்காலமாகப் பாடப்படும் முறையில் தான் பாட வேண்டும். பிற மேடைகளில் மாற்றிப் பாடலாம். நானே, என் சீடர் 'ரைட்ஸ் இந்தியா' விசுவநாதனோடு வெவ்வேறு ராகங்களில், சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பாடினேன். ஆனால் கோயில் சந்நதிகளில் பாடும்போது அப்படிப் பாடுவது முறையல்ல என்றே கட்டளை போல் பின்பற்றப்பட்டு வருகிறது.

● *இதற்கென்று நீங்கள் அணியும் உடைகளும் மாறுமா?*

மேலே இருக்கும் அங்கவஸ்திரத்தை இடுப்பில் கட்டியிருப்போம். கழுத்தில் மாலையாக ருத்திராட்சம். நெற்றியில் திருநீறு. இந்தச் சிவச்சின்னம் அவசியம் இருக்க வேண்டும். பெரியவர்கள் அநுஷ்டானமாக, மார்பிலும் கைகளிலும் கூட திருநீறு பூசிக் கொள்ளுவார்கள்.



• நாகநாதன்



• திருமுறை வகுப்பு....

ஓதுவெக்கிறார்!

● *தேவாரம் இப்போது பாடப்படும் முறையில் கர்நாடக இசை ராகங்கள் இல்லையா?*

ஏன் இல்லாமல்? தேவாரம் பாடும் போது, காம்போதி, சங்கராபரணம், பந்து வராளி, பூபாளம், அடாணா, ஆரபி, சுத்த சாவேரி, நாதநாமக்ரியை, மாயா மாளவகௌளை, மத்தியமாவதி, யதுகுலகாம் போதி, சாமா, கேதார கௌளை என்று எல்லாமே கர்நாடக சங்கீத ராகங்கள்தான்.

● *திருவாசகத்தை ஒரு குறிப்பிட்ட ராகத்தில்தான் முழுக்க முழுக்கப் பாடுவார்களா?*

ஆமாம். திருவாசகம் முழுக்க மோகனத்தில்தான் பாடுவோம். அதுபோல 4, 5, 6 - ஆம் திருமுறைகளான திருத்தாண்டகத்தை ஹரி காம்போதியில்தான் பாடுவோம்!

● *ஓதுவார்களுக்கு இசைப் பயிற்சி தேவையா?*

கர்நாடக இசைப்பயிற்சி இருந்தால் நல்லது. வெளிமேடைகளில் பக்கவாத்தியங்களுடன் பாடும் வாய்ப்புகளில் குரல்வளத்தையும், திறமையையும் வைத்துக் கொண்டு நிறைய பேரை ஈர்க்க முடியும்.

● *உங்கள் குரு யார்? உங்கள் தகப்பனாரேதானா?*

ஆமாம். ஆனால் நான் முறையாக அவரிடம் உட்கார்ந்து பாடம் கேட்கவில்லை. அவர் பிற மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் போது கேட்டவை தான். நான் பள்ளிக்கூடம் முடித்து, வேலையில் சேர்ந்து, சில வருடங்கள் கழித்தே இந்தத் துறைக்கு வந்தேன். எனக்கு மூவாயிரம் பாடல்களுக்கு மேல் மனப்பாடம் உண்டு.

● *எங்கெங்கே பாடுவீர்கள்? எப்போது?*

காலை எட்டிலிருந்து ஒன்பதரை வரை விநாயகர், சுவாமி, சோமாஸ்கந்தர் (உற்சவ மூர்த்தி), அம்பாள், முருகன் சந்நதிகளில் பாடுவேன். உச்சி காலத்திலும் மறுபடி இதே ஐந்து சந்நதிகளில் பாடுவேன். சாயரட்சை நிறையச் சந்நதிகளில் பாடுவேன். சுவாமி சந்நதியில் மட்டும் பஞ்சபுராணம் எனப்படும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் எல்லாம் பாடுவேன்.

● *தமிழ்நாட்டில் எல்லாக் கோயில்களிலும் ஓதுவார்கள் இருக்கிறார்கள் அல்லவா?*

ஆமாம். ஒரு கால பூஜை செய்ய முடியாத சின்னஞ்சிறு கோயிலில் கூட இருப்பார்கள். அவர்கள் நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது. கபாலீசுவரர் போன்ற பெரிய கோயில்களில் அப்படி இல்லை.

● *இப்போது கர்நாடக இசைக் கச்சேரி மேடைகளில் தேவாரத்தை ராக ஆலாபனை செய்து, கீர்த்தனை போல பாடுகிறார்கள். குன்னக்குடி புதிதாக மெட்டமைத்து இளம் இசைக் கலைஞர்களை ஆர்க்கெஸ்ட்ரா பின்னணியுடன் பாடவைக்கத் தயார் செய்து கொண்டிருக்கிறார். இவற்றை ஓதுவார்கள் ஏற்பார்களா?*

பெரும்பாலான மக்களைச் சென்றடைய வேண்டும் என்றால் புதிய ராகங்களில், பக்கவாத்தியங்களுடன் பாடுவதில் தவறு இல்லை என்று என்னைப் போன்றவர்கள் வரவேற்கிறோம். முன்பு சொன்னது மாதிரி, திருக்கோயில் சந்நதிகளில் பாடும்போது மட்டும் பரம்பரையாகப் பாடப்படும் பத்ததியில் பாடுவதே ஏற்கக்கூடியது.

ஓதுவார் நாகநாதனிடம் அவர் வீட்டில் சிலர் தேவாரம் கற்றுக் கொள்ளுகிறார்கள். கலாக்ஷேத்திராவில் சங்கீதம் பயிலும் அமெரிக்க மாணவர் பரஞ்சோதி, வியாழன் - வெள்ளி காலை வேளைகளில் வந்து கற்றுக் கொள்ளுகிறார். "உச்சரிப்பில் பிழை காண முடியாது. இசை பயிலுவதால் குரலும் நன்றாகவே இருக்கிறது!" என்கிறார் நாகநாதன்.

பி.டி.சி. பஸ் டிரைவர் ஒருவர், பிரதோஷத்துக்குக் கோயிலுக்கு வந்தவர், நாகநாதனிடம் தேவாரம் கற்க விருப்பம் தெரிவித்திருக்கிறார். "அமாவாசை முடிந்து, வரச் சொல்லியிருக்கிறேன். அநேகமாக இந்த வாரமே ஆரம்பித்து விடுவேன்!" என்றார் நாகநாதன்.

சந்திப்பு : **சாருகேசி**

புகைப்படங்கள் : **ஸ்ரீஹரி**

மீண்டும் மத்யமர் கதைகள் - 12

சுஜாதா

மெரினா



①

“அன்புள்ள திரு. சுஜாதா அவர்களுக்கு,

வணக்கம். இது ஒரு எழுத்தாளருக்கு நான் எழுதும் முதல் கடிதம் என்பதால் முதலில் ஒரு சிறு அறிமுகம். என் பெயர் ஆர். மீனாட்சிசுந்தரம். ICWA இண்டர் முடித்து, சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தின் அக்கவுண்ட்ஸை கவனித்துக் கொண்டிருக்கும் 33 வயது இளைஞன்! எனது தந்தை தங்கள் கதைகளைப் பற்றி நிறையச் சொல்வார். அவர் பாதுகாத்து வைத்திருந்த 'நில்லுங்கள் ராஜாவே' என்கிற கதைதான் நான் படித்த முதல் சுஜாதா கதை. தொடர்ந்து படித்தும் வந்திருக்கிறேன்.

எப்போதும் தங்களுக்கு எழுத வேண்டும் என்று தோன்றியதில்லை. 'மீண்டும் மத்யமர்' என்ற பொதுத் தலைப்பின் கீழ் இதுவரை தாங்கள் எழுதிய பதினோரு கதைகளைப் படிக்கும் வரை. சில கதைகள் எனக்குப் பிடித்திருந்தன. தாங்கள் 'மத்யமர்' என்று குறிப்பிடுவது யாரை? அதற்கான தகுதி எனக்கு இருக்கிறதா? தெரியவில்லை. மாத வருமானத்தால் சொல்லவில்லை நீங்கள் என்பது தெரிகிறது. ஒருவித மனப்பாங்கைத்தான் குறிப்பிடுகிறீர்கள் என நினைக்கிறேன். 'மிடில் க்ளாஸ் மெண்டாலிட்டி' என்று இங்கிலீஷில் சொல்வதற்கு ஈடாக என்று எண்ணுகிறேன். அந்தத் தகுதியில் நான் ஒரு மிடில் க்ளாஸ் கணவன்தான். மனைவியிடம் கோபிக்கும், சண்டை போடும் சந்தோஷமாகப் பேசும் கணவன். டீவி பார்ப்பதில் ஈடுபாடுள்ளவன். அறிவு ஜீவிப் பாசாங்குகள் எதுவும் இல்லாதவன். வைரமுத்துவின் வரிகளுக்கு மயங்குகிறவன். பட்டுப் புடவை,

கடிதங்கள்



பாத்திரம், செனபாக்கியா வெட் கிரைண்டர் போட்டிகளில் கலந்து கொள்வேன். நான் இறந்து போனால் எந்தச் சரித்திரமும் எனக்கு இடம்கொடுக்காது. இப்படிப் பட்டவன்தானே உங்கள் மத்யமன்?

விட்டில் பூச்சி போல கொஞ்ச நேரம் பறந்து விட்டு மறையப் போகிற ஒரு undistinguished. எவ்வித சிறப்பும் இல்லாத ஆண்மகன்.

ஆனால் நான் சரித்திரத்தில் இடம்பெறுமாறு ஒரு காரியம் செய்துவிட்டேன். அதை உங்களிடம் சொல்லி எனக்கு உரிய இடத்தை எடுத்துக் கொள்ளவே, ஏன், பிடுங்கிக் கொள்ளவே இந்தக் கடிதம். இதைப் படித்தபின் நீங்கள் என் கதையை எழுதத் தீர்மானிக்கலாம். எனக்குச் சமீப காலத்தில் ஏற்பட்ட ஒரு மிகப் பெரிய, அதை என்னவென்று சொல்வது! அதிர்ச்சி என்பதா? ப்ரச்னை, மன உளைச்சல் என்பதா? சங்கடம் என்பதா? அதை நான சட [illegible] தான் இந்தக் கடிதத்தின் விஷயம். தற்கொ[illegible] நாடும் அளவுக்குச் சென்ற தீவிரமானது.

பொதுவாக இந்த வகைக் கடிதங்கள் உங்களுக்கு அவ்வப்போது வரும். 'இவைகளுக்கு நான் பதில் அளிப்பதே இல்லை. மற்ற பேரிடம் கதை கேட்டு அப்படியே எழுதுவதை நான் விரும்பாதவன். எனக்கு நான் கேட்கும் பார்க்கும் அனுபவிக்கும் சம்பவங்களின் ஒரு வினோதக் கலவையைத்தான் எழுத விருப்பம். வரிக்கு வரி மற்றொருவர் கதையை படியெடுக்க எனக்குப் பிரியமில்லை!' என்று நீங்கள் ஒருமுறை எழுதியிருக்கிறீர்கள். (நீங்கள் பெரிய பத்திரிகைகளில் எழுதியது அத்தனையும் படித்திருக்கிறேன். கணையாழி போன்ற பத்திரிகைகளை நான் படிப்பதில்லை.)

ஆனால் பதில் போடாவிட்டாலும் ஒருநாள் என்னைப் பார்க்க வருவீர்கள் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும். பீடிகை போதும் என எண்ணுகிறேன். இனி 'ஹிந்து' நாளேட்டின் இருபதாம் தேதி மூன்றாம் பக்கத்திலும் தினத்தந்தி, தினகரன், தினமலர், தினமணி போன்றவைகளில் முதல் பக்கத்திலும் ப்ரபரப்பாக வெளியான செய்தியைத் தாங்கள் பார்த்திருப்பீர்களோ அல்லவோ! 'Woman Gangraped' என்று 'ஹிந்து' Todays engagements அருகில் வெளி வந்திருந்தது. அந்தச் சம்பவத்தில் பலாத்காரம் செய்யப்பட்டு மனதிலும் உடலிலும் கலைக்கப்பட்டது என் மனைவி.

நீங்கள் இந்த அதிர்ச்சிக்குத் தயாராக இல்லை; தெரியும். அதற

காகத்தான் பலத்த பிடிகை! "ஒரு எழுத்தாளன்கிட்ட வாழ்க்கை சிக்கல்களுக்கு விடை கிடைக்கும்னு நீங்க எதிர்பார்த்தீங்கன்னா ஏமாற்றம்தான்"னு நீங்களே பேட்டியில் சொல்லியிருக்கிறீர்கள். அதனால் உங்களிடம் நான் விடை கேட்கவில்லை. விடை எனக்குப் புலப்பட்டு விட்டது.

விஷயம் ரொம்ப சிம்பிள் சார். என் மனைவியை இரண்டு பேரோ, மூன்று பேரோ (சரியாகச் சொல்ல மாட்டேன் என்கிறாள்) ரவுடிகள் பலாத்காரம் பண்ணி விட்டார்கள். அவளுடைய ஆபீஸில் ஓவர்டைம். பாழாப்போற ஓவர் டைம் பண்ணிக் கொண்டு இருக்கும் போது இந்த கோரச் சம்பவம் நடந்தது. அப்புறம் என்னுடைய 'மிடில் கிளாஸ்' மனது இவளை ஏத்துக்க மறுத்தது. டைவோர்ஸ் வரை போய், அதே சமயம் பாவம் அவ என்ன செய்வான்னு பச்சாதாபமும் மிஞ்சியது. இதான் என் தர்மசங்கடம்.

நான் ஒண்ணும் உத்தம புருஷன் இல்லை. ஒவ்வொருமுறை அவளைப் பார்க்கறப்ப, அவங்க தொட்ட கன்னம்தானே இது; அவங்க அணைச்ச உடம்புதானே இதுன்னு' விபரீதமான எண்ணங்கள்ளாம் முதல்ல தோணும். சைக்கியாட்ரிஸ்டைப் பார்த்தேன்.

விஜயராகவன்னு மாம்பலத்தில் இருக்காரே, அவரைப் பார்த்தேன். அவர் இதை ஒரு விபத்து போல எடுத்துக்கங்க. கார்ல அடிபடறதில்லையா, ஒரு கார் விபத்தில் அடிபட்டா என்ன செய்வீங்க? அந்த மாதிரி எடுத்துக்கங்கன்னாரு. முடியலை!

எப்படி சார்? திருமணம் என்பது பவித்ர மான உறவு. ஒருவனுக்கு ஒருத்தி என்கிற அஸ்திவாரத்தில அமைஞ்சது. சிறு வயசிலிருந்தே தேச்சுத் தேச்சு மனசுக்குள்ளே உருவேத்தப்பட்ட எண்ணத்தை ஒருநாளில் உதறி எறிஞ்சுட முடியுமா? என் ஒய்ஃப் இதை எப்படி எடுத்துக்கிட்டான்னு கேட்பீங்க! மௌனமா இருந்தா. அதைப் பத்தி பேச்செடுத்த போதெல்லாம் பக்கத்து ரூமுக்குப் போய்க் கதவைச் சாத்திக்கிடுவா. இல்லை, சாயங்கால வேளைகளில் அழுவா. அவ கூட முழுமையா இதை விவாதிச்சுத் தீர்வு காண முடியாத ஒரு நிலையில் இருந்தேன். நடந்ததைக் கொஞ்சம் விவரமாகவே சொல்றேன்.

உங்களுக்கு ஒண்ணும் இதிலே சொந்த ஆர்வமோ, எட்டிப் பாக்கிற கிறுக்குத்தனமோ இருக்காதுன்னு எண்ணிக்கிட்டுத்தான் இந்த அந்தரங்க விவரங்களை உங்களுக்கு (உங்க வாசகர்களுக்கும்) சொல்றேன்.


அவ ஒரு தனியார் மல்ட்டி நேஷனல் கம்பெனில வேலை பார்க்கறா. நீங்க இதை எழுதினா பேரை மாத்தித்தான் எழுதணும். அதனால கம்பெனி பேர் குறிப்பிட மாட்டேன். பெரிய கம்பெனி. பம்பாய் பார்சிக்காரங்க ஓனர்ஸ். அவங்க தயாரிக்காத அல்லது விற்காத பொருள்கள் இல்லை. அலமாரில இருந்து சோப்பு, ஷாம்பு, காஸ்மெட்டிக்ஸ், ஸ்கூட்டர் கம்ப்யூட்டர் சமாசாரம் அத்தனையும் விக்கறாங்க. நிறைய டர்ன் ஓவர். நல்ல சம்பளம், போனஸ்.

இவங்களுக்கு ஒருமுறை நான் ஆடிட் போறப்ப பேச்சுவாக்கில் ஒரு ரிசப்ஷனிஸ்ட்-கம் டெலக்ஸ் ஆப்பரேட்டர் வேக்கன்சி இருக்கறதா தெரிஞ்சு என் மனைவி சும்மாதானே வீட்டில இருக்கிறா... குழந்தை இல்லை... அது வரை இல்லை... போய்ட்டு வான்னு சொன்னேன். இண்டர்வ்யூவில் கிடைச்சுருச்சு. சம்பளமும் நல்ல சம்பளம். எளிசான வேலை. "ஒருநாளைக்கு முப்பது தடவை ஸ்மைல் பண்ணணும். அவ்வளவுதான்"ம்பா. இனிமையா பேசணும். கூரியர் தபால் வரதையெல்லாம் கையெழுத்துப் போட்டு வாங்கிக்கணும். மூணு நாலு டெலக்ஸ் அனுப்பணும். அப்பப்ப ஜெராக்ஸ் ஆப்பரேட்டர் வரலைன்னா மானேஜருக்கு காப்பி எடுத்துக் கொடுக்கணும். அதுலதான் வந்தது வினை.

வெள்ளிக்கிழமை மாலை வேளையில மானேஜர் ஒரு முக்கியமான ரிப்போர்ட்டை ஜெராக்ஸ் எடுத்துக் கொடுத்துட்டுப் போன்னு சொல்லிருக்கார். அன்னிக்கிப் பாத்து பவர் கட்டு. ஐந்து மணிக்குள்ள முடிக்க முடியலை. கரண்ட் வரவரைக்கும் வெய்ட் பண்ணிட்டு இருந்துட்டு, வேலையை முடிச்சுட்டு புறப்படறப்ப ஏழு மணி.

"ஆச்சரியமா இருக்கே... உங்க வீட்டுல பூனைய எலி துரத்திக்கிட்டுப் போகுதே, எப்படி?"
"பூனைய நான் வளர்க்கிறேன். எலியை என் மனைவி வளர்க்கிறாளே...!"
– சக்தி. சரவணன்





"என்ன சார் நீங்க மட்டும் வந்திருக்கீங்க! வீட்டுலேயும் அழைச்சிட்டு வாங்கன்னு படிச்சுப் படிச்சு சொன்னேனே."
"ஹி....ஹி... அவ போன வாரம்தான் புது செருப்பு வாங்கினா..."
- சீர்காழி வி. ரேவதி

என் மனைவி கொஞ்சம் தளதளன்னு இருப்பா. அடக்கமா டிரஸ் பண்ணிக்கன்னு நிறைய தடவை சொல்லிருக்கேன். ரிசப்ஷன் ட்யூட்டில கொஞ்சம் பளிச்சுன்னு ட்ரஸ் பண்ணிக்க வேண்டிருக்கிறதுன்னு திருத்தாம விட்டுட்டேன். அவங்க ஆபீஸ்ல கேஷுவல் லேபர்ங்க உண்டு. ஸ்திரமான வேலையில்லாத சின்னப் பசங்க, தினக்கூலில. ஆபீஸ் முடிஞ்சப்புறம் க்ளீன் பண்ண வருவாங்க. அவங்க ரெண்டு பேர் வந்திருக்காங்க. இவ பேப்பர்ங்களை அடுக்கிட்டே இருக்கறப்ப, அவ தனியா இருக்கறதைப் பார்த்துட்டு அவளை மறிச்சு, நேரா ரிக்கார்டு ரூம்ல தள்ளி, கதவைச் சார்த்தி, ரெண்டு பேரும் மாத்தி மாத்தி அவளைப் பலாத்காரம் பண்ணிருக்காங்க. மூணாவது ஒருத்தன் இருந்திருக்கானான்னு அதிர்ச்சியில இவளுக்குச் சரியாத் தெரியலை. வாயப் பொத்தி மார்மேல முழங்காலை வைத்து அழுத்தி, உடைகளை உயர்த்தி...

அதுக்கப்புறம் சொல்ல விரும்பலை. அப்படியே அவளை விட்டுட்டுப் போய்ட்டாங்க. கடிச்சுக் கிழிச்சு எதிர்த்துருக்கா. சாரியெல்லாம் ரத்தம்.

இது நடந்தது ஏழரை மணி. இவ போட்ட கூக்குரல் ட்ராபிக் சப்தத்தில் யாருக்கும் கேக்கலை. கேட்டிருந்தாலும் மதிக்கலை. பக்கத்திலேயே ஒரு கூரியர் கம்பெனி. அவங்க மூணு பேர் தபால் பிரிச்சு பைகளைக் கட்டிக் கிட்டு இருந்திருக்காங்க. அவங்க, என்னவோ டீவில தான் சப்தம் வருதுன்னு கவனிக்கலை.

எட்டு மணி வரை நான் ஆபீஸ்லிருந்தேன். அவளை என் மோட்டார் சைக்கிள்ள பிக்-அப் பண்ணிக்கும்படி போன் பண்ணிருந்தா. நான் போறேன்... மேசையெல்லாம் சிதறிருக்கு. காப்பியிங் மிஷினுடைய 'டோனர்' கொட்டி முகமெல்லாம் கறுப்பு. ரிக்கார்டு ரூம்லருந்து முனகல் கேக்கறது. போய்ப் பார்த்தா... (சில விவரங்கள் விடப்பட்டிருக்கின்றன - சுஜாதா)

முதல்ல லேடி டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போனேன். அவங்க எதும் விபரீதமா நடக்கலைன்னுதான் சொன்னாங்க. கேட்ட கேள்வி எதுக்கும் அவளால பதில் சொல்ல முடியலை. அந்த டாக்டர் ரொம்ப கோவிச்சுக்கிட்டாங்க. பாதுகாப்பு இல்லாம அவளை ஓவர்டைம் பண்ணச் சொன்ன மானேஜருக்கு போன் போட்டுக் கூப்பிட்டாங்க. எனக்கும் என்ன செய்யறது. இந்த மாதிரி சம்பவத்தை எப்படி அணுகறதுன்னு யோசனையே இல்லை. பிரமிப்பிலதான் இருந்தேன். மனசில, 'இனிமே என்ன? இனிமே என்ன?'ங்கற கேள்விதான் பெரிசா விசுவரூபம் எடுத்தது.

"அவங்க வந்து, அவங்க வந்து... என்னை என்னை..." இவ்வளவுதான் சொல்றா. நந்தகுமார்னு மானேஜர் வந்து ரொம்ப வருத்தப்பட்டார். உடனே போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்தார். இதுக்கு பப்ளிசிட்டி இல்லாம பார்த்துக்கறேன்னு சொன்னார். ஆனா நடந்தது வேற. உலகத்தில உள்ள அத்தனை பத்திரிகைக்காரங்களும் வந்துட்டாங்க. எங்கயோ அவங்களுக்கு மூக்கில வேர்க்கறது. இந்த மாதிரி சம்பவங்கள் எல்லாம் அவங்களுக்கு அல்வா மாதிரி. அவளைப் படம் எடுக்காம காப்பாத்தறதுக்குள்ள எனக்கு அப்படியே நரம்பெல்லாம் தளர்ந்து போச்சு. ஒருத்தன் காமிராவைப் பிடுங்கி பிலிமை பிச்சுப் போட்டேன். இவங்களுக்கெல்லாம் சம்பவத்தின் பரபரப்புத்தான் முக்கியமே தவிர, அதில இருந்த பரிதாபமோ, அதனால் எங்களுடைய வாழ்க்கை எத்தனை சிதறிப் போவுது - உடைஞ்சு போன வாழ்க்கையை நாங்க எப்படி பொறுக்கி ஒட்ட வைக்கப் போறோம்ங்கற எதைப் பத்தியும் கவலை இல்லாம பெரிசா எட்லைன் நியூஸ் போட்டுட்டாங்க.

என்னால - எங்களால முதல்ல செய்ய முடிஞ்சது, கோத்தகிரியில அவ அத்தை வீடு. அங்க போய் லீவு எடுத்துக்கிட்டு பரபரப்பு அடங்கியதும் வந்தோம்.

அந்த பையன்களைக் கண்டுபிடிச்சுட்டாங்க. என் மனைவியை அடையாளம் காட்டச் சொன்னாங்க. நீங்க 'இருள் வரும் நேரம்'ல எழுதின மாதிரி எந்த வக்கீலும் எங்களை வந்து தொந்தரவு செய்யலை. போலீஸ் ஸ்டேஷன் போய், அவங்களை தெளிவா அடையாளம் காட்ட முடிஞ்சது. திருதிருன்னு முழிச்சுக்

கிட்டு. ஒத்தனுக்கு பத்தொம்பது வயசு இருக்கும். மத்தவனுக்கு இருபத்தஞ்சு. இன்னொருத்தனுக்கு மீசை கூட முளைக்கலை.

அவங்களுடைய அப்பா, அம்மா வந்து 'நல்லாத்தானேங்க வளர்த்தோம்' என்று அங்கலாய்த்தது எல்லாம் எனக்கு தாற்காலிகமான ஆரவாரங்கள்தான். இந்தச் சம்பவத்தின் பின்னால் என் மனைவிக்கும் எனக்கும் என்ன உறவு தொடர்வதுங்கறதுதான் பெரிய பிரச்னையாயிருந்தது. நடந்ததுக்கு யாரைக் குற்றம் சொல்றது? விதியையா? சமூகத்தையா? எப்படியும் என் மனைவியைக் குற்றம் சொல்ல முடியலை.

இருந்தும் தனி ரூம்ல படுத்துக்க விரும்பினேன். அவ மனசை அது என்ன பாடு படுத்தியிருக்கும்னு தெரியாமல் கேனத்தனமா நடந்துண்டேன். ஆண் என்கிற ஈகோ காயம் பட்டு விட்டது. எதுக்கெடுத்தாலும் அவ மேல எரிஞ்சு விழுந்தேன். 'பாத்தா வத்தக்குச்சி மாதிரி இருந்திருக்கான். மண்டைல ஒரு பேப்பர் வெய்ட்டையாவது எடுத்துப் போடறது. பேப்பர் கத்தியை எடுத்துக் குத்த வேண்டியது தானே. 'பே'ன்னு பாத்துக்கிட்டு இருந்தியா...' இப்படியெல்லாம் அவகிட்ட பேச ஆரம்பிச்சேன்.

லேடி டாக்டர், 'இசகுபிசகா எதும் நடக்கலை; சேதமில்லை. முழங்கால்ல கொஞ்சம் சிராய்ப்பு. அரைகுறையா முயற்சி பண்ணிருக்காங்க. ஆளரவம் கேட்டு ஓடிப் போயிருக்காங்க'ன்னு சொன்னாலும்...

உடல் காயத்தை விட மனக்காயம்தான் அதிகம். துவங்கினது என் உள்மனப் போராட்டம். அவளுக்கு ஆறுதல் சொல்றதுக்குப் பதிலா அவளை எப்ப அணுகறபோதும் நான் அவளைப் பார்க்கிற பார்வையே வேற மாதிரி ஆய்டுத்து.

ஒரு மனசு அவளை 'டீஸ்' பண்ணக் கூடாது; ஆதரவா, ஆறுதலா ஏதாவது பேசுன்னு சொன்னாலும் மற்றொரு நெருப்பு, மனசு சந்தர்ப்பம் கிடைச்சபோதெல்லாம் அவளை சீண்டிக் கொண்டே இருந்தது.

அவளுக்கே ஒருநாள் தாங்காம "ஆமாம் நான் களங்கப்பட்டுட்டேன். என்னைப் பிடிக்கலைன்னா தள்ளி வெச்சுருங்க. இல்லை நான் கோத்தகிரி போறேன், எங்கயாவது" என்று சொல்லி புறப்பட்டுப் போய்ட்டா. தனிமையில இருக்கறப்ப மனோகரன்னு ஒருத்தரை சந்திச்சேன். நிறைய படிச்சவர். அவர் கீதை படிக்கச் சொன்னார். உங்க "எப்போதும் பெண்" புத்தகத்தையும் படிச்சேன்.

அதில் சொல்லிருக்கிற ஒரு கருத்து என்னைப் பாதிச்சது. 'ஒரு பெண்ணுக்கு மண வறையில் கணவனிடம் நிகழ்வது கூட ஒரு பலாத்காரம்தான். அவளை அறியாச் சிறுமியிலிருந்து ஒரு மனைவியாக மாற்றும் செயலில், அடிப்படையாக அவள் கன்னிமையை உடைக்கும் ஒரு பலாத்காரம் நிகழத்தான் செய்கிறது. அது மெல்ல மெல்ல நிகழ்வதில்லை; கொடூரமாக ஒரு திரை கிழிக்கப்படும் போது அவள் ஒரு புதிய உலகிற்குள் திணிக்கப்படுகிறாள்' என்று எழுதிருந்தீங்க. பெண், பெண்மை என்பதன் மேல் ஒரு பச்சாதாபம் ஏற்பட்டது. கீதையில் பல விஷயங்கள் எனக்குப் புரியவில்லை. இருந்தும் நிஷ்காம கர்மா என்கிற தத்துவம் மட்டும் எனக்கு ஒருவிதமான நிம்மதி தந்தது.

மிகுந்த சிந்தனைக்குப் பின் திருவிழாக் கூட்டத்தில் இடிபடும் போது என் மனைவி மேல் பிறர் பட்டதில்லையா, தொட்டதில்லையா, டாக்டர் தொடறதில்லையா, தம்பி, அவ கஸின்ஸ் எல்லாம் தொட்டதில்லையா? மூன்று பேர் அவளைத் தாக்கினதால் அவள் உள் மனத்தின் புனிதம் எந்தவிதத்தில் பாதிக்கப் படுகிறது? அவள் அழகு குறைந்து விட்டதா? கண்களில் ஒளிமங்கி விட்டதா? சிக்கலான சமூக அமைப்பில், நகர வாழ்க்கைக்கும் நெருக்கடிக்கும் ஏழைமைக்கும் கொடுக்கும் விலை இது. சம்பவம் திரும்ப நிகழாமல் பாதுகாக்க வேண்டும், அவ்வளவுதான். இதனால் இவளுடன் நான் கழித்த அத்தனை இன்பமான வேளைகளை மொத்தமாக ஒதுக்கிவிட்டு என்னை நானே வருத்திக் கொள்வது விவேகமல்ல; அறியாமை என்று அவளை கோத்தகிரி போய் திரும்ப அழைத்து, ஒரு நீண்ட மௌன



"நம்ம பால்காரர் கோபப்படுற மாதிரி அவர்கிட்ட நீ என்ன கேட்ட?"

"உங்களுக்கு மட்டும் இவ்வளவு தண்ணீர் எங்கேயிருந்து கிடைக்குது'ன்னு!"

- குட்டி மு. வெங்கடேசன்

மான நடைக்கு அப்புறம், "போனால் போகிறது. இனிமே நான் அதைப் பத்திப் பேசவே மாட்டேன். என் தாய் மேல் ஆணை" என்று பெரிசாகச் சொன்னேன்.

"என்னை மன்னிச்சுடுங்க" என்றாள்.

"பைத்தியமே மன்னிக்க வேண்டியது நீ. என்னை. நான்தான் கிறுக்குத்தனமா நடந்துக்கிட்டேன்" என்றேன்.

என் மனைவிக்கு நிகழ்ந்தது களங்கமல்ல; ஒரு விபத்து என்ற ஞானோதயம் வரும் வரை நான் ஒரு மத்யமனாக இருந்தேன். இப்போது? இதைத்தான் உங்களிடம் கேட்கத் தோன்றியது.

இப்படிக்கு,
அன்புடன்
ஆர். மீனாட்சி சுந்தரம்.

②

சென்னை – 18
10.3.97

அன்புள்ள மீனாட்சி சுந்தரம்,

தங்கள் கடிதம் கிடைத்தது. நிச்சயமாகத் தாங்கள் செய்த காரியம் தங்கள் மனைவிக்கு நிகழ்ந்த விபத்தைப் பற்றி தங்களுக்கு ஏற்பட்ட விவேகம். தங்களை 'மத்யமர்' அல்ல உத்தமர் என்று காட்டுகிறது. எல்லா சாதாரண மனிதர்களிடமும் சில அசாதாரண குணங்கள் எதிர்பாராமல் வெளிப்படுவதை நான் அறிவேன். அவைகளைச் சிறைப்பிடித்து எழுதுவது ஒரு எழுத்தாளனின் முக்கியமான பணி என்று கருதுகிறேன். உங்கள் கடிதம் அந்தப் பணியை எனக்கு மிகத் தெளிவாக ஆக்கிவிட்டது. தங்கள் கடிதத்தை அப்படியே – ஓரிரு காட்டமான வரிகளை மட்டும் நீக்கி விட்டுப் பிரசுரிக்க விரும்புகிறேன். தங்களிடமிருந்து ஆட்சேபம் இல்லாதபட்சத்தில் எல்லா கணவர்களுக்கும் ஓர் உதாரண புருஷராக உங்களை அந்தக் கடிதம் காட்டுகிறது.

அன்புடன்,
சுஜாதா.

③

திரு. சுஜாதா என்கிற ரைட்டருக்கு,


தங்களுக்கு கடுதாசி எழுதிய மீனாட்சி சுந்தரத்தின் மனைவி பவித்ரா எழுதிக் கொள்வது.

நீங்கள் என் புருஷனுக்கு எழுதின கடிதம் பார்த்தேன். அதில் அவரை ஓவராகப் புகழ்ந்திருந்தீங்க. அவர் செய்த காரியம் ஒரு உத்தம புருஷனின் காரியம் என்று எழுதியிருந்ததைப் படித்தேன்.

அந்தக் கடுதாசை பிரசுரம் பண்ணா, மத்த புருஷர்களுக்கு அது வழிகாட்டியாக இருக்குன்னும் எழுதியிருந்தீர்கள். மன்னிக்கவும். எனக்குத் தமிழ் அத்தனை தெளிவாக வராது. முதல் எட்டு கிளாஸ் நான் கன்னடத்தில படிச்சேன். அப்புறம்தான் தமிழ். அத்தனை அழகாக எழுத வராது. இவர் நல்லா எழுதுவார்.

என் புருஷன் உங்களுக்கு என்ன எழுதினாரோ தெரியல்லை. உங்க கடிதம் அகஸ்மாத்தா அவர் ஜேபில இருந்ததை எடுத்துப் படிக்க நேர்ந்தது.

அவருடைய கடுதாசியை பிரசுரம் பண்ணும் பட்சத்தில் என் இந்தக் கடுதாசியையும் பிரசுரம் பண்ண வேண்டும். அதுவே என்



தாழ்மையான விநந்தி.

எனக்கு நடந்தது விபத்து என்று என்னென்னவோ எழுதியிருக்கிறீர்கள். அவர் என்ன எழுதினாரோ தெரியாது. நடந்தது இதுதான். நான் வெள்ளிக்கிழமை ஆபீசில் ஓ.டி. பண்ணும்போது இரண்டு பேர் என்னை ரேப் பண்ணப் பார்த்தாங்க. நான் அவர்களை ஆபீஸ் குப்பைத் தொட்டியை எடுத்துக் கவிழ்த்து அடித்து கூலர்ல போட்டேன். அவர்கள் என் சொக்காயை (பிளவுசை) கிழிக்க முயற்சி பண்ணார்கள். பக்கத்துல இருந்த கூரியர் கம்பெனிகாரர்கள் சத்தம் கேட்டு ஓடிவந்து, அவங்களில் ஒத்தனை பிடிச்சாங்க. மத்தவன் ஓடிப் போய்ட்டான். நான் சுதாரித்துக் கொண்டு ஒரு தம்ளர் தண்ணி குடிச்சுட்டு, என் புருசனுக்கு போன் போட்டு வரவழைத்தேன். அவர் வந்

ததும் பூமிக்கும் விட்டத்துக்கும் எகிறினார். 'கூப்டு மானேஜரை. லேடி டாக்டர்கிட்ட காட்டணும். போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுக்கணும்' என்றெல்லாம் பெரிசாக சப்தம் போட்டார். அந்த ராத்திரிலயே எல்லா பிரஸ்காரங்களையும் கூப்பிட்டனுப்பிச்சார். போட்டோ எல்லாம் எடுக்க விட்டார். ஒண்ணுமே விபரீதமா நடக்கலைன்னு சொன்னாலும் அவர் கேட்கவில்லை. 'எங்கெல்லாம் தொட்டான், என்னவெல்லாம் செய்தான்?' என்று அசிங்கமாக எல்லார் முன்னாலும் கேள்வி கேட்டார். மானேஜர் நந்தகுமார் வந்ததும் பெரிசாக சண்டை போட்டார்.

எனக்கு அப்போதான் சந்தேகம் வந்தது. ஒருவேளை இது எல்லாமே அவர் சூழ்ச்சியா இருக்குமோ என்று கூடத் தோணிடிச்சு. அவ்வளவு வெறுப்பேத்தினார். ஒருமுறை கோபத்தில கேட்கக் கூட கேட்டுட்டேன். என்னை டிவோர்ஸ் பண்ணணும்னு குதித்தார். ஏதோ மறுகல்யாணத்துக்கு அடி போடுறார்னு நான் எதும் பேசாம கோத்தகிரிக்கு - எங்க அத்தை வீட்டுக்குப் போயிட்டேன்.

சின்ன விஷயத்தைப் போய் இப்படிப் பெரிசுபடுத்துகிறாரே என்று எனக்குப் புரியவில்லை.

அப்புறம் திடீர் என்று ஒருநாள் கோத்தகிரிக்கு வந்தார். வந்து என்னை மன்னிச்சுரு. நான் செய்தது பூர்த்தி எல்லாம் தப்பு. உனக்கு நேர்ந்தது ஒரு விபத்துதான். அதற்கான மனப்பக்குவம் எனக்கு இதுவரை இல்லை. இப்போ கீதை படிச்சேன். சுஜாதா புக்ஸ் படிச்சேன். தெளிஞ்சுட்டேன். திருந்திட்டேன்'னு என்ன என்னவோ சமாதானம் சொல்லி வீட்டுக்கு பிடிவாதமாகக் கூட்டி வந்து. இனிமே அந்தப் பேச்சையே எடுக்க மாட்டேன்னு கைல அடிச்சு அம்மா படத்தின் மேல சத்தியம் பண்ணிச் சொன்னார். மெட்ராஸ் திரும்பினதும் தான் இவருடைய மனசு மாறினதுக்குக் காரணம் புரிஞ்சது.

எங்க ஆபீஸ் மானேஜர் நந்தகுமார் ரொம்ப நல்லவர். அவர் எனது மனவருத்தத்துக்கு நெகிழ்ந்து போய், மேலிடத்துக்குச் சிபாரிசு பண்ணி, பெரிசா லெட்டர் போட்டு ஏழு லட்ச ரூபாய் 'எக்ஸ்க்ரேஷியா பேமெண்ட் ஃபர் மெண்டல் அகனி'ன்னு காம்பென்சேஷன் சாங்ஷன் வாங்கி, எங்க எம்.டி. ஆதித்யா தஸ்தூர் கையெழுத்துப் போட்டு, அருமையா ஒரு லெட்டரும் எம் பேருக்கு செக்கும் வந்தது.

அதான் அவர் மனமாற்றத்துக்குக் காரணம்.

ஆகவே, அவருடைய லெட்டரைப் போடுவதா இருந்தா இதையும் போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
எம். பவித்ரா

('மீண்டும் மத்யமர்' கதைகள் முற்றும்)

சுனிதாவின் பாகி நிபா!

நிபா நம்பூதிரி. வயது 23.

யானை மேல் இவர் உட்கார்ந்து கொண்டிருப்பது ஜாலிக்காக அல்ல. யானைப் பாகியாகப் (பெண்பால்) பணிபுரியும் பெண் இவர். கேரளாவில் திருச்சூருக்குப் பக்கத்தில் உள்ள கோடநாடு காட்டிலாகா யானை கேம்ப்பில் இருக்கிறார் நிபா.

முறையான பயிற்சி பெற்ற பின்னர் இந்தப் பணி. இவர் இந்தியாவில் யானைப் பாகியாகியுள்ள இரண்டாவது பெண்மணி. அசாம் மாநிலத்தைச் சேர்ந்த பார்வதி பருவா என்ற பெண்மணிதான் இந்தியாவின் முதல் யானைப்பாகி.

நிபா எப்படி இந்த லைனுக்கு வந்தார்?

பி.எஸ்ஸி., விலங்கியல் படித்துவிட்டு கோயம்புத்தூரில் சாலி வாக்கர் என்ற வனவிலங்குப் பாதுகாப்பு நிபுணரது Zoo Outreach Organisation (Zoo) என்ற அமைப்பில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்று, இந்த அமைப்புக்கு, யானைப்பாகன் பயிற்சி அளிப்பதற்கான ஒரு திட்டத்துக்கு நிதி உதவி வழங்கியது. அந்த நிதி, பயிற்சிக்கு முறைப்படி பயன்படுத்தப்படுகிறதா என்று கண்காணிப்பதற்காகக் கோடநாடு யானை கேம்ப்புக்கு அனுப்பப்பட்டார் நிபா. அங்கே போனவுடன், இவருக்கும் ஆர்வம் ஏற்பட, இவரும் அந்தப் பயிற்சியில் ஒரு மாணவியாகச் சேர்ந்து விட்டார். நிபா மூன்று மாதப் பயிற்சியை முடித்து ஓராண்டாகிறது.

நிபாவின் பொறுப்பிலிருக்கும் யானையின் பெயர் சுனிதா. இவர் மலையாளத்தில் பேசுவதை, சுனிதா புரிந்து கொள்ளுகிறது. நிபாவின் கட்டளைக்குக் கீழ்படிகிறது.

தினமும் காலையில் ஐந்து மணிக்கு நிபாவும், சுனிதாவும் எழுந்து விடுகிறார்கள். அருகிலுள்ள பெரியார் நதிக்கு சுனிதாவை ஓட்டிச் செல்கிறார் நிபா. தேங்காய் நார் கொண்டு, உடலைத் தேய்த்து விடுகிறார். ஆனந்தமாய்க் குளிக்கிறது சுனிதா.

ஆண் யானைப் பாகனைப் போல, நிபாவால், யானையிடம் வேலை வாங்க முடிகிறதா? "கஷ்டம்தான். குறிப்பாக யானைகள் மூலம் மரக்கட்டைகளை எடுத்துச் செல்லும் போது, அவற்றை இழுத்துப் போட, நகர்த்தி வைக்க கொஞ்சம் கஷ்டமாகவே உள்ளது. ஆண்களால் அதைச் சமாளிப்பது எளிது!" என்கிறார்.

ஆனாலும், முழு நேர யானைப்பாகியாக ஆவதில் நிபாவுக்கு அத்தனை ஆர்வமில்லை. "Zoo அமைப்பில் எனக்கு ஏகப்பட்ட பொறுப்புகள் உள்ளன. அவற்றையும் நான் தானே கவனிக்க வேண்டும்" என்கிறார்.

நன்றி : சண்டே டைம்ஸ்

- கௌதம்ராம்




பார்க்க வேண்டிய படங்கள்!



• ஷியாம் பெனகல்

எல்லாரும் சர்வதேச மகளிர் தினத்தை ஒரு சொற்பொழிவு அரங்கமாக மாற்றிக் கொண்டிருந்தபோது, அனிதா ரத்னத்தின் அரங்கம் டிரஸ்ட், மூன்று 'கனமான' படங்களைத் திரையிட்டு, பார்வையாளர்களை யோசிக்க வைத்து, படத்தின் இயக்குநர்களைக் கேள்விகள் கேட்க வைத்தது:



• அபர்ணா சென்



• சயீத் மிர்சா

அபர்ணா சென்னின் வங்காளிப் படம் 'யுகாந்த்' கணவன்-மனைவி உறவை, அதில் உள்ள உரசல்களையும் விரிசல்களையும் அப்பட்டமாகக் காட்டியது. காதலின் போது வெளிப்படும் ஆக்ரோஷம், இருவரிடையே எழும் வாக்குவாதங்களிலும் தொடர்கிறது! கணவன் அட்வர்டைசிங் எக்ஸிக்யூடிவ். மனைவி தனித்தன்மை கொண்ட கதக் நடனக் கலைஞர்.

"கடலில் எண்ணெய் கொட்டியதால் சிக்கிக் கொண்ட பறவை இனங்கள், அதில் மூழ்கித் தத்தளித்து மடிவதை என் நடனத்தில் கொண்டு வந்திருக்கிறேன்!"- மனைவி அனுசூயா.

"ஆமாம். அவற்றின் அவஸ்தையைக் கூட உன் நடனத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளுவதுதான் உன் குறி!"- கணவன் தீபுவின் குதறல்.

"இரண்டு வரி காபிரைட்டிங் எழுதிவிட்டு, பிரமாத இலக்கியம் படைத்துவிட்ட மாதிரி அட்டகாசம் பண்ணுகிறீர்களே, அதைவிடப் பரவாயில்லை!"- அனுவின் பதிலடி.

"சுற்றுச் சூழல் பற்றி ஏதாவது மெசேஜ் சொல்ல நினைத்தீர்களா?"- பார்வையாளர்.

"மெஸேஜ் சொல்லுவது எல்லாம் என் வேலை அல்ல."- இது அபர்ணாசென்.

இறுதிக் காட்சியில் தீபு கடலில் போக, அனு குரல் கொடுக்க, மீனவர் விழாவில் தீப்பந்தத்தை ஒருவர் வீசி எறிய, கடல் தீப்பற்றி எரிகிற முடிவு சற்றே டிராமாடிக். ரசாயனக் கழிவைக் கொட்டவும், அணு ஆயுதப் பரிசோதனைகளை நிகழ்த்தவும் கடலைப் பயன்படுத்தலாமா என்ற கேள்வியில் மெஸேஜ் இல்லை என்று அபர்ணா சென் நினைக்கிறாரோ?

ஜூன் மாத




• நஸீம்

மழையில் தொடங்கி, டிசம்பர் 6ம் தேதி வரை, ஒரு பம்பாய் மிடில் கிளாஸ் குடும்பச் சூழலைப் பின்னணியாக வைத்து உருவாகிற நிகழ்ச்சிகளை, சயீத் மிர்சா எடுத்திருக்கும்

காவியம் 'நஸீம்' (அதிகாலைக் காற்று). ஆனால் டிசம்பர் 6 அயோத்தி நிகழ்ச்சிகளைக் காண் பிக்காமலே அதன் உக்கிரத்தைத் தர இவரால் எப்படி முடிந்தது என்பதுதான் ஆச்சரியம்!

பதினைந்து வயதுப் பெண் நஸீமுக்கும், எழுபது வயதுத் தாத்தாவுக்கும் இருக்கிற உணர்ச்சி மிகுந்த உறவுதான் படத்தில் தூக்கலாக இருக்கிற அம்சம் என்றாலும், மதத்தின் ஆக்ரோஷமான பிடியில் சிக்கிச் சீரழியும் மனித நேயம் துல்லியமாகத் தெரிகிறது. (''கலவரத்தில் இறந்தவர்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள்!''– இளைஞனான பேரனின் வசனம். ''அல்ல. எல்லாருமே அப்பாவி ஏழைகள்!''– தாத்தாவின் பதில். பிறகு கனமான மௌனம்.)

''நம் சிவிலிடி– நாகரிகம்– என்னவாயிற்று என்று யோசிக்க வைப்பதுதான் என் படம்!'' என்கிறார் சயீத் மிர்சா.



• யுகாந்த்



• சர்தாரி பேகம்

தும்ரி பாடகி ஒருத்தியின் வாழ்க்கையை அசலாகப் படமாக்கியிருக்கும் ஷியாம் பெனகலின் வெற்றியில், சர்தாரி பேகமாக வரும் கிரண் கேருக்குக் கணிசமான பங்கு உண்டு. இத்தன் பாயிடம் சங்கீதம் கற்றுக் கொள்ளும் வெறியில், அப்பாவை எதிர்த்துக் கொண்டு வருகிறாள் சர்தாரி. அவரது தில்லி வாழ்க்கையைக் கடைசியில் சிறு அரசியல் நிகழ்ச்சியில் முடித்துவிட்டு, கதையை ஆரம்பத்திலிருந்து சொல்லுகிறார் ஷியாம் பெனகல்– ஒரு ரிப்போர்ட்டரின் பார்வையில். தத்ரூபமாய் கிரண் கேர் நடித்திருக்கிறார். படத்தின் இன்னொரு சர்ப்பு– வனராஜ் பாட்டியாவின் இசை.

மூன்று படங்களுக்குமே ஒரு விநோத ஒற்றுமை: 1. மூன்றுமே மூன்று பெண்களின் வாழ்க்கையை வெவ்வேறு கோணங்களில் அலசுகிறது. 2. மூன்றிலுமே பிளாஷ்பேக் உத்தி. 3. மூன்று படங்களுமே இன்னும் பொது மக்கள் பார்வைக்குத் திரையிடப்படவில்லை!

- சாருகேசி

காலேஜ் ஸ்டார்

மீட் மிஸ்டர் வெப்ஸ்டர்!

"உங்க காலேஜ் ஸ்டார் யாரு?

அரட்டையடித்துக் கொண்டிருந்த எதிர்கால என்ஜினியர்களிடம் கேட்டோம்.

"வெப்ஸ்டர்"தான்!

வெப்ஸ்டரா? என்ன இது புதுப்பெயர்? வழக்கமான 'முழி'யுடன் பதில் சொன்ன மாணவர்களை பயமுறுத்தினோம்.


"அவன் பேரு ஆர். சாய்ராம்! பி.டெக் கெமிக்கல் என்ஜினியரிங் கடைசி வருஷம் படிக்கிறான். செல்லமாய் நாங்க வைச்ச பேரு வெப்ஸ்டர்."

பெயர்க் காரணத்தை சாய்ராமிடமே கேட்டோம்.

"வெப்ஸ்டர் டிக்ஷனரியும் கையுமாய் அலைவேன் சார் எப்பவும். ஆங்கிலத்தில் புது வார்த்தைகளைக் கண்டுபிடித்து, என் அறிவை விருத்தி செய்து கொள்வதில் ஆர்வம். அதான் இந்த பட்டப் பெயர்."



• நண்பர்களுடன்



• சாய்ராம்

ஜாலியாய் சொன்ன சாய்ராமின் சொந்த ஊர் சென்னைதான். பெற்றோர் இருப்பது வேளச்சேரியில். படிப்பது திருச்சி ரீஜினல் என்ஜினியரிங் கல்லூரியில். ஹாஸ்டல் ஸ்டூடண்ட்.

இந்த வருடத்தின் 'சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்' விருதை கல்லூரி இவருக்குத் தந்திருக்கிறது.

"கிரிக்கெட்டில் நான் ஆல்ரவுண்டர். அது மட்டுமல்ல; பாட்மிண்டனிலும் இரண்டு வருஷம் கல்லூரிக் கேப்டனாய் இருந்திருக்கிறேன். ஃபுட்பால், டேபிள் டென்னிசும் விளையாடுவேன்."

பிரமிப்புடன் அவரைப் பார்த்தபோது,

நமக்குள் ஒரு சந்தேகமும் முளைவிட்டது.

சரி, இவர் விளையாட்டில் கெட்டி! படிப்பில்?

"வகுப்பிலேயே கடந்த ஏழு செமஸ்டர்களாய் முதல் ரேங்க் நான்தான், தெரியுமா?"

பெருமையுடன் சொன்னார். காலர் பறந்தது!

அதனால்தான் கல்லூரியின் ரோட்டராக்ட் கிளப் இவரை 'Best Allrounder of the year' ஆகத் தேர்வு செய்துள்ளது.

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, ப்ரெஞ்ச் மொழிகள் தெரிந்த இவரின் மற்றொரு முக்கிய 'ஹாபி' புத்தகம் படித்தல்.

சிட்னி ஷெல்டன், ஜெப்ஃரி ஆர்ச்சர் என்று பல ஆங்கில நாவலாசிரியர் நூல்களைப் படித்திருந்தாலும், இவரின் அபிமான எழுத்தாளர்: 'லவ் ஸ்டோரி' புகழ் எரிக் சீகல்.

சமீபத்தில் படித்த எரிக் சீகல் புத்தகம்?

"PRIZE'! அதான் எரிக் எழுதிய லேட்டஸ்ட் புத்தகம். இந்த நாவலில் நோபிள் பரிசு பெற நான்கு விஞ்ஞானிகள் செய்யும் முயற்சிகளை அழகாக விவரித்துள்ளார். எரிக் சீகலின் கதை சொல்லும் பாணி மிகவும் பிடிக்கும்."

ஐ.சி.ஐ. கம்பெனியில் மானேஜ்மெண்ட் ட்ரெயினியாக தேர்வாகியுள்ள இவரின் லட்சியம் 'சிறந்த நிர்வாகி'யாக உருவெடுக்க வேண்டும் என்பதே!

பெற்றோர் தீவிர சாய்பாபா பக்தர்கள். ஆனால் இவரோ நம்புவது தன்னை மட்டுமே.

"விதியை மதியால் நிச்சயம் வெல்லலாம்!"

இவரின் தீவிர நம்பிக்கை இது! ஜாதகம், அருள்வாக்குகளில் சற்றும் நம்பிக்கையற்ற இவரைப் பொறுத்தவரை வாழ்க்கையை அந்தந்த நிமிடங்களில் வாழப் பிரியப்படுகிறார்.

"அடுத்த நிமிஷம் என்னன்னு தெரியாம இருக்கறதுதான் வாழ்க்கையின் சுவாரஸ்யமே" என்று சொல்லும் இவருக்கு, தமிழில் கமல், இந்தியில் அமீர்கான் மிகவும் பிடிக்குமாம். நடிகை? கௌதமியும், மனீஷா கொய்ராலாவும்.

வாழ்க்கையில் இவரை மிகவும் பாதித்தது உற்ற நண்பனின் தற்கொலை. ப்ளஸ் டூ பரீட்சையில் நல்ல மார்க் வாங்கவில்லை என்பதற்காக அந்த நண்பன் உயிர் துறந்தானாம்.


நண்பனின் அந்த திடீர் அதிர்ச்சிப் பிரிவு, இவர் வாழ்க்கையில் பெரிய திருப்பத்தை மனசளவில் ஏற்படுத்தியதாம்.

என்ன திருப்பம்?

போராடு! போராடு! கடைசிவரை போராடு!

வயலினும், மிருதங்கமும் தெரிந்த இவர், லால்குடி ஜெயராமன் என்றால் உருகுகிறார். ஏ.ஆர். ரஹ்மான் என்றாலோ சிலிர்க்கிறார்.

— கிருஷ்ணா



தமாஷ் தண்டனை

பகடை உருட்டிச் சூதாடிய குற்றத்துக்காக அமெரிக்காவில் வடக்கு கரோலினா மாநிலத்தில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர். நீதிபதி விசாரித்து வழக்கு முடிவில் பகடையை குற்றவாளிகளிடம் கொடுத்து உருட்டச் சொன்னார். ஒருவர் உருட்டியதும் மூன்று வந்தது. அவருக்கு மூன்று மாதச் சிறையும், இன்னொருவருக்கு பன்னிரெண்டு வந்ததால் அவருக்குப் பன்னிரெண்டு மாதச் சிறையும், மற்றவர்களுக்கு இதே முறையில் தண்டனையும் தந்தார் நீதிபதி.

- உண்மை நிகழ்ச்சி நூலிலிருந்து :

எல்.எம். மகாநந்தினி.

முன்னணியில் நாம்!

சர்வதேச அளவில் சுற்றுச்சூழல் மிகவும் மோசமாக - பாதிக்கப்பட்ட பதினைந்து நகரங்களில் நான்காவது இடத்தில் டில்லியும், ஆறாவது இடத்தில் மும்பையும் இருக்கிறது. முன்னேற்றமான விஷயங்களில் நாம் உலக அளவில் இல்லாவிட்டாலும் இந்த விஷயத்திலாவது இருக்கிறோமே...!

- கதீஜா ஹனீபா.

வரியே காட்டாத மக்கள்!

மோனாக்கோ நாட்டு மக்கள் எந்த விதமான வரியையும் அரசுக்குக் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. அரசின் நிர்வாகத்திற்குத் தேவையான வரிப் பணம் முழுவதும் தலைநகர் மாண்ட்டே கார்லோவில் உள்ள சூதாட்ட விடுதிக்கு விளையாட வருபவர்கள் கட்டும் கட்டணத்தின் மூலமே கிடைத்து விடுவதுதான் இதற்குக் காரணம்!

- திராவிடமணி மேகநாதன்

பாருக்குள்ள நல்ல நாடு!

மேற்கு வங்கத்தில் நுழைவு வரி ஒரு வருஷத்துக்கு முன்னால் ரத்து செய்யப்பட்டது. ஆனால் அந்தத் துறையில் பணியாற்றி வந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்படவில்லை. அதனால் ஆயிரம் பேர் வேலை ஏதும் செய்யாமல் சம்பளம் பெறுகின்றனர். போதாக்குறைக்கு இவர்களில் ஐம்பது பேருக்கு 'பிரமோஷன்' வேறு!

- வீ.- கே. ஜெயம்

குறையொன்றுமில்லை



ரங்கநாதரைப் பார்த்து அப்படி என்ன கேட்டார் என்று நினைக்கிறீர்கள்...?

"என்னைப் பார்த்து இதைப் பண்ணினியா? அதைப் பண்ணினியா... என்று கேட்கிறாயே... அன்றைய தினம் ததிபாண்டன் வீட்டுப் பானைக்கு எப்படி மோக்ஷம் கொடுத்தாய்? அந்தப் பானை என்ன கர்மயோகம் பண்ணியதா? ஞான யோகமோ, பக்தி யோகமோ பண்ணியதா? அதற்கு உன்னை வந்திக்க மனமுண்டா இல்லை வணங்கத்தான் கைகள் உண்டா..? அந்த குடத்துக்கு மோக்ஷம் கொடுத்தாயே, அந்த விலை நான் பெற மாட்டேனா!" என்று கேட்டார்.

அந்தக் கேள்விதான் ரங்கநாதனை அப்படி அசத்தியது!

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் பக்தர்கள் பகவானை அப்படிப் போட்டுப் பிணைக்கிறார்கள்! ஒரு தர்ம சூக்ஷ்மத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இப்படி ததிபாண்டன் கதை, திரௌபதியைக் காத்த கதை என்று வரிசையாக அவன் சரித்திரத்தை மொத்தமும் அவன் எதிரிலே சொல்ல வேண்டும்.

'ஓஹோ! நம் சரித்திரம் மொத்தம் தெரிந்து வைத்திருக்கிறான் இவன்!' என்று பெருமானே எண்ணும்படி சொல்ல வேண்டும்.

நம் உலகிலே யாராவது எகிறிக் குதித்தால், 'எனக்கு நீ யாருன்னு தெரியாதா? உங்கப்பா யாரு, உங்க தாத்தா யாரு? எல்லாம் எனக்குத் தெரியுமாக்கும்!" என நாம்



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

46



பேசுவதில்லையா? அப்படிப் பேசினால் எதிராளியும் நமக்குப் பணிந்து வருகிறார் இல்லையா...

அதே போல்தான் பகவான் எதிரில் நாம் அவ்வளவு சரித்திரத்தையும் ஒப்பிக்க கற்றுக் கொள்ளணும். அவன் லீலா ரசத்தை யார் யார் விரும்பி சிரவணம் பண்ணுகிறார்களோ அவர்களுடைய பயத்தைப் போக்கடித்து விடுகிறான்.

சங்கம், சக்கரம் முதலான பல ஆயுதங்களை ஏந்தியிருக்கிறான் எம்பெருமான். இவற்றுள் சங்கத்தின் பெருமையைச் சொல்லி முடியாது. 'சொல்லாழி வெண் சங்கே!' என்று சங்கத்தை அழைத்துத்தான் ஆண்டாள் பகவான் பெருமைகளைப் பாடினாள்.

சங்கத்தை அதர பல்லவத்தில் பொருத்தி 'பம் பம்'மென்று முழங்குகிறான். அதிலிருந்து எழும் த்வனி, பீஷ்ம துரோணாச்சார்யர்களுக்குப் பிரணவமாகக் கேட்கிறதாம்!

சக்கரமாகிய சுதர்ஸனத்தைப் பிரயோகம் செய்தால் அது என்ன சாதிக்குமோ அதையே இந்தச் சங்கம் ஒலியினாலே சாதிக்கிறது.

சக்கரத்தாழ்வாரும் உயர்ந்தவர்தான். விஷ்ணு மார்க்கத்தைக் காட்டக்கூடியதனாலே அவருக்குச் சுதர்ஸனாழ்வார் என்றே பெயர்.

சங்கம், சக்கரம் தவிர கத்தி, கதை என்று பல ஆயுதங்களும் தரித்துக் காட்சி அளிக்கிறான் பகவான். நரசிம்ம அவதாரத்தின் போதோ நகத்தையே ஆயுதமாகக் கொண்டு விட்டான்.

சங்கம், சக்கரம், வில், கட்கம் என எதுவானாலும் கையால் பற்றியிருக்க வேண்டும். நகம் இருக்கிறதே... அதை மட்டும் கையிலே பிடித்துக் கொள்ள வேண்டிய அவசியம் கூட இல்லை. இவன் உதறினாலும் அது கீழே விழாது. கூடவே இருக்கும்!

நவீனத்திலே நமக்கு எப்படி வியாமோகம் அதிகமோ அதே போல் பகவானுக்கும் ஈடுபாடு அதிகமாய் இருக்கிறது! நாராயணன் சக்கரத்தையே நவீனமாய் மாற்றி விட்டான். கை நகம் அதைத் தாங்குகிறது.

இந்தப் பெருமைமிகு கோலத்தோடு தோன்றுகிற நரசிம்மன் விஸ்வ சப்தத்தினாலே சொல்லப்படுகிறான்.

திவ்யாலங்காரங்களோடு காட்சி அளிக்கிற பகவான் தேவகி நந்தனன். அவனேதான் சங்கு – சக்கராயுதங்களோடு திருமலையிலே வாசம் செய்கிறான்.

ரங்கநாதரை திருவடியிலிருந்து திருமுடி வரை வர்ணிக்கும் திருப்பாணாழ்வார்

'மந்திபாய் வடவேங்கட மாமலை–
வானவர்
சந்திசெய்ய நின்றான்...'

அருள்வாக்கு

இங்கே அத்யாத்ம சாஸ்த்ரத்துக்கு ஸயன்ஸ் உபகாரம் செய்து உபமானம் கொடுக்கிறது! அடிக்கடி சொல்லும் உபமானம்தான். அதாவது: ஒரே எலெக்ட்ரிஸிடி வேறே வேறே பல்புகளில் நூறு 'வாட்', அறுபது 'வாட்' என்றும், பச்சை, சிவப்பு முதலான பல நிறங்களிலும்; டேப் ரிகார்டரில் சப்தமாகவும்; ஏர்-கண்டிஷனரில் ஜில்லிப்பாகவும்; ஹீட்டரில் சூடாகவும்-இப்படிப் பல தினுஸாக வெளிப்படுகிறது. எலெக்ட்ரிஸிடி இல்லாமல் இந்த எதுவும் வேலை செய்வதில்லை. ஆனாலும் இதை வைத்து எலெக்ட்ரிஸிடி இத்தனை வாட், அது இன்ன நிறம், அது இன்ன பாட்டுப் பாடுவது, அது

என்கிறார்.

மந்திபாய் வடவேங்கடம் – குரங்குகள் பாய்ந்து குதித்துத் திரியும் கிரிப்ரவதங்கள். அவற்றுள் ஒன்றிற்கு ரிஷபாசலம் என்று பெயர். அந்தப் பெயர் வரக்காரணமே ஒரு பிரத்யேகமான வைபவம்.

ரிஷபாசுரன் என்பவன் ரொம்ப துஷ்டன். மூன்று நேத்திரங்களுடைய நரசிம்ம சாளக்கிராமத்தை ஆராதிக்கிறான் அவன். அவனுடைய நிஷ்டையைச் சொல்லி முடியாது! அவ்வளவு சிரமப்பட்டு எம்பெருமானை தியானம் பண்ணுகிறான்.

அவனெதிரே பகவான் பிரத்யக்ஷமாகிறான். 'உனக்கென்ன வேண்டும்?' என்று கேட்கிறான்.

"உன்னோடு சண்டை போடணும்!" என்கிறான் ரிஷபாசுரன்!

"அப்படியா? போடேன்..."

குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படுகிற மாதிரி பகவான் கையால் குட்டுப்பட ஆசைப்பட்டான்!

பகவானும் அவன் தட்டுவதையெல்லாம் தாங்கிக் கொண்டு கடைசியில் அவனை அடித்தான்.

பிராணன் போகிற சமயம் – அப்போது அவன் சொல்கிறான் :

"பிராணன் போகிற சமயத்தில் எந்த மூர்த்தியைப் பார்த்தால் மோக்ஷமோ அந்த நரசிம்ஹ மூர்த்தியைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனக்குக் கட்டாயம் மோக்ஷம்தான் வரப்போகிறது. நான் உன்னிடம் சண்டை போடணும் என்று கோரிய வரம் தவறுதான். உணர்கிறேன். எனக்கொரு வரம் அருள வேண்டும். இந்த இடத்திலே உன்னுடன்



இத்தனை சூடாக அல்லது குளிர்ச்சியாக இருப்பது என்று முடிவு பண்ணலாமா? இந்த எதுவுமாக இல்லாமல், இந்த எல்லாவற்றையும் இப்படியிப்படி ஆக்கிக் கொண்டு ஒரே மின்ஸார சக்தி பல' ரூபங்களில் பல கார்யங்களை ஆக்குவிப்பது போல்தான் ஒரே ஆத்மா பலவிதமான ஜீவ ஜந்துக்களில் பலவிதமான மனப்போக்கு, சக்தி முதலியவற்றை ஏற்படுத்தி, பலவிதமான கார்யங்களையும் செய்து கொண்டிருக்கிறது, ஆனால் இந்த மனோபாவங்கள், சக்தி ஸாமர்த்யங்கள், கார்யங்கள் எதுவாவது அதற்குரிய லக்ஷணங்களா என்றால் அதுதான் இல்லை. இவற்றை அதன் லக்ஷணமாகச் சொல்வது பச்சை பல்பைப் பார்த்துவிட்டு எலெக்ட்ரிஸிடி பச்சை நிறமானது என்று சொல்கிற மாதிரிதான்; டேப் ரிகார்டர் கேட்டுவிட்டு எலெக்ட்ரிஸிடிக்கு அஞ்சு கட்டை சுருதி என்கிற மாதிரிதான்!

பல எலெக்ட்ரிஸிடிகள் இல்லை. ஒரே எலெக்ட்ரிஸிடிதான். அத்வைதம்! அதுவே அநேக வஸ்துக்களில் அநேக கார்யங்களைச் செய்து த்வைதங்களுக்குக் காரணமாகிறது. இப்படி ஒரே ஆத்மாதான் மாயாசக்தியால் ஸகல ஜீவ-ஜட ஸமூஹ வ்யாபாரங்களுக்கும், அதாவது ப்ரபஞ்ச நாடகம் முழுவதற்கும் காரணமாயிருக்கிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

போராடி உயர்ந்த கதியை அடைந்ததாலே என் பெயர் இந்த மலைக்கு இருக்கட்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

பகவானும் 'ததாஸ்து!' என்று சொல்ல, அந்த மலைக்கு ரிஷபாத்ரி என்று பெயர் வந்தது.

ரிஷபாசுரன் நரசிம்ஹ உபாசனை பண்ணிய இடம் அது. அது மட்டுமல்ல... அங்கே நின்று கொண்டிருக்கிறானே திருவேங்கடமுடையான் - அவனும் நரசிம்மோபாசனை பண்ணிய இடம் அது!

இஞ்சிமேட்டு அழகிய சிங்கர் ஒரு விஷயத்தை ரொம்ப சமத்காரமாய்ச் சொல்வார் :

'ராமனுக்கு நாளை பட்டாபிஷேகம் நடக்கவிருந்த நேரத்தில் தடை ஏற்பட்டது. மனைவியோடு போய் ரங்கநாதனை சேவித்து விட்டு வந்தவன் அவன். ஆனாலும் தடை!

ஆனால், குதிரை மேல் ஏறி மலைகளிலும் வனங்களிலும் திரிந்து கொண்டிருந்தானே... அவன் நரசிம்ஹனை ஆராதித்தான்! அப்படி ஆராதித்த ஸ்ரீநிவாஸ பெருமான் நித்யஸ்ரீயோடு விளங்குகிறான். மார்பிலே ஸ்ரீயைத் தாங்கி நிற்கிறான்.

அவனுடைய திருக்கல்யாணத்தில் கூட முதல் நிவேதனம் அந்த நரசிம்ஹனுக்குத்தான் நடக்கிறது. வேங்கடாசல மகாத்மியத்தில் வரும் அந்தக் கதையைக் கேளுங்கள் :

மணவறையிலே ஸ்ரீநிவாஸன் கல்யாணத்துக்கு எழுந்தருளும்போது சுகப்ரும்மாதிகளெல்லாம் சாப்பிடக் காத்திருக்கிறார்கள்.

ஏகமாக பதார்த்தங்கள். அக்னி பகவானே வந்து தளிகை பண்ணுகிறான்.

அக்னி பகவான் தளிகை செய்தால் எப்படி இருக்கும்...?!

அன்னத்திலே ஏதாவது லோபம் இருந்தால் அதை உஷ்ணப்படுத்தி லோபத்தைப் போக்கிடலாம். அக்னியோட மகிமை அது. கெட்ட அன்னம் கூட நல்லதாகப் போய் விடுகிறது.

அந்த அக்னியே வந்து சமையல் பண்ணினால் எப்படி இருக்கும்!

தளிகை முடிந்தது. நிவேதனம் பண்ண வேண்டும் இல்லையா...? அந்த நேரத்திலே போய் அஹோபிலத்திலே இருக்கும்படியான லக்ஷ்மிநரசிம்மனைத்தான் கேட்கிறார்கள். "எப்படி யதாவிதியாய் நிவேதனம் பண்ண வேண்டும்...?"

யதாவிதி என்றால் - முறை - கிரமம். நரசிம்ஹ ஆராதனம் என்பது ரொம்ப கடினம். அதனால்தான் அஹோபிலத்து லக்ஷ்மி நரசிம்ஹனே முதல் சன்னியாஸியாக வந்து, உயர்ந்த திருநாராயணபுரத்திலே அவதரித்த கேசவாச்சார்யார் என்பவருக்கு திருத்தண்டமும் காஷாயமும் கொடுத்து உபதேசம் செய்வித்தான்.

சன்னியாஸிகளால்தான் அவ்வளவு நியமமாக ஆராதனம் பண்ண முடியும் என்று காட்டத்தான் அப்படி நடைபெற்றது. அப்படியானால் கிரஹஸ்தாசிரமத்துக்காரர்களுக்கு அது எவ்வளவு சிரமம் என்று எண்ணிப் பாருங்கள்!

அஹோபிலத்திலே அந்த ஸ்ரீநிவாஸ பெருமானே நரசிம்ஹனைக் கைகூப்பி சேவிக்கிற அழகை இன்றைக்கும் பார்க்கலாம்.

கல்யாண காலத்தில் சிறந்த மூர்த்தியாக தியானம் பண்ணக்கூடியவன் அந்த நரசிம் ஹன். ஒரு கோயிலில் ராமன், கண்ணன், நரசிம்ஹன் என்று வெவ்வேறு மூர்த்திகள் இருந்தால் முதல் நிவேதனம் நரசிம்ஹனுக்குத் தான் நடக்கும்.

அப்படியேதான் ஸ்ரீநிவாஸ கல்யாணத்தின் போதும் நடந்தது.

சஹஸ்ரநாமத்திலே 'ஸ்ரீ ஸ்ரீ' என்று பதினான்கு முறை வரக்கூடிய ஒரு கட்டம் வருகிறது. அதைப் பூர்த்தியாக விவரித்தாலே வேங்கடாசல மகாத்மியம் விவரித்த மாதிரி ஸ்ரீநிவாஸ கல்யாணம் வரை முழுவதையும் அந்த சப்தத்தினாலே சம்பாதிக்க முடியும்!



"ஜெயில் மாதிரியே கட்டியிருக்காங்களே, யாருடைய பங்களா அது?"

"பழைய அமைச்சரோட புது பங்களா தான்; பழகின இடம் மாதிரி இருக்கணும்னு தான் ஐடியா பண்ணி கட்டி இருக்காரு!"

– ஆர்.ராமசுப்ரமணியன்

எப்படி நடக்கிறது அவன் கல்யாணம்...?

இந்த ஸ்ரீநிவாஸ அவதாரத்திலே, பரமாத்மா அவனையே நினைத்து ஏங்கக்கூடிய பத்மாவதியின் கிரஹத்துக்குப் போகிறான். ஆகாச ராஜனின் புதல்வி பத்மாவதி.

அந்த ஆகாச ராஜன் கிரஹத்துக்கு பகவான் எந்த வேஷத்தில் போகிறான் தெரியுமோ...?

குறத்தி வேஷத்தில் போகிறான்! வேஷம் போடுவதிலே வல்லவன் அவன்! குறத்தியாய் வேஷம் போட்ட பரமாத்மா வந்த அழகே அழகு! வெறுமனே பார்க்கும் போதே அவன் சுந்தரன்தான்... இப்படி வேஷத்தைப் போட்டுக் கொண்டு வந்தால் உலகமே மயங்கி நிற்கிறது!

ஆகாச ராஜனும் அவன் தர்மபத்னியும் பார்த்துவிட்டு உள்ளே அழைத்துக் கொண்டு போகிறார்கள்.

"நீ எந்த ஊர் குறத்தி...?" என்று கேட்கிறாள் பத்மாவதி.

முத்து மலை, குடகு மலை என்று ஒரு மலை விடாமல் விவரிக்கிறான் பகவான்.

''யார் யாருக்குக் குறி சொல்லியிருக்கிறாய்...?''

"நான் சாமான்ய குறத்தியல்ல... இந்திரனுக்கும் இந்திராணிக்கும் இசைந்த குறி சொன்னேன்.

இந்திரனும் இந்திராணியும் மெச்சிக்
கொண்டார் என்னை...
பார்வதிக்கும் பரமனுக்கும் பார்த்துக் குறி
சொன்னேன்
பார்வதியும் பரமனுமே மெச்சிக் கொண்
டார் என்னை..."

என்று பாடிக் காட்டி திருமூர்த்திக்கே குறி சொன்ன கதையை விவரிக்கிறான்.

"உங்கள் நாட்டிலே க்ஷேம லாபங்கள் எப்படி...?" என்கிறாள் பத்மாவதி.

நாட்டிலே நிலவும் சுபிட்சத்தைச் சொல்கிறாள் குறத்தி.

"யாருக்கும் பகைமை என்பதே கிடையாது. புலியும் பசுவும் ஒரே நீரோடையில் நீர் குடிக்கும். வாழை மரம் கிழக்குப் பக்கமாகக் குலை தள்ளும். பலா மேற்குப் பக்கமாக உற்பவிக்கும்." – இதெல்லாம் லோகத்தின் க்ஷேமத்தைக் காட்டக்கூடிய அறிகுறிகள்.

இதையெல்லாம் கேட்ட பிறகு, பத்மாவதியை குறத்தியின் பக்கத்தில் உட்கார வைத்துக் கையைப் பார்க்கச் சொல்கிறார்கள்.

சொன்னால்... அப்போதைக்கப்போதே கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் பகவான் அந்தக் கையை!

"பிடித்த கையும் பிடிக்கப் போகிற கையும் ஒன்றுதான்..." என்கிறான்.

பத்மாவதி தன் மனதுக்குகந்தவனைக் கைப்பிடிப்பாள் என்று சூசகமாகச் சொல்கிறான்.

அவன் அவ்வாறு பத்மாவதிக்குச் சொன்ன குறி சப்தத்தைக் கேட்கிற அத்தனை பேர் கிரஹத்திலும் கல்யாணத்துக்குத் தடையிருந்தால் நீங்கிப் போகுமாம்.

இவ்வளவு நாட்களாக எத்தனையோ வேத, வேதாந்த, சத் விஷயங்களைப் பற்றிப் பேசினோம். ஆனால் அத்தனையைக் காட்டிலும் பகவானுடைய குறத்துக்கு இருக்கிற பலனைப் பாருங்கள்!

எளிமையை மதிக்கவும் வந்திக்கவும் கற்றுத் தருகிறான் அவன்.

(தொடரும்)

தி.மு.க. ஆட்சியிலும் அ.தி.மு.க. காற்று!

●● அ.தி.மு.க ஆட்சிக்கு முடிவு கட்டி தி.மு.கவை வரவேற்று வோட்டளித்தவர்கள் பலர் இன்று யோசிக்க ஆரம்பித்திருக் கிறார்கள். இதற்கு இடமளிக்காமல் அவர்கள் ஆதரவை தக்க வைத்துக் கொள்ள வேண்டு மென்றால் கலைஞர் சில விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.



● சன் டீவி ஆளும்கட்சியின் ஊது குழல் என்ற தோற்றத்தைச் சிறிதாவது களைய வேண்டும்.

● வழக்கத்துக்கு மாறாக, ஸ்டாலின் மேயரான பிறகு விதவிதமான உடைகளில் காட்சியளிக்கிறார். இந்த ஆடம்பரம் தவிர்த்து எளிமைக்குத் திரும்ப வேண்டும்.

● அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தை நினை வூட்டுவது போல் புதுமனை புகுவிழா போன்ற சிறு சிறு நிகழ்ச்சி களுக்குக்கூட சில அமைச்சர்கள் படையெடுக்கிறார்கள். இதை நிறுத்த வேண்டும்.

● அமைச்சர்களை வரவேற்கும் கலர் கலரான ஆளுயர போஸ் டர்களை ஒழிக்க வேண்டும்.

● மேடைகளில் காரண காரி யமில்லாமல் அமைச்சர்கள் முதல்வரைப் புகழ்வதை விட்டு விட வேண் டும்.

● தங்கள் தொகுதிகளை எவ்வாறு கவனித் தார்கள் என்பதற்கு மாதமொரு முறையாவது எம்.எல்.ஏக்கள் முதல்வருக்கு அறிக்கை தர வேண்டும்.

கோவை, ஆர்.எஸ். மணி.

●● சீர்காழி நகராட்சியில் நாய் லைசென்ஸ் கட்டணம் இரண்டு ரூபாயாக இருந்தது. புதி தாகப் பொறுப்பேற்ற நகர்மன்றத் தலைவர் இதை ஐம்பது ரூபாயாக உயர்த்தி விட்டார். இருபத்தைந்து மடங்கா உயர்த்துவது? சென்னை மாநகராட்சியிலேயே பதினாறு ரூபாய்தான்!

சீர்காழி, ஆர். ராஜதுரை.

●● விராலிமலை முருகன் ஆலயம் போலவே அங்குள்ள மயில் கூட்டமும் பிரசித்தி பெற்றது. ஆனால் இப்போது மயில்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. மயில்களின் தோகை களவாடப்பட்டு கடைகளில் விற் பனைக்கு வருகிறது. மயில்களின் அழகு இவ் வாறு குறையாடப்படுகிறது. அரசு அதிகாரிகள் கவனிக்கட்டும்..

குடந்தை, பாலாஜி.

●● வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தின் பொன்விழாவைக் குறிக்கும் வகையில், அன்றைய ஆளுனர் பி.ஸி. அலெக்ஸாண்டர் ஒரு நினைவுத் தூணை, திருச்சி திருவள்ளுவர் பஸ் ஸ்டாண்ட் அருகே திறந்து வைத்தார். அதன் பக்கத்திலேயே உப்பு சத்தியாகிரகம் ராஜாஜி தலைமையில் நடந்ததற்கான மற்றொரு பழைய நினைவுத் தூணும் உள் ளது. ஆனால் தற்போது இது குப்பை கூளங்களுக்கு மத்தியில் கேட் பாரற்றுக் கிடக்கிறது. இவற்றைச் சுற்றி சிறிய தோட்டம் அமைத்து, வட்டமாகச் சங்கிலி வேலி உருவாக்கி, அழகாகப் பராமரிக்கக் கூடாதா? ராஜாஜி பெயரில் தனி மாவட்டம் அமைத்த முதல் வர் கவனிக்கட்டும்.

திருச்சி-21, எம்.வி. வேங்கடகிருஷ்ணன்.

●● வாசகர்களுக்காக நூலகங்கள் என்ற நிலை தோன்றினால்தான் நூலகங்களால் பயன் ஏற் படும். சஞ்சிகைகள் கடைக்கு வந்து பல நாட் களுக்குப் பிறகே நூலகங்களில் கிடைக்கின்றன. அதுவும் கட்டாயத்தின் பேரிலோ, சிபாரிசின் பேரிலோ போடப்படும் நூல்கள் சஞ் சிகைகளாக உள்ளனவே தவிர, மக்கள் படிப் பனவாக இல்லை.

மன்னார்குடி, ஜெதம்பா


●● சோளிங்கர் நரசிம்மசுவாமி இருக் கோயிலை 1300 படிக்கட்டுகள் ஏறி அடைய வேண்டும். படிக்கு ஒரு குரங்கு வீதம் அமர்ந்து பக்தர்களைத் துன்புறுத்துகின்றன. சீறுவது, தாக்குவது, கையிலுள்ள எதையும் பறிப்பது என்று இவை செய்யும் அக்கிரமம் எழுதி மாளாது. கோயில் நிர்வாகம் இதற்குத் தக்க பரிகாரம் காண வேண்டும்.

சென்னை-83, ஆர். ரகோத்தமன்.

●● கோவை, அவிநாசிலிங்கம் மனைஇயல் பல்கலைக் கழகத்தில் முத்தமிழ் விழாவைத் துவக்கி வைக்க தமிழ்க்குடிமகன் வரப் போகிறார் என்று எல்லோரும் ஆர்வமுடன் காலை 3.30 மணியிலிருந்தே காத்திருக்க, அனைவரும் ஏமாற்றமடையும்படியாக அமைச்சர் ராஜபாளையத்துக்குப் போய் விட் டார்! மாணவ மாணவியருக்கு முன்னுதார ணமாக நடந்து கொள்ள வேண்டியவர் இப்படியா செய்வது?

கோவை, சு.மாரியப்பன்.

மனச்சோர்வு???



தேர்ந்தெடுப்பது உங்கள் கையில். நாங்கள் கூறும் யோசனை
ராம் காஷ்யப் சிட்ஸ் – இணையற்ற தேர்வு.

வாழ்க்கையில் சோதனையான கட்டங்கள் வருவது சகஜம். அதனால் உங்கள் மனதில் பல விதமான குழப்பங்கள் ஏற்படக்கூடும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் நீங்கள் செய்யக் கூடிய மிகப்பெரிய தவறு, உங்களை அப்படியே விழுங்கிவிடக் கூடியவர்களை அணுகிவிடுவதுதான். அதனால் நிலைமை மேலும் மோசமாகிவிடும்.

மாறாக, ராம் காஷ்யப் சிட்ஸ் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பாருங்கள். அது நம்பகத் தன்மை, பண்பாடு, தொலைநோக்கு ஆகிய முழுநிறைவான கொள்கைகளின் அடிப்படையில் இயங்கிவரும் நிறுவனம். நிலையான உறவுகளை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நிறுவனம்.



சந்தாதாரருக்கான பரிசு



அறிமுகப்படுத்துவோருக்கான பரிசு

மகிழ்ச்சிப்பெருக்கு!!!



எனவே, ராம் காஷ்யப் சிட்ஸில் சந்தாதாரராகக் சேர்ந்திடுங்கள் அதற்கு, எங்கள் **சமய சஞ்சீவி**யை உங்கள் இல்லத்தில் வரவேற்றால் போதும். அதன் பலனாக, உங்களுக்கு நீங்களே உதவிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது. உங்கள் தேவைகளை நீங்களே முழுமையாகப் பூர்த்தி செய்து கொள்ளும் ஆற்றல் கிடைத்துவிடுகிறது. இவ்வாறு நிகழ்வது மிகவும் இயற்கையான ஒன்று. காரணம், ராம் காஷ்யப் சிட்ஸில் சேரும்போது ஓர் அன்பான குடும்பத்தில் நீங்களும் ஓர் அங்கமாகி விடுகிறீர்கள்.



Ram Kaashyap Investment Ltd

Deposit Mobilisation on

Ram Kaashyap Chits

ஈடில்லா சேமிப்பு; இணையற்ற தேர்வு

ராம் காஷ்யப் நிறுவனங்களில் ஓர் அங்கம்

Insight-738

ராம் காஷ்யப் குரூப் நிறுவனங்கள் முகவரி : பதிவு அலுவலகம் : 53, பிஷப் கார்டன், சென்னை 600 028.
நிர்வாக அலுவலகம் : 14/3 தண்டபாணி தெரு, தி.நகர், சென்னை 600 017. போன் 4341513, 4330034

கிளைகள் : தமிழ்நாடு : சென்னை : • ஆழ்வார்பேட்டை : 1/1 (கீழ்த்தளம்), சர் தேசிகா ரோடு, ஆழ்வார்பேட்டை, சிக்னல் அருகில், சென்னை 600 004. போன் 4970205 **• மேற்கு மாம்பலம்** : 1/A, முதல் மாடி, மூர்த்தி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 600 033. போன் 4895638 **• அண்ணா நகர்** : 102, 'D' பிளாக், N.P. டவர்ஸ் சிந்தாமணி அருகில், அண்ணா நகர் கிழக்கு, சென்னை 600 102. போன் 610979 **• அடையாறு** : 11, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு சென்னை 600 020. போன் 418081 **• தி.நகர்** : 14/3 தண்டபாணி தெரு, தி.நகர், சென்னை 600 017. போன் 4341513 **• கோயம்புத்தூர்** : 2வது மாடி, ஏசியாடிக் பில்டிங், 378 டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் 641 018. போன் 231886 **• திண்டுக்கல்** : 24 புதிய அக்ரஹாரம், திண்டுக்கல் 624 001. போன் 34218 **• திருநெல்வேலி** : கடை எண் 5, எலைட் காம்ப்ளக்ஸ், 182 E/24, S.N. ஹை ரோடு, திருநெல்வேலி 627 001 **• கும்பகோணம்** : நல்லி பிளாசா, முதல் மாடி 34 T.S.R. பெரிய தெரு, கும்பகோணம் 612 001. போன் 30246 **• மதுரை** : N.C.S. பில்டிங் 113-B, மேற்கு பெருமாள் மேஸ்திரி தெரு, மதுரை 624 001. போன் 741802 **• தஞ்சாவூர்** : T.S. எண் 2547 தெற்கு மெயின் தெரு, தஞ்சாவூர் 613 009. போன் 25871 **• திருச்சி** : 44–45 அன்னை சிவகாமி காம்ப்ளக்ஸ், சிங்காரத் தோப்பு (சூப்பர் பஜார்) திருச்சி 620 008. போன் 704752 **• ஈரோடு** : ஆரூர் அம்மன் ...ம்ப்ளக்ஸ், 58 சத்தி ரோடு, ஈரோடு 638 003. போன் 79822 **• சேலம்** : 61, செர்ரி ரோடு, சேலம் 636 007. போன் 418171 **• திருவாரூர்** : 80–A தெற்கு தெரு, திருவாரூர் 610 002. போன் 20895 **• காரைக்குடி** : எண் 1, T.T. நகர், முதல் தெரு S.K.N. பில்டிங்ஸ் (கீழ்த்தளம்) காரைக்குடி 630 001.

வாசல் பக்கமாக பானு.... கொல்லைப்புரத்தில் சுசிலா. இருவரில் மோகன்ராம் பானுவைத்தான் முதலில் பார்க்கிறான். அவன் வந்து நிற்கும் விதத்தில், பார்க்கும் தோரணை யில் ஒரு பொருளேரிய மாற் றம் தெரிகிறது.

''வா...'' என் கிறான் மிகப் பொறுமையாக. இதுதான் சாக்கு என்று சுசிலாவைப் பார்த்துவிட்டு பின் ஓடிப் போய்க் கதவை அடைத்துக் கொள்கிறாள் மகாலட்சுமி.

"ஏய் எங்கடி வந்தே?" - நூல் புடைவை முகம் துடைக்க, கண்ணிரண்டில் பதற்றம் காட்டி நிமிர்கிறாள்.

"உம்... விருந்து சாப்பிட..."

"உனக்கு அதுதான் கொறச்சல். உள்ள மோகன் வேற இருக்கான். இப்ப எதுக்கு வந்தே?"

"ஆமா, யார் அது புதுசா?"


''நீ கனகாவைப் பத்தி கேக்கறியா?''

"ஓஹோ... அவ பேர் கன காவா?"

''ஆமாம் சுசிலா. எங் கண்ணன் பொண்ணு..."

''அண்ணன் பொண்ணு... பலே! அண்ணன் எங்க திமுர்னு ஆகாசத்துல இருந்து குதிச்சிருக் கான்?''

''ம... உன் கேள்விக்கு பதில்



ஆசை நெஞ்சு 12

இந்திரா செளந்தர்ராஜன்

சொல்ற நிலைல நான் இப்ப இல்லை. கிளம்பறியா?" - மகாலட்சுமி முகத்திலடித்து விட்டுத் திரும்ப உள்நுழைகிறாள்.

பானு உள்ளே வந்து கனகாவையே விழுங்கிக் கொண்டிருக்கிறாள். மோகன்ராம் ஏதோ பொது இடத்தில் நிற்கிற மாதிரி நின்று கொண்டு புத்தகப் புரட்டல் செய்து கொண்டிருக்கிறான்.

கனகாவுக்கு மோகன்ராமும் புரியவில்லை. பானுவும் புரியவில்லை.

"நீ எப்படி வந்தே?"

"இ... இப்பதான்."

"எப்படி இருக்கா கிழவி...?"

"இருக்கா."

"ஏண்டி அலுத்துக்கறே.... என்ன விஷயம்?"

"விஷயம் இருந்தாத்தான் வரணுமா?"

"கொல்லைல கசிலா. இங்க நீ - இன்னிக்கு என்ன இரண்டு பேரும் பேசி வெச்சிக்கிட்டு வந்திருக்கீங்களா...?"

- மகாலட்சுமி வாயில் பிசகலாக, கசிலா வெளிப்பட்டு விடுகிறாள். அடுத்த கணம் புத்தகத்தை மூடிவிட்டு வேகமாக வேட்டியையும் மடித்துக் கட்டிக் கொண்டு கொல்லைப்பக்கம் விரைகிறான் மோகன்ராம்.

மகாலட்சுமி சொல்லி விட்டதற்காக வருந்தாமல் - திரும்பியும் போய் விடாமல் ஆட்டுக்கல் மேல் குத்துக்காலிட்டு உட்கார்ந்திருக்கிறாள் கசிலா.

மோகன் வந்து நிற்கவும் அவனைத் துளி நெருடலுடன்தான் ஏறிடுகிறாள். மோகன்ராம் பார்வை அவளைக் கணிசமான கோபத்துடன் பார்க்கிறது.

"எதுக்கு அப்படி பார்க்கிறே?"

"நீ பொம்பளதானா?"

"இன்னிக்கு வருமானம் முன்னூறு ரூபா - பொம்பளையா இல்லேன்னா ஆம்பளைங்க கொடுத்திருப்பாங்களா?" - சர்வ அலட்சியமான பதில் கசிலாவிடம்.

"த்தூ நாயே...! பெரிய ரவுடி மாதிரி தாமுக்கு நீ வெச்சிருக்கே. அவன் செத்து வெச்சிருந்தா நீ கம்பி எண்ண வேண்டி வந்துருக்கும். இதையெல்லாம் யோசிக்கவே மாட்டியா?"

"இவ்வளவுதானா? இல்லை இன்னும் இருக்கா?"

"என்ன இன்னும் இருக்கா... உன்னால எனக்குக் கெட்ட பேர். நான்தான் உன்னை ஏவி விட்டேன்னு அவன் ஆட்கள் நினைக்கறாங்க."

"உம்... அப்புறம்?"

"நான் என்ன கதையா சொல்றேன். அப்புறம்கறே! தாயே, உன்னைக் கை எடுத்துக் கும்பிடறேன். எங்கையாவது ஓடிடு. என் அக்கா மட்டும் இப்ப இருந்திருந்தா உன்னை

"மோகன்ராமுக்கும், கனகாவுக்கும் ஏற்படப் போகும் உறவை காலம் விடுகதைப் புதிராகத்தான் சொல்லும் போல தெரிகிறது.

'பன்னிரண்டு வருட வேளாண்மை ஒன்று...

ஆறு மாச வேளாண்மை ஒன்று...

மூன்று மாச வேளாண்மை ஒன்று...

அன்றே நட்டு, அன்றே அறுக்கும் வேளாண்மை ஒன்று....

என்று எல்லாம் களத்தில் அடிபட வேண்டும்.'

- மொத்தத்தில் எல்லாம் கலந்து அடிபட்டு தாம்பூலமாகப் போகிறதோ?"

செருப்பாலையே அடிச்சிருப்பா...''

- கலங்காமல் ஒருவகை திடத்தோடு இது வரை இருந்தவள் இந்த வார்த்தைக்கு பிறகு சற்று கலங்க ஆரம்பிக்கிறாள்.

"மோகன் நீ புரியாம பேசறே..." என்கிறாள். பின்னாலேயே பானுவும், கனகாவும் கூட வந்து நின்று விட்டனர்.

"நீ போடி...! டேய் மோகன், விட்றா. நடந் தது நடந்து போச்சு. நீ போடி... போடின்னா..." - மகாலட்சுமி அவளை இடையில் புகுந்து துரத்தப் பார்க்கிறாள்.

"விடு மகா... அவன் இன்னும் பேசட்டும் - எவ்வளவு பேசணுமோ பேசட்டும்."

"என்ன பசப்பறே? எங்க எப்படி நடந்துக் கணும்னு தெரியாத நீ எல்லாம் எதுக்கு மண்ணுக்கு பாரமா? உன்னை இனி நான் என் வீட்டுப் பக்கம் பார்த்தேன் நடக்கறதே வேற..."

மோகன்ராம் வெடி வெடி என்று வெடிக் கிறான். பக்கத்து வீட்டு வாதா மரத்து அணி லும், ஓட்டுக்கூரை மேல் செத்த எலிக் குஞ்சை கொத்தியபடி இருக்கும் காக்கையும் கூட மோகனின் அதட்டலால் துணுக்குற்று, நடப் பதை வெறிக்கின்றன.

சுசிலா கரைய ஆரம்பிக்கிறாள். திடச்சித் தம் நொறுங்கினாற்போல் ஒரு பிரமை. எத் தனை முறைதான் தாங்குவது? அது யாருக்குப் புரிந்ததோ இல்லையோ... பானுவுக்கு நன்கு புரிகிறது. அவள் அருகில் போய் ஆதரவாகத் தோள் பற்றி, "அழாதக்கா..." என்கிறாள்.

"வேலிக்கு ஓணான் சாட்சி..." - பானு விருட்டென்று திரும்பி முதல் தடவையாக மோகன்ராமைப் பார்க்கிறாள்.

பார்வையா அது? நெருப்பு!

நான்கு நாட்கள் ஓடி விட்டன. ஒருநாள் கூட மோகன்ராம் கடைப் பக்கம் வரவில்லை. மகாலட்சுமி கூட எட்டிப் பார்க்கவில்லை. என்னதான் முயன்று பார்த்தும் பானுவால் கழுத்து அவன் வீட்டுப் பக்கமாகத் திரும்பு வதையோ, அவன் வராதது குறித்து வருந் தாமலோ இருக்க முடியவில்லை.

கூடவே கிழவி விஷயமும் சேர்ந்து கொண்டு படுத்திக் கொண்டிருக்கிறது. கண் போன கையோடு கிழவிக்கு இப்பொழுது காமாலை வேறு! ஓர் ஓரமாக அழுக்குத் துணி மூட்டை போல சுருண்டு கிடக்கிறாள். ஈன சுரத்து முனகல் மட்டும் உயிருடன் இருப் பதைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

வியாபாரம் மட்டும் தூள் பறக்கிறது! தெருவில் நடந்தே பார்த்திராத சண்முகம் கூட இப்பொழுது புதிய கஸ்டமர். 'சர்ரு பிர்ரு' என்று கவசாகி பஜாஜில் பறக்கும் மெடிகல் ரெப்ரசென்டேடிவ் ஜோசப் கூட கஸ்டமர்!

ஆங்கிலப் பேச்சோடு இட்லி விழுங்கி, அவ்வப்பொழுது பானுவையும் விழுங்கி, தங்களின் சுவை எதில் என்பதை சொல்லாமல் சொல்கின்றனர். பானுவுக்கு எல்லாமே புரி கிறது. பகிர்ந்து கொள்ளத்தான் ஒருவரில்லை. எப்பொழுதாவது வரும் தோழி சாந்தி கூட அவளுக்குள் சோகத்தை கூட்டத் தான் செய் கிறாள்.

''ஹூம்... மோகனை மடக்கலாம்னு பார்த்தே. அவனை மாமன் மக மடக்கிட்டா. ஒனக்கு ஜவஹர்தான்'' என்று உசுப்பேத்து கிறாள்.

'எனக்கென்ன தலையெழுத்து!' என்று எதிர்த்தெல்லாம் பேச முடியாது. எடுத்துக் கட்ட இருக்கும் கிழவி கூட நாளை எண்ண ஆரம்பித்து விட்டாள். உலகம் முழுக்க கோடி கோடி பேர். ஆனால் அதில் ஒருவர் கூட பானுவுக்காகக் கவலைப்படத் தயாராக இல்லை என்பதுதான் எதார்த்தம். அவர் களுக்கு அவசியமும் இல்லை.

ஒரு பெண்ணுக்கு இப்படி ஒரு நிலை வாய்க்கவே கூடாது. நினைத்தாலே நெஞ்சுக் குள் சுருக்கென்கிறது. இந்த மனநிலையோடு கடை நடத்தினால் அது மட்டும் சகிக்கவா போகிறது.

''ஏய் என்ன புள்ள... உப்ப அள்ளிக் கொட்டியிருக்கே?''

"என்ன ஆத்தா மிச்ச சில்லறைல அஞ்சு ரூவா கூட இருக்கு?'' என்கிற தடுமாற்றங் களைப் பார்க்க முடிகிறது. அதைக் கட்டுவது போல வந்து சேருகிறான் ஜவஹர். ஸ்பெஷல் தோசை போடச் சொல்லிவிட்டு அவளையே வெறிக்கிறான்.

''தோசை எனக்கில்ல, ஆஸ்பத்திரியில இருக்கற தாமுக்கு... பாத்து போடு'' என்கிறான் சற்று சொர சொரப்பாக. பக்கத்தில் கூடவே ஒரு கைத்தடி.

"நேத்து வியாபாரம் சரி இல்லைண்ணே. ஆயிரம் ரூவாய தொடலை'' என்று ஆரம் பிக்கிறான் அவனும் கூட. தகர டின் காலுடன் கூடிய பலகை பெஞ்சில் அமர்ந்தபடி.....

"அந்த ஏட்டுப் பய வந்து ஐந்நூறு ரூவா கேட்டான். பொண்டாட்டிக்கு உடம்பு சொக மில்லியாம். எவ்வளவு வந்தாலும் டாக்ட ருக்கே போவுதாம்'' என்று தொடர்கிறான். ''போவாம...?'' என்று ஒரு கேலிச் சிரிப்பு ஜவஹரிடம்.

"காளியப்பன் சரக்கு பாக்கிய கேட்டான். நாளைக்கின்னுட்டேன். அப்புறம் நம்ம காந்தி டாக்கீஸ்ல படம். மாத்தியிருக்காங்க. உங் களுக்குப் பிடிச்ச படம். பதினஞ்சு நிமிஷம் பிட்டு ஓட்றாங்களாம். சினிமாஸ்கோப்புல...!''

- பேச்சை அங்கேயும் இங்கேயும் கொண்டு சென்று விட்டு, மோகன்ராமிடமும் கொண்டு வந்து நிறுத்துகிறான்.

"அண்ணே, மோகன் ராமுக்கு வந்த வாழ்க் கையைக் கேள்விப்பட்டியா?'' என்று இடை

வெளி விடுகிறான்.

"ஏதோ ஒரு நொண்டிப் பொண்ணு வந்துருக்குன்னாங்க...."

"பொண்ணு நொண்டியா இருந்தாலும் ஸ்ரீதேவில்ல? கண்டுனா ரத்தம் வர்ற கலரு. வகை தொகையில்லாம காசு வேற. மோகனுக்குக் கொடுத்து பரமக்குடிக்கே கூட்டிக்கிட்டுப் போயிடப் போறாங்களாம்."

"சீக்கிரமா போகச் சொல்லு..."

"எங்க...? இந்தப் பய கல்யாணம் இல்லயாணம்னு பேசுனா தெரியும் சேதி. எல்லாம் வக்கீலாகி கோர்ட்டுக்குப் போன பின்னால தாங்கறான்....."

"ஆமா... பெரிய பாரிஸ்டர் ரஜனியாகப் போறாரு பாரு! நினைப்புதாண்டா ரொம்ப பேர் பொழப்பக் கெடுக்குது..." - எகத்தாள பதிலுடன் கத்திரி சிகரெட் ஜவஹரிடம் கருக ஆரம்பிக்கிறது. மூக்குத் துவாரமே புகைக் கூண்டு ஆகிவிட்ட மாதிரி இருக்கிறது.

- பானுவிடம் கூட இறுக்கம் தளர்ந்த மாதிரி ஒரு மாற்றம். கை, கால் அசைவில் உணரும்படியாக ஒரு வேகம். ஜவஹரின் கழுகுக் கண்களில் அது துல்லியமாகப் பதிகிறது.

"டேய் நம்ம கசிவா என்னடா பண்றா?" என்ற கேள்வியை வேண்டுமென்றே ஆரம்பிக்கிறான்.

"ஏழு இடத்துலையோ எட்டு எடத்துலையோ எலும்பு முறிவாம். இந்த ஜென்மத்துக்கு எழுந்திரிச்சு நிக்க முடியாதாம்ல...?!"

"இதுக்கு கொளுத்தியிருக்கலாம்ங்கறே...?"

"பின்னே... நம்ம விஷயத்துல தலையிட்டா கண்ணுக்குக் கண், கைக்குக் கைங்கறதுதானே வழக்கம்?"

"முட்டாப்பயலே... இவ விஷயத்துல இவளை கொளுத்துனா கதையே மாறிப் போகுண்டா. அவதான் தாமுவைக் கொளுத்துனாங்கறது போஸ்டர் போட்ட மாதிரி ஊர் பூரா தெரிஞ்சு போகும். பொட்டத்தனம்பாங்க. அதனாலதானே அடிச்சுப் போட்ட விஷயமே வெளிய கசியலை. இனி பிச்சை எடுத்துத் தானே பிழைச்சாகணும். பாப்போமே. அந்த மோகன்ராம் பய உக்காத்தி வெச்சி சோறு போட்றானான்னு..."

- அவர்கள் பேச்சு சொரேல் என்று இந்த முறை பானுவின் வயிற்றில் ஈட்டியைச் செருகின மாதிரி ஆக்கிவிட்டது.

"ஜவஹர், இப்ப அக்கா எங்க?" என்று கண்களில் கண்ணீரோடு நிமிர்கிறான்.

"யாருக்குத் தெரியும்...? அடிச்சுப் போட்டவங்களல்ல கேக்கணும்."

"அன்னே அத அந்த ஆஸ்ரமக் கிழவன் பாத்துட்டு சிகிச்சை கொடுக்கறானாம்."

"யாரு தேசிகாச்சாரியா?"

"ஆமா..."

"அவனுக்கு நேரஞ்சரியில்லைன்னு



"சிம்மசொப்பனம் கண்டீங்களா?"

"ஆமா; ஆனா அது உனக்கு எப்படி தெரிஞ்சது?"

"குறட்டைய கர்ஜிக்கிற சவுண்டுல விட்டீங்களே!"

- அம்பை தேவா

நினைக்கறேன்'' என்று ஜவஹர் எழுந்து கொள்கிறான். தேசிகாச்சாரி பற்றி தெரிய வந்ததில் மொத்த எண்ணமும் மாறிப் போய் விட்டது.

உடல் முழுக்க மாவுக்கட்டு. வகை தொகை இல்லாத அடி. விபசாரத்துக்கு அழைத்துச் சென்று, நாமமலை அடிவார பாறை மறைவில் வைத்துப் பொறித்து எடுத்து விட்டிருக்கிறார்கள் தாமுவின் ஆட்கள். வேறு கோஷ்டி ஆட்களை வரவழைத்து காரியத்தை முடித்திருக்கிறார்கள். 'செத்து விடக் கூடாது. எழுந்து நடமாடவும் கூடாது' என்கிற நிபந்தனையைக் கச்சிதமாக நிறைவேற்றியிருக்கிறார்கள்.

விடியும் போது ஒரு பாறை மேல் அலங்கோலமாகக் கிடந்தவளை தேசிகாச்சாரிதான் முதலில் பார்த்தவரே... கடவுளே அவர் உருவில் வந்த மாதிரி இதோ கசிவா தெளிவான பார்வையோடு....

"அக்கா..." ஓடிவந்து பெருமூச்சோடு நிற்கிறான் பானு.

"வா உட்கார்..." - அந்த நிலையிலும் கசிவாவிடம் உபசரணை.

"பாவிங்க... படுபாவிங்க... இப்படிப் பண்ணிட்டாங்களே."

"இதை எல்லாம் நானும் எதிர்பார்த்துத் தாண்டி அந்தக் காரியத்த செஞ்சேன்."

"செஞ்சு என்னக்கா பிரயோஜனம்? மோகன் உன்னை என்ன பேச்சு பேசிடிச்சி பாத்தியா?" நின்றபடியே விசும்புகிறான்.

"அவன் கிடக்கறான் விடு. எப்படி இருக்கு வியாபாரம்? பாட்டி எப்படி இருக்கா...?"

"த்ச்சொ..." - பானு கவனி போல் செருமும் போது தேசிகாச்சாரி வருகிறார். பானுவை ஊன்றிப் பார்க்கிறார்.

"நீ மந்நா பேத்திதானே?"

- பானுவிடம் தலையசைப்பு.

"உக்காந்து பேசு" - என்று சொல்லிவிட்டு

வெளியேற ஆரம்பிக்கிறார். அதிர்வில்லாத நடை.

"நல்லவேளை உன்னை இவர் பார்த்தாரு. ஆமா எப்படி இருக்கு வலி?"

"வலியே இல்லை பானு. அப்பப்போ சூரணம் பச்சிலைன்னு தர்றாரு... பசி கூட தெரியலை. ரொம்ப சுகமாக இருக்குடி..."

– உடல் முழுக்க கட்டோடு ஒரு பெண் பேசும் பேச்சா இது? ஆச்சரியமாக இருக்கிறது பானுவுக்கு.

"ஆமா... மோகனைப் பாத்தியா?" – சுசீலாவின் கேள்வி முன் அந்த ஆச்சரியம் அழிந்து சோகம் கட்டிக் கொள்கிறது.

"கவலைப்படாதே. எல்லாம் நல்லபடி நடக்கும்."

"எந்த நம்பிக்கைலக்கா சொல்றே? அனேகமா பாட்டி போயிடுவான்னு நினைக்கறேன். நீயும் இப்படி இருக்கே... நடுக்காட்டுல சிங்கம் புலிங்க கிட்ட சிக்கிக்கிட்ட மாதிரி இருக்கு..."

"புரியுது பானு. ஆனாலும் எதாவது ஒரு வழி கிடைக்கும்னு தோணுது. இப்ப எனக்குக் கிடைக்கலியா?"

"எனக்கு நம்பிக்கை இல்லைக்கா. என் வரைல எல்லாம் முடியப் போகுது."

"மனசு தளர்ந்துடாதேடி...!"

அந்த கார் இப்பொழுது தெருவிற்குள் நுழைய வழி கேட்டுக் கொண்டு நிற்கிறது. தெரு முழுக்க பாவு விரிப்புகள். ஒருவருக்கு நான்கு பேராக பாவை விரித்து 'அன்னு நீட்டல்' என்கிற வைபவத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். கிழக்கு வானில் நாற்பத்தைந்து டிகிரியில் நின்று கொண்டு கதிர்க்கரம் நீட்டி அந்த பாவு நூலின் ஒவ்வொரு இழை ஈரத்தையும் உறிஞ்சிக் கொண்டிருக்கிறான் சூரியன். வாலறுந்த நாயும், கறிக்கோழிகளும் ஏதோ சடுகுடு மைதானம் போல அந்த இடைஞ்சலிலும் ஓடி விளையாடிய படியிருக்க, ஆங்காங்கே சாக்கடைகளில் பன்றிகள் படுத்துக் கொண்டு நீரோட்டத்தை அடைத்துக் கொண்டிருக்கின்றன.

அனைத்துக்கும் நடுவில் கார் ஹாரன் திரும்பத் திரும்ப அலற, ஒரு பாவுக்காரன் வந்து பாவை இழுத்துக் கட்டி, போய்க்கோ என்பது போல பார்க்கிறான். அப்படியே காருக்குள் யார் என்றும் பார்க்கிறான். உள்ளே நரசிம்மன்!

காரும் மோகன்ராமின் ஓட்டு வீட்டு முன் தேங்கி நிற்கிறது.

கம்பீரமாக காரை விட்டு இறங்கும் நரசிம்மனை வீதியே பார்க்கிறது. உள்ளிருந்து வெளியே வரும் மகாலட்சுமியும் கூட காரைப் பார்த்து வாயைப் பிளக்கிறாள்.

"என்ன மகா பார்க்கிறே... புது கார்! நேத்துத்தான் வாங்கினேன். உடனேயே மகளையும் மாப்பிள்ளையையும் பார்க்கக் கிளம்பி வந்துட்டேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே பிரவேசிக்கிறான்.

கனகா பூக்கட்டிக் கொண்டிருக்கிறாள். அப்பா வரவும் அளவாகச் சிரிக்கிறாள்.

"என்னம்மா எப்படி இருக்கு அத்தை வீடு...?" கேட்கும்போதே பாய்விரிகிறது. அமருகிறான்.

"நல்லாருக்குப்பா... அத்தை ஒரு வேலை செய்ய விட மாட்டேங்கறா."

"ஆமா எங்க மாப்ளை...?" – கேள்வியோடு கொண்டு வந்த பூ பழத்தை அடுக்குகிறான்.

"வெளிய போயிருக்கான்... வந்துடுவான்" என்றபடியே மகாலட்சுமி அவற்றை வாங்கிக் கொள்கிறாள்.

"சரி... மகா ஒரு முக்கிய விஷயம். நாள் நிச்சயித்து முடிச்சிடலாம்னு நினைக்கறேன். என்ன சொல்றே...?"

"அவன் கல்யாணப் பேச்செடுத்தாலே ஓட்றான். படிப்புதான் முதல்லையாம்."

"அது பாட்டுக்கு அது. இது பாட்டுக்கு இது. எனக்கும் மாப்ளை படிக்கணும். அதான் முக்கியம்."

"வருவான். நீயே கேட்டுக்கோ..." – மகாலட்சுமி சொல்லி வாய் மூடிய வேளை வாசல்புறம் யாரோ வரும் சப்தம்.

"மாப்ளைதான் போலருக்கு..." திரும்பிப் பார்த்த நரசிம்மனின் காதில் ஆமோதிப்பாக வீதி பிள்ளையார் கோவில் மணி சப்தம்.

ஆனால் வாசலில்...!

(தொடரும்)



"உன் தலை குளோப் மாதிரி இருக்குன்னு உங்க பையன் கிண்டல் செஞ்சான் பொறுத்துக்கிட்டேன்; நான் தூங்கறப்போ அதில் 'மேப்' வேற வரைஞ்சு வைக்கணுமா?"

— பாலா

ஸ்ரீகிருஷ்ணா அருள வேண்டும்!

பம்பாய் கலவரங்களுடன் தொடர்பு கொண்ட ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் விசாரணையில், பால்தாக்கரே மீதான நான்கு கிரிமினல் வழக்குகளை சிவசேனை - பி.ஜெ.பி அரசு வாபஸ் பெற்றுள்ளது. இது சம்பந்தமான ஆவணங்கள் தனிச் சலுகை பெற்றவை என்றும், அவற்றைப் பொதுமக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் அரசு வாதாடுகிறது. இந்த ஆவணங்களை ஏற்கெனவே பார்வையிட்டுள்ள நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா, இதுபற்றி ஒரு முடிவுக்கு வருமுன்னர், மும்பையில், இந்த விவகாரம் பற்றி எக்கச்சக்க சர்ச்சைகள்! விசாரணையின் எல்லைக்கு அப்பாற்பட்ட விஷயமாக இருந்தாலும், பொதுவாழ்க்கையின் அமைதியைக் குலைக்கக்கூடிய தன்மை உடையதாக இருந்தாலும் மட்டுமே ஆவணங்களை வெளியிடாமல் இருக்கலாம்! ஏற்கெனவே நீதிபதி, டைப்பிஸ்ட், ப்யூன்கள், இன்னபிறர் படித்துவிட்ட ஆவணங்களைப் பற்றி என்ன இரகசியம் வேண்டிக் கிடக்கிறது என்பது பலருக்கும் புரியாத புதிர்! இது மாநிலத்தின் 'பாதுகாவல்' பிரச்னையா, மாநில அரசின் தன்மானத்தைப் பாதுகாக்கும் பிரச்னையா? ஸ்ரீகிருஷ்ணா பதில் சொல்லி அருள வேண்டும்!

சவாலே சமாளி!

தாக்கரேயின் ரிமோட் கண்ட்ரோலில் மாட்டிக்கொண்டு தவிப்பது எப்படி இருக்கிறது என முதல்வர் ஜோஷியிடம் கேட்கப்பட்டபோது, அவர் சிரித்துக் கொண்டே, 'அரசு விவகாரங்களில் யாரும் தலையிடுவதில்லை' என்று சமாளித்து விட்டார். ஆனால் பாலா சாஹேப்போ, "கடந்த இரண்டு வருடங்களாக இந்த அரசு ஒன்றும் சாதித்து விடவில்லை! இனியும் இந்த நிலை நீடித்தால், அடுத்த தேர்தலுக்கு நான் மக்களிடம் சென்று வோட்டு கேட்க மாட்டேன். இதுவரை ரிமோட் கண்ட்ரோலை இயக்கவில்லை எனினும், ஒவ்வொரு மந்திரியையும் விரட்டி விரட்டி வேலை வாங்க வேண்டியிருந்தது. இனிமேல் சும்மா இருக்க முடியாது. ரிமோட்டை இயக்கித்தான் ஆக வேண்டும். என்னை நம்பி வோட்டுப் போட்டவர்களை ஏமாற்ற முடியுமா?' என திட்டவட்டமாகக் கூறி விட்டார். ஜோஷியிடம் இதற்குப் பதில் இருக்குமா?

சுபதினம்!

"உங்களுக்கெல்லாம் civic sense ஏ இல்லை! குவிந்து கிடக்கும் குப்பை கூளத்தையும், திறந்து கிடக்கும் சாக்கடைகளையும், குண்டும் குழியுமான ரோடுகளையும் கண்டும் காணாத மாதிரி செல்கிறீர்களே! உங்களுக்கு இரத்தம் கொதிக்க வேண்டாமா?" இப்படிக் கேட்டவர் மும்பையின் புதிய மேயர் விசாகா ராவூத்; கேட்கப்பட்டவர்கள், அவர் தலைமையில் கார்ப்பரேஷன் அமைத்திருக்கும் கார்ப்பொரேட்டர்கள்! யாருக்காவது "உறைக்க" ஆரம்பித்

இலவசக் கச்சேரிக்கு இரண்டரைக் கோடி ரூபாய்!





• பவார்



• தாக்கரே

தால், மும்பைவாசிகளுக்கு அதுதான் சுப தினம்!

நான் ஆணையிட்டால்

பவார் காய்களை நகர்த்தத் துவங்கி விட்டார், மராத்திய மண்ணைப் பொறுத்தவரை, பூனைபோல் பதுங்கிக் கிடந்து விட்டு புயலாகப் புகுவது அவருக்குக் கைவந்த கலை! துவண்டு கிடக்கும் காங்கிரஸைத் தூக்கி நிறுத்தும் முயற்சிகளில் இப்போது தீவிரமாகி வருகிறார். கேசரி, இவரது ஆதரவாளர்களை அலட்சியப்படுத்தி, சரத் திகேவுக்கு மாநில காங்கிரஸ் தலைமைப் பதவியைத் தந்தால், சும்மா விடுவரா பவார்? வெவ்வேறு கமிட்டிகளில் தம் ஆட்களை முக்கிய நிலைகளில் நிறுத்தியிருக்கிறார்.

அநியாய வாடகை!

மும்பையின் சில பகுதிகளில், குடிசையில் வாழ்பவர்களே சதுர அடிக்கு ஐந்து ரூபாய் என்ற கணக்கில் வாடகை கொடுக்கையில், மரீன் டிரைவ் போன்ற பிரதான பகுதிகளில் வசிப்பவர்கள், சதுர அடிக்கு ஐந்து பைசா என்ற ரீதியில் வாடகை கொடுக்கும் பைத்தியக்காரத்தனத்துக்கு ஒரு முடிவு கட்டும் காலம் நெருங்கிவிட்டது!. அரதப் பழசான மும்பை ரெண்ட் கண்ட்ரோல் ஆக்ட் மாற்றி அமைக்கப்பட உள்ளது. இனியாவது மராமத்து செய்யப்படாமலே கிடக்கும் புராதனக் கட்டடங்களில் மராமத்து வேலைகளும், மூடியே கிடக்கும் 50000க்கும் மேற்பட்ட ஃப்ளாட்களுக்கும் நல்ல நேரம் பிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது!

வல்லவனுக்கு வல்லவன்!

மும்ப்ராவில், அப்துல் சலாஃபி என்ற ஒரு ISI ஏஜெண்டை மும்பை போலீஸ் 'லபக்' கியது!. இந்தத் தீவிரவாதி ஏற்கெனவே ஹைதராபாதில் பல பயங்கரங்களுக்குக் காரணமானவன். பம்பாய் கலவரங்களின் 'ஆனிவர்சரி' நாளான மார்ச் 12 அன்று, ரிமோட் கண்ட்ரோல் தலைவரைத் தீர்த்து கட்ட, அவரது இல்லமான 'மாதோஸ்ரீ'க்கு அருகில் ஒரு 'ரிமோட் கண்ட்ரோல் பாம்' வைக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்த வேளையில், போலீசாருக்கு சின்ன 'துப்பு' கிடைத்தது. மாதோஸ்ரீயிலிருந்து மிக 'ரிமோட்'டான இடத்தில் அவன் இருந்த போதே, அவனைக் கைது செய்து விட்டனர்!

மின்சாரக் கனவு!

அடிக்கடி 'காண்டில் லைட்' டின்னர் சாப்பிட்டு அலுத்துப் போன காட்கோபர் வாசிகள் (பவர்கட் - உபயம்), புதுமையான முறையில் 'காண்டில் லைட்' ஊர்வலம் நடத்த முடிவு செய்தனர். ஒளிந்து ஒளிந்து கண்ணாமூச்சி ஆடும் மின்சாரத்தைத் தேடிக் கண்டு பிடிக்கும்முகமாக இந்த ஊர்வலம். மின்சார இலாகாவினருக்குக் கண்டனம் தெரிவிக்க உதவியது. 'தடை' தாற்காலிகமானது, ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது' என்கின்றனர் மின்சார இலாகா உயர் அதிகாரிகள்!

குறிஞ்சி மலர்

பல வருட அஞ்ஞாத வாசத்துக்குப் பின் வெளியே வந்து, தம் தேன் குரலால் இசை மழை பொழிந்தார் லதா! "நான் ஒரு ஹீரோயினாக இருந்திருக்கக் கூடாதா? எனக்கும் லதா பின்னணி பாடியிருப்பாரே' என ஷாருக் கான் புலம்ப, 40,000 மக்கள் மயக்கும் குரலுக்குக் கட்டுண்டிருந்தனர். லதா ஒரு பைசா வாங்காததுடன், தம் பங்குக்கு சிவ் உத்யோக் சேனாவுக்கு ஒரு லட்சம் நன்கொடையும் வழங்கினார்! பதிலுக்கு தாக்கரே ஒரு தங்கக் கிரீடம், முதல்வர் ஜோஷி ஒரு பத்திரம்... இவை பெரிசல்ல; இந்நிகழ்ச்சியை ஒலி - ஒளி பரப்ப ஸோனி டி.வி.க்காரர்கள் லதாவுக்கு வழங்க முன்வந்தார்களே இரண்டரைக் கோடி ரூபாய்! இதுபோல் 'இலவச' நிகழ்ச்சி அளிக்கும் பாக்கியம் வேறு யாருக்குக் கிடைக்கும்!

அவசர(மில்லாத) போலீஸ்!

ஃபிலிம்பேர் அவார்டு நிகழ்ச்சி இரவு 11.30 மணிக்கு 'ஜபர்தஸ்தாக' நிறுத்தப்பட்டதல்லவா? லதா நைட் மட்டும் 12.45 வரை நீடித்தது! அரசு அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் சினிமா ஜாம்பவான்களும், முதல் வரிசையில் தாளம் போட்டுக் கொண்டிருக்கையில், இந்த நைட்டிங்கேலின் பாடலை நிறுத்தும் துணிவு யாருக்கும் வரவில்லை. இருந்தாலும், மீசையில் மண் ஒட்டாத பாவனையில், மேடையில் அகப்பட்ட சவுண்டு இன்ஜினியரை உள்ளே தள்ளி ஒரு சாத்து சாத்தியிருக்கிறார்கள், பாவம்!

மும்பையிலிருந்து: **ஜெயஸ்ரீராஜ்**

என்ன செய்கிறது அசோசியேஷன்?

ஜி.என்.எஸ்., தேவி கோல்டு ஹவுஸ் போன்ற நிதி நிறுவனங்களில் ஏராளமானோர் டெபாசிட் செய்து ஏமாந்த கதை தெரியும். அவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க ஓர் அசோசியேஷன் அமைக்கப் பட்டதல்லவா! அந்த அசோசியேஷன் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறது?

'சுமார் பதினைந்தாயிரம் பேருக்கு மேல் உறுப்பினர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஒவ்வோர் உறுப்பினரிடமும் சந்தாவாக இருபது ரூபாயும்





வழக்கு நடத்துவதற்கான செலவுகளுக்கென்று நூறு ரூபாயிலிருந்து நூற்றைம்பது வரையிலும் வசூல் செய்தார்கள். அதன் பிறகு அசோசியேஷனில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்றே எங்களுக்குத் தெரியவில்லை!' என்று நமக்குச் சிலர் கடிதம் எழுதவே, விஷயத்தைக் கண்டறிய அசோசியேஷனுக்குச் சென்று விசாரித்தோம்.

சென்னை தி.நகர் வைத்தியராமன் தெருவில், பெரிய வீட்டை ஒட்டிய கார் ஷெட்டில், டெபாசிட்தாரர்கள் சங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் சென்ற சமயம் இரண்டு மூன்று பெரியவர்கள் டேபிள், சேர் போட்டு அமர்ந்து கொண்டு வருபவர்களுக்கு பதில் சொல்வதிலும், ஏதோ எழுதுவதிலும் பிஸியாக இருந்தார்கள். சுற்றிலும் கவலை தோய்ந்த முகங்கள். தரையில் பாய் போட்டு இரண்டு பெண்மணிகள் நூற்றுக்கணக்கான டிமாண்ட் டிராஃப்டுகளை எண்ணி அடுக்கிக் கொண்டிருந்தார்கள்.

டெபாசிட்தாரர்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் என்று அறிமுகம் செய்து கொண்டார்கள் விஜயலட்சுமியும், சசிகலாவும். விஷயத்தைச் சொன்னோம்.

"சரியான சமயத்தில் வந்து கேட்டீங்க ஸார். வீட்டு வேலைகள் மற்றும் எங்கள் கணவர், குழந்தைகளுக்கான பொறுப்புக்களைச் செய்து விட்டு இந்த சங்கப் பணிகளை கவனிக்க வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கிறோம். விசேஷ கோர்ட் போட்டு




''நம்ம நீதி அமைச்சரு இப்படி பண்ணு வாருன்னு நான் கொஞ்சங்கூட எதிர்பார்க் கலிங்க!''

''அப்படி என்னங்க பண்ணிட்டாரு?''

''சொந்தமா திருவோடு வச்சிருக்கிறவனெல் லாம் வருமான கணக்குக் காட்டணும்னு உத்தரவு போட்டிருக்காரே...!''

– கோவைபுதூர் கே. அனிதா



''அவர் பேருக்கு முன்னால 'சம்மன்' சரவணசாமின்னு போடறாரே, ஏன்?''

''ஒரே மாசத்திலே 108 சம்மன் வாங்கி சாதனை படைச்சவராச்சே!''

– திருச்சி எம்.மல்லிகா



''என் கணவர் தனக்கு முடி அதிகமா வளர்ந்து விட்டதுன்னு ஞாபகமறதியாக சலூனில் போய் ஹேர்கட் செஞ்சுக்கிட்டு வந்திருக்காரு!''

''இதிலென்ன ஞாபகமறதி?''

''அவர்தலை முழுக்க வழுக்கையானதால போன மாசம் தான் புதுசா ஒரு 'விக்' மாட்டிட்டு வந்தாரு!''

– பாலா

செயல்பட்டால்தான் வழக்குகளை விரைவாக முடிக்க முடியும் என்பதால், மாநில அரசு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. நாங்கள் நிதியமைச்சர், சட்ட அமைச்சர், சட்டத்துறைச் செயலாளர் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருக்கிறோம். முதல்வரைச் சந்தித்து மனு கொடுத்திருக்கிறோம். மாநில அரசு விசேஷ கோர்ட் அமைக்க மத்திய அரசின் அனுமதி வேண்டும். அதற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இதை டெல்லியில் விரைவுபடுத்த இருக்கிறோம்.''

''ஆயிரக்கணக்கான டெபாசிட்தாரர்களிடம் இருந்து பணம் வசூலித்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே!''

''மெம்பர்ஷிப் கட்டணம் 21 ரூபாய். தவிர பத்தாயிரம் ரூபாய்க்குள் டெபாஸிட் செய்தவர்களிடம் வழக்கு நடத்துவதற்கான கட்டணமாக ரூபாய் நூறும், அதற்கு மேல் டெபாசிட் செய்தவர்களிடம் இருநூறும் வசூல் செய்கிறோம். தமிழ்நாடு முழுக்க உறுப்பினர்கள் இருக்கிறார்கள். தினமும் நிறைய பேர் 'எங்களையும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்று வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் மிகவும் யோசித்துத்தான் மெம்பர்ஷிப் எண்ணிக்கையை அதிகப்படுத்துகிறோம். பிரபல வழக்கறிஞர்களான என்.டி. வானமாமலை, கே.எம். விஜயன் ஆகியோரை வைத்துத்தான் வழக்கு நடத்துகிறோம்.

''போலீஸ் சுறுசுறுப்பாக வழக்கை விசாரித்து, மாஜிஸ்திரேட் கோர்ட் விசாரணையை துரிதப்படுத்த வேண்டும் என்றும் ஏமாற்றிய நிதி நிறுவன அதிபரின் மிச்ச, சொச்ச சொத்துக்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம். நாங்கள் வசூல் செய்யும் பணத்தை மதுரை வங்கியில் போட்டு வைத்திருக்கிறோம். முறைப்படி செலவு செய்கிறோம். எங்கள் கணக்கு வழக்குகள் ஒரு திறந்த புத்தகம்... ஆனால் எங்களால் மெம்பர்களுடன் 'கம்யூனிகேட்' செய்வதற்கு அவகாசம் இல்லை. ஆகவே பெரும்பாலான மெம்பர்கள் 'ஒன்றும் தகவல் இல்லையே!' என்று கவலைப்படக்கூடும். அவர்கள் கலங்கத் தேவையில்லை. இனிமேல் மாதம் ஒருமுறை டெபாசிட்தாரர்களைக் கூட்டி, சங்கத்தால் எடுக்கப்படும் நடவடிக்கைகளைச் சொல்ல இருக்கிறோம். அலுவலகத்தையும் இன்னும் கொஞ்சம் விசாலமான இடத்துக்கு மாற்றலாம் என்ற எண்ணமும் இருக்கிறது!'' என்று சொன்னார்கள் விஜயலட்சுமியும், சசிகலாவும்.

''வங்கியிலிருந்து ஸ்டேட்மெண்ட் வராததால் வசூலான தொகையை சரியாகக் கணக்கிட்டுச் சொல்ல முடியவில்லை!'' என்றும் சொன்னார்கள்!

– ஸ்ரீநிவாசன்

படங்கள் : யோகா

ஜாமீன் கிடைக்காத சிரிப்புச் சிறையில்...

✉ பெண் சிசுக் கொலை ஆய்வுக்கு, சம்பந்தப்பட்ட கிராமங்களுக்குத் துணிச்சலுடன் சென்ற ஷ்யாமளா அவர்களின் சமுதாய நோக்கு, பெண் இனத்துக்கே பெருமை சேர்க்கக்கூடியது!

கிருஷ்ணகிரி - 1,

ஆர். மாதவராமன்.

✉ 'சிரித்துச் சிரித்துச் சிறையிலிடுங்கள்' படித்து, ஜாமீனில் கூட வெளிவர முடியாமல் 'சிரிப்புச் சிறையில்' கிடந்து தவித்தோம்.

மகபூப்பாளையம்,

செ. ராஜ்குமார்.

✉ 'வாழ்வெனும் போராட்டம்' திரை உலகில் பணிபுரிபவர்களின் இன்றைய நிலையை வெட்ட வெளிச்சமாகக் காட்டியது. ஒவ்வொரு வாரமும் ஒரு படிப்பினையைச் சொல்லுகிறது, மத்யமர் கதை.

புதுதில்லி - 60,

எஸ். சாம்பசிவன்.

✉ சூப்பர் கம்ப்யூட்டர் பற்றிய கார்ட்டூன் சிரிப்பை வரவழைத்தாலும், சிந்திக்கும் போது மன வேதனையைத் தந்தது. காரணம் அப்போது தான் தினசரியில் பார்க்க நேர்ந்த செய்தி இதோ : "1992ம் ஆண்டு முதல் 1996-ம் ஆண்டு முடிய இந்தியாவில் நடந்த மிகப் பெரிய ஏழு ஊழல்கள் மூலம் பத்தாயிரத்து இருநூறு கோடி ரூபாய் இழப்பு!

மதுரை - 16, வி. பி. மகராசி.

✉ கதையென்றால் இப்படித் தான் இருக்க வேண்டும். பானுகுமார் எழுதிய 'ஆட்டம்' என்ற கதையைப் படித்ததும் சற்று ஆடிவிட்டேன். அம்புஜத்தின் ஆதங்கத்தை அற்புதமாகப் படைத்திருக்கிறார். இதைப் படித்தாவது இப்போதுள்ள இளஞ்ஜோடிகள் வயதானவர்களின் மனக் கிலேசத்தைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்!

சென்னை - 31,

ப. ராஜலட்சுமி.

✉ வரி வரியாக பட்ஜெட்டை அலசி ஆராய்ந்து, அருமையானதொரு ஆராய்ச்சிக் கட்டுரை போன்று எழுதப்பட்ட தலையங்கத்தின் ஒவ்வொரு வரியும் பாராட்டுக்குரியது!

சென்னை - 30,

புளியரை கணேசன்.

பரிசுக் கடிதம்

✉ பெண்களுக்கு இடஒதுக்கீடு தேவைதானா என்ற விவாதம் படித்தேன். இடஒதுக்கீடு எந்தக் கோணத்தில் வந்தாலும் அநீதியானது. ஒரு பெண்ணுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியது, அவள் ஒரு பெண் என்பதால் கிடைக்காமல் போகக் கூடாது. அதே போல் அவளுக்குத் தகுதி இல்லாத போது ஒரு பெண் என்பதால் அவளுக்கு வழங்கப்படவும் கூடாது.

'பெண்கள் ஆண்களுடன் போட்டி போட இயலாது. எனவே இடஒதுக்கீடு தேவை' என்ற வாதம் அபத்தமானது. த.மா.கா.வின் மூத்த உறுப்பினரான பொன்னம்மாள் எப்படி அனைவருக்கும் அக்காவானார்? தொடர்ந்து அவர் நிற்கும் ரிசர்வ் தொகுதியில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஆண்கள் அனைவரும் தோற்றுப் போனது ஏன்? ஏனென்றால், அவர் சிறு வயதிலேயே அரசியலுக்கு வந்து பணியாற்ற ஆரம்பித்து விட்டார். அதுதான் காரணம்.

மூக்காயி மகன் பிரதிநிதி ஆவதற்கு இப்போது என்ன தடை இருக்கிறது? எந்தவித உழைப்பும் இன்றி, முன் அனுபவமும் இன்றி, மூக்காயிக்கு தங்கத் தாம்பாளத்தில் வைத்து "மக்கள் பிரதிநிதி பதவியை"த் தர வேண்டும் என்று கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

நெல்லை மாநகராட்சியை எடுத்துக் கொள்ளுங்கள். எங்கள் மேயர் திடீரென்று தேர்தலுக்காக தி.மு.க. உறுப்பினராகி, மேயர் ஆகிவிட்டார். கட்சியிலும், அரசியலிலும், பொதுப் பணியிலும் நாற்பது ஆண்டுகளாக உழைத்தவர்களிடமிருந்து, தலித் பெண் என்பதாலேயே எந்தவித உழைப்புமின்றி மேயர் பதவியைப் பிடுங்கிக் கொண்டார். இதனைத்தான் சுதா இராமலிங்கம் ஆதரிக்கிறார். என்னே நீதி! என்னே சுயமரியாதை!

திருவண்ணாதபுரம்,

தி.க. இராமகிருஷ்ணன்.

✉ 'பிரபஞ்சன்' அவர்களால் எழுதப்பட்டு வரும் 'பூக்கள் நாளையும் மலரும்' என்ற தொடர்கதையில் (மிக நல்ல தொடர்கதை) ஓர் இடத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது : "ராஜிக்கா புருஷன் வேறு ஒருத்தியோட வாழ்ந்துக்கிட்டு இருக்கார். இவங்ககிட்ட கொண்டாந்து சேர்க்கணும்னு அனுமாரைக் கேட்டுக்கிறாங்க..." "பாவம். அனுமார், இராமாயண காலத்திலேந்து அவருக்கு இதே வேலை." இவ்வாறு இரு கதாபாத்திரங்கள் மூலமாகக் கதாசிரியர் குறிப்பிட்டுள்ளது மிக வேதனையான ஒன்று. ராமாயணக் கதையையே உருமாற்றி கொச்சைப்படுத்தியிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. அப்புறம் சமாதானப் படுத்துவது போல, "உஸ். இப்படியெல்லாம் பேசக்கூடாது" என்ற வசனம் வேறு! குழந்தையைக் கிள்ளுவானேன்? தொட்டிலை ஆட்டுவானேன்?

சென்னை – 4, கி. மாதவன்

✉ 'தேசம் காத்தல் செய்' வெறும் கவிதை மட்டுமல்ல, 'கலிகாலம்' எனக் காலத்தின் மீது பழிபோட்டு, காலத்தைக் கடத்தும் கண்மூடி மனிதர்களின் கண்களைத் திறக்கும் திறவுகோல்!

நாகை, சந்திரா.

வையவன்

காதல் என்பது...

வக்கீல் தன் உணர்ச்சிகளோடு விளையாடுகிறார் என்று நினைத்தாள் வத்சலா.

"ரெண்டு நாள்தானே! உள்ளே இருந்துட்டுத்தான் வரட்டுமே" என்று வேறு சொன்னார்.

வத்சலாவின் மூக்கும் விழியும் துடித்தன. உதடு முறுமுறுத்தது.

'இந்த மனுஷர் காதலித்திருப்பாரா? கறுப்புக் கோட்டை மாட்டிக் கொண்டு கேஸ் கட்டைச் சுமந்து லொங்கு லொங்கென்று அலையத் தெரியும். வேறு என்ன தெரியும்? மனுஷ மனம் தெரியுமா? நேசித்த மனிதர் சப் ஜெயிலில் இருக்கிறார் என்று ஒரு பெண் துடிக்கிற துடிப்பு விளங்குமா?'

அவள் மனசில் ஓடிய எண்ணங்கள் கண்ணில் தெரிந்து விட்டதோ என்னமோ?

வக்கீல் கல்யாணராமன் தொண்டையைக் கனைத்து விட்டுப் பேசினார்.

"தோ பாரும்மா! மணி ரெண்டரை. இனிமே பெய்ல் பெட்டிஷன் மூவ் பண்ணி மாஜிஸ்திரேட்கிட்டே அது போயி, அவர் அனுமதி கொடுக்கறது எல்லாம் சாத்தியம் இல்லை. நோ அதர் கோ."

வத்சலா அவரை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

"நாளைக்கு சனி. மறுநாள் ஞாயிறு. கோர்ட் லீவு. ரெண்டு நாள் ஒண்ணும் பண்ண முடியாது. திங்கட்கிழமை வரை பொறுத்துக்கோ. திங்கட்கிழமை மத்தியானத்துக்குள்ளே நான் வேலுச்சாமியை வெளியே கொண்டு வந்துடறேன்."

அவளைப் பார்க்காமலேயே பேசிக் கொண்டு போன கல்யாணராமன் யதேச்சையாக நிமிர்ந்தார்.

வத்சலாவின் கண்களில் இதுவரை அவர் பார்த்த உறுதி, தீர்மானம் எல்லாம் சட்டென்று திரை விலகிய மாதிரி ஒரு தீன பாவம்.

கண்களில் நீர் முத்துப் படலம் திரண்டு உருவாகி விளிம்பில் முட்டிக் கொண்டு நின்றது.

அவருக்கு சங்கடமாக வந்தது.

தொழிலில் நிறைய கண்ணீர் பார்த்தாயிற்று. அது ஏனோ வெறும் உணர்ச்சி விரயம்... வேஸ்ட்... என்கிற மனப்பாங்கும் வந்தாயிற்று.

எனினும் இப்படி அபூர்வமாக ஓரிரு சந்திப்புகள் நேர்ந்து விடுகின்றன. கண்ணீருடன் சந்திப்புகள்.

இன்னும் மதிப்பைக்கோரும் சந்திப்புகள்.

"ஸ்ஸ்...." என்று கொதிக்கிற காப்பி தம்ளரைத் தொட்டு விட்டவர் போல் அவளை அடக்க முயன்றார்.

வத்சலா தாராளமாகக் கண்ணீர் விடத் தொடங்கினாள். ஒரு கேவல் ஓசை கூட இணைந்து கொண்டது.

"தோ பாரும்மா!" என்று நாற்காலியை விட்டு எழுந்து மேஜை விளிம்பைத் தொட்டார்.

வத்சலாவின் கேவல், முந்தானைத் தலைப்பை வாயில் மூடிய விசும்பலாகிக் கொஞ்சம் கூடுதல் ஒலி.

கல்யாணராமனுக்கு அதை அதட்டி அடக்கலாம் என்று தோன்றியது. முடியவில்லை. மனசு வரவில்லை.

குரலை நயமாக, இதமாக, குழைவாக மாற்றினார்.

"என்னாலே ஆகக்கூடியது ஒண்ணுமில்லே!"

வத்சலா முகத்தைத் தூக்கி அவரைப் பார்த்தாள்.

"எந்த மாஜிஸ்திரேட்டையும் 'என் கட்சிக்காரி அழுறா சார்! கொஞ்சம் பெய்ல் அட்மிட் பண்ணுங்க'ன்னு கேக்க முடியாது."

வத்சலாவின் விசும்பல் அதிகரித்தது.

இது சரிப்படாது.


இவளுக்கு விஷயத்தை விளங்க வைக்க வேண்டும். ஆனால் முறை இதுவல்ல.

கல்யாணராமன் கண்டிப்பானார்.

"உனக்கு வயசு எத்தனை?"

வத்சலா திகைத்துப் போய் அவரைப்

[redacted]



பார்த்தாள்.

கேள்வி திசை மாறுகிறதே!

மௌனமானாள். பதிலளிக்கவில்லை.

"கேக்கறேன் இல்ல... ஒனக்கு என்ன வயசு?"

"பத்தொம்பது."

"வேலுச்சாமிக்கு?"

தாமதமாக விளங்கிக் கொண்டு பதில் சொன்னாள்.

"இருபத்து நாலு."

"பரவால்லே. ரெண்டு பேரும் மேஜர்தான். ம்ம் நீ படிச்சிருக்கியா?"

"ம்ம்..."

"எத்தனாவது?"

"ப்ளஸ் டூ."

"பாஸா?"

"பாஸ்" என்று தலையசைத்தாள் வத்சலா.

"ப்ளஸ் டூ பாஸ் பண்ணியிருக்கே. சொல்றதை காதிலே வாங்கிக்க மாட்டேங்கிறே. நீ நெனச்சதுதான் நடக்கணும்னு பிடிவாதம் பிடிக்கறியே. இது கோர்ட் விவகாரம். கல்யாணப் பந்தியிலே வேண்டியவருக்குத் தனி இலை போட்டு விடறா மாதிரி இல்லே... புரொசீடிங்ஸ் இருக்கு.. புரொசீஜர் இருக்கு."

வத்சலா எதற்கும் மசியத் தயாரில்லை என்று அவன் பார்வையில் ஆணியடித்து மாட்டியிருந்தது.

தானே தன் நேரத்தை வீணாக்குவதாக உணர்ந்தார் கல்யாணராமன்.

கடிகாரத்தைப் பார்த்தார். 2:35. சேம்பருக்குப் போய்க் கூட மாஜிஸ்திரேட்டைச் சந்திக்கலாம்.

இவள் முழுக்கச் சொல்லவில்லை. தான் முழுக்கக் கேட்கவில்லையோ? ஹெல். ஜாமீன் வக்கீல் என்று பெயர் எடுத்து எடுத்து மனசின் ஸ்டைடத்திலேயே ஒரு இம்யூனிட்டி வந்து விட்டது. ஒரு சூபர்ஃபிஷியாலிடி வந்து விட்டது.

தனக்குள் தலைநீட்டிய தன்னிரக்கத்தை நறுக்கென்று கத்திரித்து, கல்யாணராமன் நிகழ்காலத்துக்கு வந்தார்.

"வேலுச்சாமி ஒனக்கு என்ன வேணும்?"

"..............."

"அதாவது, ஒனக்கு சொந்தக்காரனா?"

"இல்லே." தலையாட்டினாள்.

"உனக்கும் அவனுக்கும் எப்படி தொடர்பு?"

அவள் திக்கித் திக்கிச் சொல்ல ஆரம்பித்தாள்.

"**எ**த்தினி தபா ஒனக்குச் சொல்றது? இப்பிடிக் கொப்பரைத் தேங்காயைப் பெரிய உருவா நறுக்கிக் கொண்டு வராதே... நேரம் இழுக்கும்னு?"

பிண்டோ செக்கின் யந்திர உறுமலில் வத்சலாவுக்குக் காது கேட்கவில்லை.

"என்ன சொல்றீங்க?" என்று உரக்கக் கேட்டாள்.

"உக்கும்... பெரிசாக் கூவு" என்று பதிலுக்குக் கத்தினான் வேலுச்சாமி.

எண்ணெய்க்கும், புண்ணாக்குக்கும் ஏற்புடையதாக அவன் போட்டிருந்த காக்கி

டிராயர், கறுப்பு பனியன் வேலுச்சாமியின் சிவப்பு நிறத்திற்கு ஒரு தனிக்கவர்ச்சி தந்தது வத்சலாவுக்கு.

டின்னில் அவள் கொண்டு வந்து கொட்டியிருந்த கொப்பரைத் துண்டு ஒன்றைத் தூக்கிக் காட்டினான்.

அதைத் துண்டு துண்டாக நறுக்கி இருக்க வேண்டும் என்று கத்திரி போலும் சைகை காட்டினான்.

"ப்சா..." என்று அவள் சூள் கொட்டினாள்.

உதட்டைத் திறந்து வெளியே வந்து மீண்டும் உள்ளே போன அவள் நாக்கு அவனை என்னவோ செய்தது. எங்கேயோ இம்சித்தது.

அது ஞாயிற்றுக்கிழமை மாலை.

கிராமமே ஆங்காங்கே டீ.வி. முன் உட்கார்ந்திருந்தது.

பிண்டோ மெஷின் கட்டடத்தில் வத்சலாவைத் தவிர வேறு ஆள் இல்லை.

வேலுச்சாமி அவளை நோக்கி முன்னேறினான்.

வத்சலா அதைப் பார்த்தாள். செக்கைக் கிளறி விடப் பயன்பட்ட முழ நீள மூங்கில் தடியை உருவி உயர்த்திக் காட்டினாள்.

அவன் 'ஹேண்ட்ஸ் அப்'புக்குக் கை உயர்த்துகிறவன் மாதிரி உயர்த்திக் கொண்டே அவளை நெருங்கினான்.

"த... கிட்ட வராதே! ஒடம்பெல்லாம் எண்ணப் பிசுக்கு."

வேலுச்சாமி நின்றான். கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு, அவள் வாசனை வருகிற சமீபம் வரை நெருங்கினான்.

ஒருமுறை மூச்சை இழுத்து உள்வாங்கினான்.

"என்ன மோப்பம் பிடிக்கறியா?" என்று உதட்டைக் கடித்துக் கொண்டு வத்சலா கேட்டாள்.

"பிடிக்க முடிஞ்சதைப் பிடிக்கற டயத்திலே பிடிச்சுட வேண்டாமா?" என்று சொன்னான் வேலுச்சாமி.

"இந்த சினிமாக் கொஞ்சல் தானே வேணாங்கறது!"

"இது இல்லே அது!" என்றான்.

பகீரென்று ஒரு சப்தம் இருவர் மனோலயத்திலும் குறுக்கிட்டது. செக்கின் ஓட்டம் குறைந்து கொண்டே வந்து சக்கென்று நின்றது.

மோட்டார் மட்டும் தனியே உறுமும் ஓசை.

"என்ன ஆச்சு?" என்று பயந்து போய்க் கேட்டாள். இரைச்சல் அடங்கியதால் அவள் குரலில் பயம் தூக்கிக் கொண்டு தெரிந்தது.

வேலுச்சாமி செக்கின் பக்கம் திரும்பிய பார்வையை அவள் மீது நகர்த்தினான்.

"பயந்துட்டியா?" என்றான். அவன் குரலில் கிண்டலோ வக்கணையோ இல்லை. அவள் பயப்பட நேர்ந்த தருணம் குறித்த காதல் பரிவு தான் தொனித்தது.

மதர் தெரசாவின் வாரிசு!

அன்னை தெரசாவுக்குப் பிறகு யார்? என்ற கேள்வி கொஞ்ச காலமாகவே விவாதிக்கப்பட்டு வந்தது.

மூத்த சிஸ்டர்கள் - ஏக்னஸ், ப்ரிசில்லா, ஃப்ரெடரிக் மூவருமே தெரசா அம்மையாருடன் அதிக வருடங்கள் நெருங்கிப் பழகி இருந்தாலும், அவர்களில் எவருக்குமே அவரது வாரிசாக ஆகும் வாய்ப்பு கிட்டவில்லை.

முத்துப் பற்கள் பளிச்சிட, வாய்விட்டுச் சிரிக்கும் சிஸ்டர் நிர்மலாவுக்குத்தான் பதவி கிடைத்தது. பார்க்கையில் 'இவருக்கா 63 வயது ஆகிறது?' என்று யாரும் கேட்பார்கள். மிகச் சிறிய உடம்பு வாகு.

எப்படி சிஸ்டர் நிர்மலாவைத் தேர்ந்து எடுத்தார் தெரசா என்று இன்னும் பல வகைகளில், பலரும் அலசுகிறார்கள்.

அன்னை தெரசா வெளிநாட்டுப் பயணங்கள்

அவள் நெற்றியின் மீது விழுந்த முன் முடி குலுங்கத் தலையாட்டினாள்.

"பெல்ட் அறுந்து போச்சு."

அவன் நிதானமாக நடந்து சென்று மோட்டார் ஸ்விட்சை ஆஃப் செய்தான்.

"இன்னிக்கு கதை அவ்வளவுதானா?"

"அது அவ்வளவுதான். வேற புது பெல்ட் மாட்டினாத்தான் உண்டு."

"மாட்டி விடேன்."

"இருந்ததை மாட்டி விட்டுட்டேன். புதுசு வாங்க டவுனுக்குத்தான் போகணும்."

வேலுச்சாமி டவுனுக்குப் போவதாக இல்லை. போய்ப் புண்ணியமில்லை. டவுனில் ஞாயிறு விடுமுறை.

"அப்ப நான் வீட்டுக்குப் போறேன்."

"ஆஹா... தாராளமாப் போகலாமே."

அவள் போகவில்லை.

காசு வாங்கிப் போடும் மேஜை எதிரில் நாற்காலியில் அவளை உட்கார வைத்து விட்டு செக்கின் மீது ஒரு மூங்கில் தடுக்கைப் போட்டு மூடினான்.

பிறகு ஸ்டோர் ரூமிலிருந்த டவலையும் சோப்பையும் எடுத்துக் கொண்டு வெளியே குழாயடியில் குளிக்கப் போனான்.

வத்சலா காத்திருந்தாள்.

குளித்து சட்டை பேண்டுக்கு மாறி லேசாகப் பவுடர் போட்டுக் கொண்டு அவன் வந்தான்.

மௌனமாக அவனைப் பார்த்து தலையசைத்து மெச்சுதலைத் தெரிவித்தாள்.

நெருங்கி வந்து அவள் தோளை அணைத்து அதே கை விரல்களால் அவள் முகத்தை உயர்த்தினான்.

வத்சலா ஆட்சேபிக்கவில்லை. தன் கையால் அந்த விரல்களைப் பிடித்துக் கொண்டாள்.

"எங்க போய்க்கிட்டிருக்கிறோம்னு உங்களுக்குத் தெரியுதா?"

போகும்போது எல்லாம், நிர்மலாதான் கூடவே துணைக்குப் போவார். அவருக்கு வேண்டிய பணிவிடைகள் அனைத்தையும் காலம் தவறாமல் செய்வார். அதனால் தான் மதர் தெரசாவுக்கு சிஸ்டர் நிர்மலாவைப் பிடித்துப் போயிற்று என்கிறார்கள்.

எய்ட்ஸ் நோய்க்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் மீடியாக்கள் தருகிற கவனம், காண்பிக்கிற அக்கறை எல்லாம், மதங்களுக்குக் கிடைப்பதில்லை என்று வாடிகன் வாசிகள் கவலைப்படுகிற சமயத்தில், அன்னை தெரசா போன்றவர்கள்தான் கொஞ்ச நஞ்சம் கவன ஈர்ப்புச் செய்கிறார்கள். எனவே 'கரிஸ்மா' அல்லது கவர்ந்து இழுக்கிற ஒரு பர்சனாலிடியை அன்னை தெரசா தேர்ந்து எடுக்க வேண்டுமே என்று அவர்கள் கவலைப்பட்டதும் உண்டு.

சிஸ்டர் நிர்மலா வடக்கு பீகார்க்காரர். அப்பா ராணுவ அதிகாரி. இந்து. பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

"நான் படித்த பள்ளிக்கூட ஹாஸ்டலில், ஒருநாள் என் சக மாணவி - அவளும் இந்துதான் - மண்டியிட்டு, சிலுவைக் குறி போட்டுப் பிரார்த்தனை செய்தபோது, அந்தக்கணம் என் மனசெல்லாம் குறுகுறுத்தது. அந்த நாள், அந்த நேரம்தான் என் வாழ்க்கையின் திருப்புமுனை. ஜீசஸ்தான் என் பாதுகாவலர் என்று உறுதி செய்து கொண்டேன்!"



அப்போது நிர்மலாவுக்கு வயது பதினேழு. அதற்கு ஆறு வருடங்களுக்குப் பிறகு மதம் மாறினார். அடுத்த இரண்டாவது வருடம், அன்னை தெரசாவின் மிஷனரீஸ் அஃப் சாரிடீஸ் அவரை அரவணைத்துக் கொண்டது.

— சித்தார்த்

சமயத்தில் அவள் 'பன்மை'யைப் பயன்படுத்துவாள். பயப்படுகிறாள் என்று வேலுச்சாமி புரிந்து கொள்வான்.

"தெரியுமே!"

"சொல்லுங்க"

"பயமில்லாத இடத்துக்கு."

"அப்படி ஒரு இடம் இருக்கா?"

"இருக்கு... நான் ஒன் பக்கத்திலே இருக்கற வரைக்கும்."

வேலுச்சாமி வாய் வீச்சுப் பேர்வழியல்ல. வத்சலாவுக்குத் தெரியும். உணர்த்தியிருக்கிறான். ஊரிலே கங்கையம்மன் திருவிழாவின் போது, அர்ஜுனன் தவசின் போது, பொங்கலுக்கு எருது விடும் திருவிழாவின் போது— இப்படி சமயம் கிடைக்கும்போதெல்லாம்!

வத்சலாவிடம் பல்லிளிக்க வயதுப் பையன்களுக்கு ஒரு பயம்.

வேலுச்சாமி பிஸ்தாவல்ல. எனினும் எல்லோருக்கும் ஒரு மரியாதை. நேர்மையான நடத்தை காரணமாக.

தன் மகள் வத்சலா வேறு சாதிக்காரன் மீது மனசு வைத்திருக்கிறாள் என்று தெரிந்தும் கூட அவள் தந்தை முத்து மாணிக்கத்திற்கு அவன் மீது வெறுப்பில்லை.

ஒருநாள் நேரே பிண்டோ செக்கு மெஷினுக்கு வந்தார். வெளித் திண்ணையில் வெகு நேரம் உட்கார்ந்திருந்தார்.

பார்த்ததுமே ஏதோ விவகாரம் ஆரம்பம் என்றுதான் வேலுச்சாமி நினைத்தான்.

கூட்டம் எல்லாம் போய் மெய்ன் சுவிட்சை அணைக்கிற நேரத்துக்கு அவர் உள்ளே வந்தார்.

"தம்பீ!"

கல்லாவின் மீது கட்டி வைத்திருந்த சில்லறைப் பொட்டலங்களை எடுத்து ஜிப் பேக்கில் போட்டுக் கொண்டிருந்த வேலுச்சாமி எழுந்து நின்றான்.

"உட்காரு... உட்காரு" என்று கூறி விட்டு அவர், எதிரில் போட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்தார்.

அவன் நின்று கொண்டே இருந்தான்.

"அட உட்காரு தம்பி."

உட்கார்ந்தான்.

"எனக்கு சுத்தி வளைக்கத் தெரியாதுன்னு இல்லே. தெரியும். ஆனா இது சுத்தி வளைக்கிற விஷயம் இல்லே."

கேட்டுக் கொண்டான்.

"எதைப் பத்திப் பேசறேன்னு தெரியுதில்லே."

அவன் இசைவாகத் தலையசைத்தான்.

"எங்க குடும்பம் பெரிசு. பழைய கௌரவம்லாம் உள்ளது. இது நிலவரம். பொட்டப்புள்ளையை நல்லவன் கைலதான் புடிச்சுக் குடுக்கணும்."

தான் சுவாசிப்பது தனக்கே கேட்கிற நிசப்தம் உணர்ந்தான் வேலுச்சாமி.

"சாதி காப்பாத்தாது. அந்தஸ்து காப்பாத்தாது. நல்லவன் காப்பாத்துவான். சரிதானா?"

இதில் அவன் ஆமோதிப்பை வேறு எதிர்பார்க்கிறார். போட வேண்டிய வெடிகுண்டைப் போடும் என்பது போல் தலை குனிந்து நின்றான் வேலுச்சாமி.

"நீதான் அந்த நல்லவன். கடைசிவரைக்கும் நல்லவனா இரு. இழுத்துக்கிட்டு ஓடினவன்னு பேரு வாங்கப்படாது."


மௌனம் காக்க வேண்டிய தருணம்.

"இந்த மாதிரி விவகாரங்களுக்கு நிறைய 'பிரேக்கர்' உண்டு. பொறுத்தா பலன் உண்டு. நிச்சயம் உண்டு. மனசுலே வச்சுக்க. நான் வரட்டுமா?"

முத்துமாணிக்கம் புறப்பட்டு விட்டார்.

அவர் எதை நினைத்து எச்சரிக்கிறார் என்று புரிந்தது.

வத்சலாவுக்கு ஒரு அத்தை மகன், ஒரு மாமன் மகன். கிராமங்களில் ஸ்தாவர ஜங்கம சொத்து இட்டங்களில் பெண்ணும் ஒருத்தி



சிரவணபெலகோலா.

இங்குதான், **உங்கள்** வருங்கால **ரகசியம்** ஒளிந்திருக்கிறது.

ஆன்மீகத்திற்கும் இவ்விடத்துக்கும் அதிக தொடர்புண்டு. பேரரசன் சந்திரகுப்த மௌரியர் துறவறம் கொண்டது இங்குதான். இங்குள்ள குகைகள்தான் அவருக்கு வீடுபேற்றை பெற்றுத் தந்தன. சமணத் துறவி கோமதேஸ்வருக்கும் இங்கு சிலையுண்டு. கிபி 983ல், ஒரே கல்லில் வடிக்கப்பட்ட 60 அடி விஸ்வரூபம். இதைப் போல் இந்தியப் பாரம்பரியத்தின் சான்றாய் விளங்கும் சின்னங்கள் எத்தனையோ! இந்த வரலாற்றுச் சின்னங்கள்தான் உங்கள் வெற்றிச் சின்னங்கள்.

சித்திரைத் திருவிழா
உலகெங்கும் உற்சாகம்!
ஏப்ரல் 5-14, 1997

* அறிமுகப்படுத்துவோர் பரிசு தற்போதைய சந்தாதாரருக்கு மட்டுமே.

எப்படி என்றறிய ஆவலாயிருக்கிறதா?

தமிழ்ப் புத்தாண்டையும், இந்திய நாட்டின் 50ம் விடுதலையாண்டையும் கொண்டாட ஸ்ரீராம் சிட்ஸ் எண்ணியுள்ளது.

இந்த தமிழ்ப் புத்தாண்டில் ஸ்ரீராம் சிட்ஸின் சந்தாதாரர் என்கிற முறையில் உங்களுக்கு ஒரு பரிசு காத்திருக்கிறது. அது தவிர அடையாள பரிசுக் கூப்பன் ஒன்றையும் பெற்றிருப்பீர்கள். உங்கள் உறவினரையோ, நண்பரையோ, சக அலுவலரையோ ஸ்ரீராம் சிட்ஸின் புதிய சந்தாதாரராக அறிமுகப்படுத்தும்போது அந்த அடையாளக் கூப்பனை எடுத்து வாருங்கள். அறிமுகம் செய்த பின், பரிசுக் கூப்பன் அடங்கிய உறை ஒன்றை கிளை மேலாளரிடம் பெற்று கோடிட்ட பகுதியில் கத்தரியுங்கள். தாஜ்மகால், மகாபலிபுர கோயில் போன்ற பாரம்பரியச் சின்னத்தின் பெயர் ஒன்றையோ அல்லது 1000 என்ற எண்ணையோ காண்பீர்கள். அப்பெயருக்கு இணையான அறிமுகப்படுத்துவோர் பரிசினை, கிளை மேலாளரிடம் பெற்றிடுங்கள். SS பௌல் முதல் தங்க நெக்லஸ் வரை பரவசமூட்டும் பரிசுகளை* பெறவிருக்கிறீர்கள். அது மட்டுமல்ல! நீங்கள் அறிமுகப்படுத்தும் நண்பருக்கும் ஓர் அழகான சந்தாதாரர் பரிசு காத்திருக்கிறது.

நேரடியாய் சேரும் சந்தாதாரர்களுக்கும் பரிசு உண்டு.

பரிசுகளைப் பெற்று, எதிர்காலம் பற்றிய உறுதியான கனவுகளோடு வெற்றி நடை போடுங்கள்!

ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்.
ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு லிமிடெட்.
'சுப்ரமணியன் பில்டிங்', 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002.
போன் : 8520700, 8522651, 8523932, 8525536, 8520797.

இழப்பற்ற, அதிக லாபம் தரும், என்றும் ஏற்புடைய முதலீடு.

	சீட்டு தொகை *		சந்தாதாரர் பரிசுகள்
1.	250 X 40 *	10,000	SS பைகோலை பாட்
2.	500 X 30	15,000	SS CB தேக்சா
3.	625 X 40	25,000	கும்பகோணம் SS பொன்னி கன்டெயினர்
4.	500 X 60	30,000	செல்லோ ஸ்டோர் ஃப்ரெஷ் (3)
5.	1,000 X 50	50,000	SS CB மூடியுடன் கூடிய பருப்புச் சட்டி
6.	2,500 X 30	75,000	ப்ரேஸ்டீஜ் SS CB ப்ரை பேன்
7.	2,500 X 40	1,00,000	காளி SS CB ஸ்லிக்லெட்-200ml
8.	5,000 X 30	1,50,000	ப்ரெஸ்டீஜ் லைட் பேன் (மூடியில்லாமல்)-200ml
9.	5,000 X 40	2,00,000	ஹாக்கின்ஸ் நான் ஸ்டிக் கோட்டிங் தவா
10.	10,000 X 30	3,00,000	ஜெமினி கிப்ட்செட்
11.	20,000 X 25	5,00,000	4கிராம் தங்க காசு

* முன் அனுமதி பெறப்பட்டது

* நுழைவுக் கட்டணம் தனி

DATTARAM 36497



கல்கி - பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

வாரம் ஒரு சவரன்!

போட்டி-12

நீங்கள் முதன் முதலில் வாங்கிய நகையை உங்களால் மறக்கவே முடியாது. அதை அணிந்தபோது ஏற்பட்ட சந்தோஷத்தை விவரிப்பது கூட கடினம்தான். இருப்பினும் அந்த நகை வாங்கப்பட்ட சூழ்நிலை சுவையான அனுபவம் ஒன்றைத் தந்திருக்கும். அதை எழுதியனுப்புங்கள். சிறந்தவை பிரசுரமாவதோடு, மிகச் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்படும் அனுபவத்தை எழுதியவருக்கு ஒரு சவரன் பரிசு! முடிவு தேதி: 7.4.97.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

சவரன் போட்டி - 12

முதல் நகை வாங்கிய அனுபவம்:

பெயர்:..

முகவரி:..

....

....

தான்.

புரட்சிப் புடலங்காய்களோ, எழுச்சிப் பறங்கிக் காய்களோ அங்கே காய்க்க நிறைய நாள் எடுக்கும்.

மாமன் மகன் சொத்து பறிபோய் விட்ட மாதிரி குதித்தான். அத்தை மகன் போட்டியாக ஈ ஓட்டினான். மற்றொரு பிண்டோ செக்கு போட்டான். மலேசியாவில் ரப்பர் தோட்டத்தில் கூலி வாங்கிய காசு அது. அந்த இரண்டாவது மானபங்கம் தாளவில்லை.

புறம்போக்கு நிலத்தில் வேலுச்சாமி பிண்டோ போட்டிருப்பதாக வக்கீல் நோட்டீஸ் விட்டான்.

வேலுச்சாமி பதில் நோட்டீஸ் அனுப்பிய பத்தாவது நாளில் போலீஸ் வேலுச்சாமியின் பிண்டோ மெஷினுக்கு வந்தது.

சந்தன மரம் கடத்தியதாக சோதனை வாரண்ட். சோதனையில் எவனோ எடுத்துக் கொண்டு போக வேண்டிய புண்ணாக்கு மூட்டையில் சந்தனக் கட்டைத் துண்டுகள்.

வேலுச்சாமி கைது செய்யப்பட்டான்.

ஊருக்கே இது யார் வேலை என்ன பின்னணி என்று தெரியும்.

வேலுச்சாமியின் விதவைத் தாய் தலைவர், வி.ஏ.ஓ. என்று எல்லோரிடமும் முறையிட்டுப் பார்த்தாள்.

"நமக்கு எதற்கு வம்பு? குடும்ப விவகாரம்."

இதுதான் கிராமம்.

இவ்வளவுதான் கிராமமா என்று பார்த்துவிட அவள் வத்சலாவின் தகப்பனிடம் கூடப் போய் விட்டாள்.

"அம்மா ஒன்னைப் பாத்தா எனக்குப் பரிதாபமா இருக்கு. உன் வவுறு எரிஞ்சா வெளயம் புடிச்சவனுங்க வெளங்க மாட்டாங்க. நான் என்ன பண்ணட்டும் சொல்லு? வேலுச்சாமி சொக்கத் தங்கம். தெரியும். நான் எறங்க முடியுமா? என் கையை ரெண்டு பக்கமும் கட்டி வச்சிருக்கானுங்களே..." என்று அவர் கைவிரித்தார்.

கொப்பரைத் தேங்காய் வெட்டிக் கொண்டிருந்த வத்சலா காதில் இது விழுந்தது.

உள்ளே போய் பிளாஸ்டிக் டப்பாவில எண்ணெய் விற்ற காசிலிருந்து ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களை உருவிக் கொண்டு பத்தரை டவுன் பஸ்ஸில் ஏறினாள்.

கல்யாணராமன் மணி பார்த்தார். 3:10. மாஜிஸ்திரேட் போயிருக்க மாட்டார். வத்சலா சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்து முகம் துடைத்தாள்.

வெளியே காலியாகப் போய்க் கொண்டிருந்த ஆட்டோவைப் பார்த்து வக்கீல் கைதட்டினார்.

ஆட்டோ நின்றது. சப்-ஜெயில் மாஜிஸ்திரேட் கோர்ட் எல்லாம் பக்கத்து பக்கத்தில்.

அருகிலேயேதான். "வாம்மா, வந்து ஏறு..." வத்சலாவை அழைத்தார்.

4:55க்கு வேலுச்சாமி வெளியே வந்தான்.

வக்கீல் கல்யாணராமன் சப்-ஜெயில் வாசல் கம்பங்களில் தானும் ஒன்றாகி ஒரு முக்கியத்துவம் இழந்ததாக உணர்ந்தார்.

வேலுச்சாமியும் வத்சலாவும் அவ்வளவு தீவிரமாக ஒருவரை ஒருவர் பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தனர்.



"ஹௌஸ் தட்?" — பாஸு

அந்த தீவிரம் அவரை மேலும் மௌனமாக வேடிக்கை பார்க்க வைத்தது.

"சாப்டீங்களா?" அவன் தொண்டை குழறக் கேட்டான். கண்களில் நீர் முட்டிற்று.

"இன்னும் இல்லே. மத்தியான்னம் சாப்பாட்டுப் பொட்டலம் வரும்னு சொல்லிட்டுப் போனாங்க. வரலே."

வத்சலா தோளில் தொங்கிய பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்தாள்.

"என்னது?"

"சிக்கன் பிரியாணி."

"நீ சாப்டியா?"

"இன்னொரு பொட்டலம் உள்ளே இருக்கு."

அவசரமாக அவன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

கல்யாணராமன் மணி பார்த்தார். நாலு.

"நீங்க ரெண்டு பேரும் சாப்டுட்டு வீட்டுக்கு வாங்க. எனக்கு ஒரு அர்ஜெண்ட் வேலை இருக்கு."

யாரோ வந்து இறங்கிய ஆட்டோவில் கல்யாணராமன் ஏறிப் போய் விட்டார்.

வேலுச்சாமியும் வத்சலாவும் வக்கீல் வீட்டிற்குப் போனபோது சிவப்பாய் ஒரு மாமி எட்டிப் பார்த்தாள். வைர மூக்குத்தியில் ஒரு வாத்சல்யத் தளும்பல்.

"தோட்டத்திலே இருக்கார். உட்காருங்கோ, வரச் சொல்றேன்..." குரலில் ஒரு கருணைக் குழைவு.

எவ்வளவு நேரம் உட்கார்ந்திருப்பது?

ஐந்தாறு நிமிஷத்தில் பொறுமையிழந்த வேலுச்சாமி எழுந்து வாசல் நடையை எட்டிப் பார்த்தான்.

வக்கீல் கை வைத்த பனியன் வேட்டியோடு தோளில் ஒரு தண்ணீர்க் குடம் சுமந்து தோட்டத்து வாசல்படி ஏறினார்.

வேலுச்சாமி அவரைப் பார்த்ததை அவரும் பார்த்தார். ஒரு நமுட்டுச் சிரிப்பு.

அரைமணி நேரம் கழித்துச் சட்டை போட்டுக் கொண்டு வெளியே வந்தார்.

"என்ன வேலுச்சாமி சாப்டாச்சா?" என்றார்.

"ஆச்சுங்க சார்."

"என்னடா வக்கீல் தண்ணிக்குடம் தூக்கறார்னு பாத்தே... இல்லே? நாலரைக்குத் தண்ணி விடறான். ஓவர் டாங்க் ரிப்பேராம்."

அவன் வாய் பேசவில்லை. அவனை ஒரு பார்வை விட்டார்.

"உனக்கு இன்னிக்கு ஜாமீன் கெடைக்காதுன்னு சொன்னதுமே வத்சலா ஒரு தடவை அழுதா. வெளியே வந்ததுமே ஒரு தடவை அழுதா."

திடீரென்று இதை ஏன் சொல்கிறார்?

"இதே மாதிரி என் பொண்டாட்டி எனக்காக எத்தனை தடவை அழுதிருப்பா தெரியுமோ?" அவர் திரும்பி உள்ளே பார்த்துக் கொண்டார்.

"அவளுக்கு அழத்தான் தெரியும். வத்சலாவுக்கு ஜெயிக்கவும் தெரியும். நீ அதிருஷ்டக்காரன். இன்னிக்கு ஜாமீன் கெடைச்ச விஷயத்திலயே அது ப்ரூவ் ஆயிடுச்சு."

வத்சலா புன்னகையோடு பீஸ் கொடுக்க பர்ஸை எடுத்துப் பிரித்தாள்.

"ஏன்னா..." என்று குரல் வந்தது. உள்ளேயிருந்து. குரலின் குழந்தைமையில் மேந்தூக்கலாக சிறு அதிகாரம்.

"தோ வந்தேன்" என்று கல்யாணராமன் மீண்டும் எழுந்து உள்ளே போனார்.

வத்சலா வேலுச்சாமியைப் பார்த்துச் சிரித்தாள். 'மனுஷர் பெண்டாட்டிக்கு எவ்வளவு சலாம் போடுகிறார் பார்' என்ற சிரிப்பு.

அவன் சிரிக்கவில்லை. என்னமோ யோசித்தான். சிரிப்புக்கு எதிர்ச்சலனமில்லாத ஏமாற்றத்தில் அவள் முகம் வாடியது.

"என்ன யோசனை?" என்று குசுகுசுவென்று கேட்டாள்.

"அதுதான் காதல்" என்று மெள்ளச் சொன்னான் வேலுச்சாமி.

அதைக் கேட்டதும் வக்கீல் சாரைக் குறைத்து மதிப்பிட்டதற்காக அவள் உள்ளூர வருந்தினாள்.

● சி. முத்துகிருஷ்ணன், கல்லிடைக்குறிச்சி.

? தமிழகப் பெண்களின் மஞ்சள் கயிற்று மகிமை பற்றி...?

! மங்கலகரமான விஷயம். இதை ஆணாதிக்கத்துடன் 'முடிச்சுப் போடுவது' தவறு. தாலிச் சரடு அல்லது மஞ்சள் கயிறை மனைவி பெருமிதத்துடன் அணியுமாறு கணவன் நடந்து கொள்வது அவசியம். 'மங்கலம்' அர்த்தம் பெறுவது அப்போதுதான்.

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? 'இயக்கத்தை வழிநடத்துவேன் கட்டிக் காப்பேன்' என்று ஜெ. எம்.ஜி.ஆர். முன் சத்தியம் செய்து கொடுத்தாராமே?

! வேறென்ன! 'இதை எம்.ஜி.ஆர். வந்து மறுக்கவா போகிறார்' என்கிற தைரியம்தான். பார்க்கப் போனால் இவரைக் கட்சியிலிருந்து ஒதுக்கி வைக்க வேண்டும் என்று எம்.ஜி.ஆர். எடுத்த முயற்சிகள்தாம் அதிகம்! வீரப்பனின் எதிர் அறிக்கைகளைப் படித்தால் புரியும்.

● என். கந்தசாமி, மதுரை – 14.

? ஜெயலலிதா பயன்படுத்தினார் என்ற ஒரே காரணத்துக்காக, விமானத்தை யாருமே விலைக்கு வாங்க முன்வரவில்லையாமே? என்ன கொடுமை!

! விமானத்துடன் சேர்ந்து தாமும் 'கவிழ்ந்து' விடுவோமோ என்கிற சென்டிமென்ட்டான பயம் காரணமாயிருக்கலாம்!

● ஏ. சீனிவாசன், சென்னை – 24.

? தமிழ்நாட்டில் மதுக்கடைகளில் லைசென்ஸ் இல்லாமல் 'பார்' நடத்த, போலீஸுக்குப் பல கோடி ரூபாய் லஞ்சம் தரப்பட்டு வருவதாகச் செய்தி வெளியாகியிருக்கிறதே... உங்கள் ஆத்ம நண்பர், தமது இலாகாவில் நடந்து வரும் ஊழலுக்குத் தார்மீகப் பொறுப்பு ஏற்று பதவி விலகுவாரா?

! 'எனது ஆத்ம நண்பர்' என்று முதல்வரை தராசு என்றுமே குறிப்பிட்டதில்லை.

'இடிப்பாரை இல்லா....'; 'நகுதற் பொருட்டன்று'... போன்ற குறள்களில் எனக்கு நம்பிக்கை உண்டு.

நீங்கள் குறிப்பிட்டுள்ள விஷயத்தில் முதல்வர் ஏற்கெனவே தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் செய்திகள் வருகின்றன.



• மறுக்கவா முடியும்!



• ஒரே ஆசை!

அவர் முயற்சியில் தோல்வி கண்டால் ராஜினாமா கோர கல்கி தயங்காது.

'பார்'கள் நடத்தும் மதுக்கடைகளைக் கண்டுபிடித்து, மூடி ஸீல் வைப்பதில் போலீஸுக்கு சிரமமே கிடையாது என்பதை உயர் அதிகாரிகள் உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

● ஜி. செல்லத்துரை, மீனாம்பாள்புரம்.

? அரசியலில் முக்கிய பதவி வகித்தவர்களின் சொத்துக்களை முடக்கம் செய்யும் போது அதை தண்டோரா போட்டுச் சொல்வது அவர்களை அசிங்கப்படுத்துவதாகாதா...?

! அரசியலில் அவர்கள் பண்ணுகிற அசிங்கங்களை விடவா இது மோசம்?



• 'அடிப்படை' ஆராய்ச்சி!

ரஜினிக்கு விருது எந்த அடிப்படையில்..

● எல். எம். மகாநந்தினி, மதுரை – 10.


? திரைப்படத்துறையினருக்கு மாநில அரசு வருடா வருடம் (லேட்டாக) விருது வழங்குகிறதே...? பத்திரிகைத் துறைக்கு ஏன் வழங்குவதில்லை?

! பத்திரிகைத் துறையினருக்கு அரசாங்கம் விருது வழங்கவும் கூடாது; வழங்கினால் அதைப் பத்திரிகையாளர்கள் ஏற்கவும் கூடாது. அரசுத் தொடர்பு இல்லாத, மேன்மக்களைக் கொண்ட அமைப்புகள், விருப்பு வெறுப்பற்ற முறையில் வழங்கினால் ஏற்கலாம்.

● கு. கணேசன், காட்டாங்குளத்தூர்.

? 'ஒரு கட்சிக்குத் தலைவியாக வேண்டும் என்கிற எண்ணமோ, முதல்வராக வேண்டும் என்கிற ஆசையோ எனக்கு என்றைக்குமே என்னளவும் இருந்ததில்லை' என்கிறாரே ஜெயலலிதா?

! கரெக்ட்! சொத்து சேர்க்கிற ஒரே ஆசை





நாடி அவருக்கு. அதனால்தான் கட்சித் தலைவராகி முதல்வராகவும் விளங்கினார்.

● அஜார், தேனாம்பேட்டை.

? அது என்னங்க ஒன்பதரை லட்சம்? மீதி அரை லட்சம் யாருக்குப் போனது என்ற கேள்வி எழவில்லையா?

! பத்து லட்சம் என்றுதான் டி.ஆர். சொன்னாராம்... ஆனால் பணத்தைக் கொண்டு வந்த பாரதி பஸ் சர்வீஸ் கண்ணன், 'இப்போது ஒன்பதரைதான் உள்ளது; மீதியை நாளை காலை தந்து விடுகிறேன்...' என்று த.மா.கா. எம்.எல்.ஏ. கந்தசாமியிடம் சொல்லியிருக்கிறார். அதற்குள் விஷயம் வேறுவிதமாகிவிட, மீதி அரை லட்சத்துக்கு அவசியமே இல்லாமல் போய் விட்டது. - இது புதுவை வட்டாரங்களில் அடிபடும் பேச்சு. ஆனால் வைத்தியலிங்கமும் டி.ஆரும் இப்போது லஞ்ச ஊழல் கதைக்குப் புதிய திருப்பம் கொடுத்து, தாங்கள் தப்பிக்கப் பார்க்கிறார்கள். ஸி.பி.ஐ., வழக்கை ஏற்றுக் கொண்டு சுறுசுறுப்பாகச் செயல்பட்டால் நல்லது.

● ஏ. பாலமுருகன், திருநெல்வேலி – 8.

? மனிதர்களில் பலர் மனிதத் தன்மை யற்றுச் செயல்படுகிறார்களே...? என்ன காரணம்? பணமா? சுயநலப் போக்கா?

! ஆணவம், அகம்பாவம் கூட காரணமாய் இருக்கலாம். சமீபத்தில் பெல்காம் ரயில் நிலையத்துள்ளேயே, சீருடை அணியாத ராணுவ அதிகாரி ஒருவர் மோட்டார் பைக்கை ஓட்டிச் செல்ல, அதைத் தட்டிக் கேட்ட ஸ்டேஷன் ஊழியர்களை ராணுவ வீரர்கள் ஒன்றுகூடி 'தட்டித்' தீர்த்து விட்டனர்! இது ஆணவமன்றி வேறென்ன...?

● எஸ். சீனிவாசன், மதுரை – 10.

? லஞ்ச ஊழல் தலைவிரித்து நிற்கும் 54 உலக நாடுகளில் இந்தியா ஒன்பதாவது இடத்தில் இருப்பதாக உலக வங்கி ஆய்வு கூறுகிறதாமே...?

! கௌடா ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, தன்னைப் போல் ஊழலுக்கு அஞ்சாத அ.தி.மு.க. முதலான கட்சிகளுடன் கைகோத்துக் கொண்டு காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வரட்டும்... வெகு சீக்கிரம் முதலிடத்தைப் பிடித்துப் பெருமைப்படலாம்!

● எஸ். எஸ். பூங்கதிர்,
திருவெண்ணெய்நல்லூர்.

? எந்த அடிப்படையில் ரஜினியை சிறந்த நடிகராக தமிழக அரசு தேர்ந்தெடுத்துள்ளது...?

! நட்பு அடிப்படையில்தான்! 'இந்த வருஷம் கொடுத்து விடலாம்; இந்த ஆண்டின் சிறந்த நடிகர் என்ற தகுதியுள்ளவர்களுக்கு அடுத்து வரும் ஆண்டுகளில் பார்த்துக் கொள்ளலாம்' என்கிற 'பெருநோக்காக' இருக்கும்!

● ஆர். ராஜதுரை, சீர்காழி. ❑

? சினிமா நடிக, நடிகையருக்கு ஓய்வூதியம் வழங்க அமைச்சர் முல்லைவேந்தன் முடிவெடுத்துள்ளாரே... நடிக-நடிகைகளெல்லாம் நாட்டுக்குச் சேவை செய்தவர்களா... தியாகிகளா?

! வறுமை என்பது எந்தத் துறையைச் சேர்ந்தவர்களானாலும் கொடுமையானது. சிலருக்கு மட்டுமே உதவுவோம்; பிறருக்கு உதவ முடியாது என்று அரசு கூறுவது முறையல்ல. ஒட்டுமொத்தமாக வறுமையை ஒழிக்கப் பாடுபட்டால் அர்த்தமுண்டு. அதை விடுத்து, உரக்கக் குரல் கொடுப்பவர்களுக்கு மட்டும் கூடுதல் உதவி என்று முடிவானால் சிக்கல்கள்தான் அதிகரிக்கும்.

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஆர். ராஜதுரை,
97, பிடாரி வடக்கு வீதி,
சீர்காழி - 609 110.
நாகை மாவட்டம்.

● கே. ஸ்ரீதர், சிங்கநெல்லூர் அஞ்சல்.

? ஆற்காடு வீராசாமியின் உறவினர் அரிசி கடத்துவதாக தாமரைக்கனி சட்ட மன்றத்தில் குற்றஞ்சாட்டியபோது, அமைச்சர், 'குற்றத்தை நிரூபியுங்கள்!' என்று சவால் விடுகிறாரே தவிர குற்றமே நடக்கவில்லை என்று சொல்லவில்லையே... ஏன்?

! குற்றம் நிரூபணமானால் பதவி விலகுவதாக வீராசாமியும், அவரைப் பதவி நீக்குவதாக முதல்வரும் கூறியிருக்கிறார்கள்... இது ஒருபுறமிருக்க, 'குற்றம் சாட்டுவது சுலபம். ஆனால் நிரூபிப்பது கஷ்டம்' என்பதை அடுத்து வந்த சட்டமன்ற நிகழ்ச்சிகள் உணர்த்தியிருக்கின்றன. தாமரைக்கனி கொடுத்த ஆவணங்கள் போலியானவை என்று அவைத் தலைவர் கூறியிருப்பதோடு, அவரை 'சஸ்பெண்ட்' செய்யவும் நேர்ந்திருக்கிறது.



• புதிய...



...திருப்பம்!

அழகு என்பது பற்றி வள்ளிக்கு நிறைய அபிப்பிராயங்கள் இருந்தன. தன்னளவில், அவள் அதைக் கடைப்பிடித்தும் வந்திருக்கிறாள். அது, பிறந்தியார் பார்த்து ரசிக்க என்று இல்லாமல், தனக்குள் ஏற்படும் பெருமிதம், தன்னம்பிக்கை என்பதே அவள் கருத்தாக இருந்தது. பெண்கள் விடுதியில், தனக்கு அளிக்கப்பட்ட அறையையும் அந்த முறையிலேயே அழகுபடுத்த எண்ணம் கொண்டாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமையாக வாய்த்து இருந்தது. ஆகவே, அது விருந்துத் திருநாள் அன்று, அறையைத் தனக்கேற்ற விதத்தில் வடிவமைப்பது என்று உட்கார்ந்தாள். முதலில், சுவர்களில், ஏற்கெனவே ஒட்டி இருந்த காலண்டர் படங்களைக் கிழித்து எறிந்தாள். படங்கள் நீங்கின பின், சுவர், அழகாகப் பளிச்சிட்டது. சுத்தமும் ஒழுங்கும், அழகின் இரு பக்கங்கள். தேதி கிழிக்கப்படாத, காலண்டர் ஒன்றைக் கழற்றிக் குப்பைக் கூடைக்குள் போட்டாள். முன்னால், அங்கு இருந்தவள், கவர் கொள்ளாமல் ஒட்டி வைத்த ஸ்டிக்கர் பொட்டுகளைப் பெயர்த்து எறிந்தாள். ஜன்னலுக்கு நேராக, மேஜையை நகர்த்தினாள். மேஜை மேல் இருந்த மைக் கறைகளைத் தண்ணீரால் துடைத்தாள். அதன் மேல், அழகான ஒரு பூ ஜாடியை வைத்தாள். கண்ணாடியில், வண்ண ஓவியமாக இருந்த அதன் இருதயத்துக்குள், 'மணி பிளான்டின்' இரு இலைகளைப் பொருத்தினாள். மேசையின மீது, வெள்ளைத் துணியைப் பரப்பினாள். ஒற்றைக் கட்டிலின் மேல், புத்தம்



பூக்கள் நாளையும் மலரும் 22

பிரபஞ்சன்

புதுசான போர்வையை விரித்தாள். ஷெல்ஃபில், சில புத்தகங்கள். இரண்டாம் அடுக்கில், அவளும் அர்த்தநாரியும் இணைந்து எடுத்த கல்யாணப் போட்டோ. கையெட்டும் மூன்றாம் அடுக்கில், பண்பலையுடன் சேர்ந்த டிரான்சிஸ்டர்.

அறை. அழகு பெற்று விட்டது. அதது, அது அதன் இடத்தில் இருப்பதே அழகு. தன் அறையை, ஒரு மூன்றாம் மனுஷியாக இருந்து பார்த்தாள். தன்னுடையது, தன் அறை, தன் அந்தப்புரம் என்கிற சிந்தனை வந்து, தனக்குத்தானே மகிழ்ச்சி கொண்டாள்.

மணி, பத்தரையை நெருங்கி இருந்தது. உடம்பு, ஒட்டடைத் தூசு காரணமாகப் பிசுபிசுத்தது. குளித்தாள். நைட்டியை சோப்புத் தூளில் ஊறப் போட்டாள். அவளுக்குப் பிடித்த வெளிர் ஆகாய நிறத்துச் சேலையை, அதே நிறத்தில் ரவிக்கையை அணிந்து கொண்டாள். தாழம்பூ ஊதுபத்தியைக் கொளுத்தி, அதற்கென்று இருந்த ஸ்டாண்டில் வைத்தாள். ஜன்னலைத் திறந்து, அதன் வழியாக வந்த வெயிலில், கூந்தலைக் காயவைத்தாள். ஜன்னல் வழியாகச் செம்பருத்திச் செடி தெரிந்தது. பெரிய பெரிய செம்பரத்தை, கண்களைக் கட்டிப் போட்டது. எங்கோ படித்தது நினைவுக்கு வந்தது.

'பூமியைக் கௌரவப்படுத்த கடவுள் பூக்களைப் படைத்தார்.'

அறைக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. விரித்திருந்த கூந்தலை ஒழுங்குபடுத்திக் கொண்டு, கதவைத் திறந்தாள்.

ஜானு மாமி நின்றிருந்தாள்.

"வாங்கோ, மாமி."



மாமியின் கண்களில் கண்ணீர் அரும்பியது. தலைப்பில் கண்களைத் துடைத்துக் கொண்டு, "எப்படி இருக்கே, வள்ளி?" என்றாள். மாமியின் வார்த்தை குழறியது. தொண்டை அடைத்துக் கொண்டது.

"இருக்கேன், மாமி."

"எத்தனை நாளைக்கு இந்த வனவாசம். அசோகவனத்துல இருக்கிற சீதை மாதிரி?"

வள்ளி, மாமியின் கைகளைப் பற்றி அழைத்து வந்து, நாற்காலியில் அமரவைத்தாள். கட்டிலில் சௌகர்யமாகச் சம்மணம் போட்டு அமர்ந்து கொண்டாள்.

"இது வனவாசம் இல்லை மாமி. மனவாசம். சீதை, கடத்தப்பட்டவள். நான், நானா இங்கே வந்தவள் ஆச்சே மாமி. நான், என்னைக் கடத்திக்

கிட்டவன்."

"ஆனால், வள்ளி. இது அவசரப்பட்ட முடிவோன்னு, எனக்குள்ளே ஒரு ஓரத்தில சந்தேகம்."

"இல்லை, மாமி. இந்த விலகல், இப்போ பௌதிகமா, வெளியில தெரியுது. ஆனா, இந்த விலகல் தொடங்கி ரொம்ப நாளாயிடுச்சி. முதல் முதல்லே, அந்த அறைக்குள்ளே, நாங்க தனியா சந்திச்ச போது, எனக்குள்ளே ஏற் பட்டிருக்கிற பயம், தயக்கம் எல்லாம் போற துக்கு முன்னாலே, எனக்குள்ளாற நான் தயா ராகிறதுக்கு முன்னால, அவர் ஆண் என்கிற சுதந்திரத்துல, என்னை ஆண்டுக்கிட்டாரே, மாமி. அந்த க்ஷணம், இந்த விலகல் ஆரம்பிச் சிடுச்சு. ஆனா, நம்ம தேசத்துலே, நூற்றுக்குத் தொண்ணூறு பெண்கள், என்னை மாதிரி, இந்த அவஸ்தைக்கு ஆட்படறாங்களே. நான் இதைப் பொறுத்துக்கிட்டேன். ஆனா, அவ ரோட வாழ்க்கை முறையை என்னாலே சகிச் சுக்க முடியலை, மாமி. ஒரு திருடனோட வாழ் கிற மாதிரி, மனசு திக்குத் திக்குனு அடிச்சுக் கிடுது. ரிக்ஷா வண்டி இழுக்கிறவரோட கூட சந்தோஷமா வாழலாம். அது ஒரு தொழில் தானே? லஞ்சம் வாங்கி, அதுல வசதியை பெருக்கிக் கொள்கிறவரோடு எப்படி வாழறது, சொல்லுங்கோ. லஞ்சப் பணத்துல வாங்கின சேலையைக் கட்டிக்கிட்டா, நிர்வாணமா நிக்கிறது மாதிரி இருக்கு. யாரோ ஒரு முகம் தெரியாத மனுஷன், என் வீட்டுக் கதவைத் தட்டி புடைவை கொடுக்கிறான்னா, சே, இது என்ன வாழ்க்கை? இல்லையா, சொல் லுங்கோ? விபசாரம் மட்டும்தான் அசிங்க மான வாழ்க்கையா? பொய், களவு, ஏமாத்து, வஞ்சகம் எல்லாமும் இழிவுதானே? இழிவான வாழ்க்கைக்குத் துணைபோகிறவன், மனைவி என்கிற மரியாதைக்கு உரியவனா? மரியாதை யான வாழ்க்கையை நான் வாழ அனுமதிக் காதவன் கணவனாவானா? எனக்கு உணர்ச்சி இல்லையா? மனம், பொருந்தாமே, படுக்கை யைப் பகிர்ந்துக்க முடியுமா, சொல்லுங்கோ: அப்படிப் பண்ணா, அதுக்குப் பேர் தாம்பத் யம்தானா? அதைவிடவும், அதை விட்டு விலகி நிற்கிறது. மேலான விஷயம் இல்லையா, சொல்லுங்கோ..."

மாமி, வள்ளியின் கைகளைப் பற்றிக் கொண்டு சொன்னாள்.

"நீ சொல்றது எல்லாம் சரிதான், வள்ளி என் மனசு கேக்கலை. உலகத்துல பெருவாரி யான பெண்கள், இப்படித்தானே வாழ்ந்துக் கிட்டு இருக்கோம். எத்தனை போக்கிரி களோட, திருடர்களோட, லஞ்சம் வாங்குகிற ஆட்களோட எல்லாம், பொம்பிளைகள் வாழ்ந்துக்கிட்டுதானே இருக்காங்க? அவங்கள் ளாம் உன்னை மாதிரி வெளியேறினா நூற்றுக்குப் பத்து ஆம்பிளைகள் கூட பொண் டாட்டிகளோட வாழ மாட்டானுங்களே...?

"அதுக்கு நாம் கவலைப்பட்டுக் கட்டுப்படி ஆகுமா, மாமி. இத்தனை கோடி பணம் செலவழிச்சுப் படம் எடுத்திருக்கானேன்னு, குப்பைப் படத்தை நாம் ஆதரிக்க வேண்டுமா? நம்ம ரசனைன்னு, நம்ம விருப்பம்னு ஒன்று இருக்கே..."

கடைசியாக மாமி, "என்ன சொல்றதுன்னு எனக்குத் தெரியலை" என்றாள்.

வள்ளி, தன் நகங்களைப் பார்த்தபடி மவுன மாக இருந்தாள். உதிர்ந்த பத்து ரோஜா இதழ் கள் போல இருந்தன அவை. மேல் வரிசைப் பற்களில், இடது ஓரமாக ஒரு பல் சற்று தூக்க லாக இருந்தது. சிங்கப் பல்!

"சிங்கம்தான்டி, நீயும்."

"என்ன மாமி... திடீர்னு சிங்கம், புலின்னு..."

"ஆடுகள் மந்தை, மாட்டு மந்தை, நாய்க் கூட்டம் என்கிற மாதிரி, சிங்க மந்தை இருக்கோ? இல்லையே. அதுகள், தன்னை அதீதத்துக்கு நம்புகிறதுகள். அதனால்தான் தனியாவே இருக்கு, உன்னை மாதிரி."

வள்ளியின் கண்களில் கண்ணீர் அரும்பி யது. தன்னைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"பசும் புல்லுக்குள்ளே இடம் ஒதுக்கி இருப்பாங்கோ மாமி. அந்த இடத்துல வளர்ற புல்லுக்கும் ஜீவிதம் இருக்கும். பந்து விளை யாடற மைதானத்துல வளர்ற புல்லு, கால் பட்டு அழிஞ்சுதானே போகும்?"

"என்னத்துக்கு இதைச் சொல்றே?"

"நான் வளரக் கூடாத, இருக்கக் கூடாத இடத்துல இருந்துட்டேனோ?"

"இல்லை. அப்படியெல்லாம் சொல்லாதே. இது என்ன நிரந்தரமான பிரிவா?"

வேகமாகத் தலையை அசைத்தாள், வள்ளி.



"இல்லை மாமி. இது, என் கணவருக்கு நான் கொடுத்திருக்கிற வாய்ப்பு. அவர், அவருடைய தப்பான வழக்கத்தைக் கைவிடப் போறாரா, அல்லது, என்னையே கைவிடப் போறாரா, என்கிறதுதான் இப்போதைய பிரச்னை. அவர், அவர் வாழ்க்கையை எப்படி எதிர்கொள்ளப் போறார். அவருக்கு எது முக்கியம்னு தெரிஞ்சுக்கிடணும் மாமி, எனக்கு."

மாமி, தலையைக் குனிந்து கொண்டு யோசித்தாள்.

"நீங்க என்ன யோசிக்கிறீங்கன்னு எனக்குத் தெரியும்."

"என்னடி?"

"என் கணவரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவர், நிச்சயமா, என்னைத் தேர்ந்தெடுக்க மாட்டார்."

"எப்படிடி சொல்றே?"

"லஞ்சம், அந்த வேலையிலேதான் மாமி கிடைக்கும். பொண்டாட்டி, சுலபமா கிடைப்பானே. நான்தான் உலகத்துல ஒரே ஒரு பெண்ணா?"

வாயடைத்துப் போய் அமர்ந்திருந்த மாமியைச் சாப்பிட 'மெஸ்'சுக்கு அழைத்துப் போனாள், வள்ளி.


மாமிக்கு விடைகொடுத்து அனுப்பிய போது மணி இரண்டரைக்கு மேல் ஆகி இருந்தது. கொஞ்சம் சோர்வாகத் தன்னை உணர்ந்தாள் அவள். கதவைச் சாத்திக் கொண்டு, படுத்தாள். வெகு சீக்கிரம் உறங்கிப் போனாள், வள்ளி.

அவளுக்குக் கனவுகள் வந்தன.

வள்ளி, பாலைவனம் போல, ஓரிடத்தில் நின்று கொண்டிருக்கிறாள். கண்ணுக்கெட்டிய தூரத்தில், மனித நடமாட்டமே இல்லை. வள்ளிக்கு, இப்போது, யாரையேனும் பார்க்க ஆசையாக இருக்கிறது. யாரையேனும் காண மாட்டோமோ என்கிற ஆதங்கம். சுற்றுமுற்றும் பார்க்கிறாள் அவள். அவளுக்குப் பேச வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. பேச வாயிருக்கிறது. கருத்தும் இருக்கிறது. பேசத்தான் மனிதர்கள் யாரும் இல்லை. அவள், வானவிளிம்பின் ஓரமாக வந்து நிற்கிறாள். எங்கோ தூரத்தில் ஓர் அசைவு. மனிதர்கள். அவள் பரபரப்போடு அந்த உருவம் நோக்கி ஓடுகிறாள். அடடா, என்ன சந்தோஷம்? மனிதர்களைப் பார்ப்பது என்பது இப்படி ஒரு தாகமா? அவள், அந்த உருவத்தை நெருங்கி விட்டாள். ஆனால்...

அதிர்ச்சியுடன் நின்றாள். அந்த உருவம், மனிதர் இல்லை. அது ஒரு விலங்காக இருந்தது.

'ஏமாந்து விட்டாயா' என்றது அந்த உருவம்.



'இல்லை. மனிதர்களைத் தேடி, நான் உழைத்த உழைப்பு, என் ஆர்வம் நிஜம். எனக்குக் கிடைத்தது, மாறானது என்பதால், நான் தவறு செய்தவள் ஆக மாட்டேன்.'

அந்த உருவம் மறைந்து போகிறது.

திடுக்கிட்டு எழுந்தாள், வள்ளி. முகம் கழுவிக் கொண்டாள். கண்ணாடியைப் பார்த்து, தலையை ஒதுக்கிக் கொண்டாள். அறையைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள். குத்து மதிப்பாக, இடப்பக்கம் திரும்பினாள். வேடிக்கை பார்த்துக் கொண்டு நடந்தாள். வீடுகள், கடைகள், டயர் வியாபாரம், சின்னச் சின்ன தேநீர்க் கடைகள், எண்ணெய் வழியும் முகங்களுடன் இந்தியா. சாயங்கால இந்தியா. மிகுந்த கவலையுடன் இருப்பதாக அவளுக்குப் பட்டது. அந்தத் தெரு, ஒரு மைதானத்தில் முடிந்தது. அந்த மைதானத்தில், குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வெறும் கால் சட்டையுடன் கூடிய பையன்கள். சட்டைகள் இல்லாத குழந்தைகள். அவ்வளவு பெரிய விளையாட்டுத் திடலில், ஏன் ஒரு பெண் குழந்தை கூட இல்லை?

மைதானத்தை ஒட்டி, பஸ் நிறுத்தம் ஒன்று இருந்தது. நகரத்தின் வட எல்லையை நோக்கிப் போகிற, ஒரு பேருந்து வந்து நின்றது. ஏதோ ஒரு உச்சத்தில், வள்ளி, அந்தப் பேருந்தில் ஏறி அமர்ந்தாள். அது போகிற தூரம் முழுமைக்கும் சீட்டு வாங்கிக் கொண்டாள். அவளுக்கு இது தமாஷான அனுபவமாக இருந்தது. காற்று, தலைமுடியைக் கலைத்துக் கொண்டு, வெறிபிடித்து வீசியது. வேடிக்கையில் தன்னை இழந்து போனாள் அவள். சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, அந்தப் பேருந்து டெர்மினசுக்குப் போயிற்று. மீண்டும், அதே வண்டியில் திரும்பி, தன் இடம் வந்து சேர்ந்தாள்.

மிகுந்த திருப்தியாக இருந்தது அவளுக்கு. அவள் மனம் போல, அவளுக்குப் பிடித்த முறையில், ஒருநாள் செலவிட்டதை நினைத்து மகிழ்ந்து கொண்டாள், அவள். ஏதோ, காசி, ராமேஸ்வரம் போய்த் திரும்பி வந்தவள் போல

அவளுக்குத் தோன்றியது. அழுக்கும், பெட்ரோல் சிந்திக் கசிந்த கருமணலும், புழுதி மூடிய வீட்டுக் கூரைகளும், எந்நேரமும் உதறிக் கொண்டிருக்கும் லாரிகளையும் அவள் பார்த்தாள் என்றாலும், அது, அவளுக்கு ஒரு க்ஷேத்ராடனம் போல இருந்தது. அழுக்கு என்றால் தான் என்ன? இது என் அன்னை பூமி. அம்மா அழுக்காக இருந்தால் என்ன?

உடம்பு நசநசத்தது. குளிக்க வேண்டும் போல் இருந்தது. குளிர்ந்த நீரில் தலை நனையக் குளித்தாள். மின்விசிறியை வேகமாக முடுக்கி விட்டுத் தலை துவட்டினாள். ஈரத்தோடு தலையும், கண்களும் கூட குளிர்ந்திருந்தன. குளிப்பது என்பது சுகத்துக்குத்தானே? அழுக்கும் போகும்தான். அழுக்குப் போகக் குளிக்க முடியுமா, என்ன? எந்த மனிதர் அழுக்குப் போகக் குளித்தார்?

நைட்டியை அணிந்து கொண்டாள். பெண்களே இருக்கிற விடுதியில், நைட்டியுடன் 'மெஸ்'சுக்கும், மொட்டை மாடிக்கும் கூடப் போக முடிகிறது. காலைத் துடைக்கும் போது, நகம் சற்று வளர்ந்திருந்தது தெரிந்தது. அதற்கென்றே இருக்கும் கருவியை எடுத்துக் கொண்டு நகம் வெட்டிக் கொள்ள அமர்ந்தாள். நகம் வெட்டிக் கொண்டிருக்கும்போதே, கதவைத் திறந்து கொண்டு பக்கத்து அறை அன்னமரி வந்தாள்.

"ஹலோ... சாயங்காலம் 'வாக்' போனீங்க, போலே?" என்றாள் அன்னமரி. சுபாவமாகக் கட்டிலில் அமர்ந்தாள். இந்தச் சில நாட்களில் பழக்கம் ஆகி இருந்தாள், அவள். மத்திய அரசுப் பணியில் இருந்தாள். 'கணவன் வெளிநாட்டில்' என்பதை, வள்ளி கேட்காமலே, தானே சொன்னாள்.

"வாக், 'பஸ்ஸில்' போய் வந்தேன்" என்று, சொன்னவள், தன் பயணத்தை விவரித்தாள். அன்னமரி சிரித்தாள். அப்புறம், கரிய விழிகள் பளபளக்கச் சொன்னாள்.

"இப்படித்தான் இருக்கணும் வள்ளி. ரொம்பச் சின்ன விஷயம்தான் இது. இதைக் கூட, இந்த மாதிரி விடுதியில் இருக்கிற போதுதான் அனுபவிக்க முடிகிறது, பாருங்கள்."

உண்மைதான். அன்னமரி சொன்ன வார்த்தைகளில் இருந்த சோகத்தை உணர முடிந்தது, இவளால். என்றாலும், அவள் இதைச் சிரித்துக் கொண்டுதான் சொன்னாள்.

"உங்களுக்குச் சாயங்காலம் ஒரு மெசேஜ், வந்தது. ஒரு ஆண். சண்முகம் என்று சொன்னார். நான்தான் ஃபோன் அட்டண்ட் செய்தேன். முக்கியமான செய்தி எதுவும் இல்லையாம். சாதாரணமான விசாரிப்புதான் என்று சொன்னார். உங்களை, ஒன்பது மணிக்கு மேலே வீட்டுக்குத் தொலைபேசியில் கூப்பிடச் சொன்னார். என் உங்களுக்குத் தெரியும்னு சொன்னார்."

"அப்படியா? எங்க ஆபீஸ் முதலாளி அவர்" என்றாள் வள்ளி. இதைச் சொல்லி இருக்க வேண்டாமோ என்றும், உடன் நினைக்கவும் செய்தாள். மணி எட்டு முப்பதைத் தாண்டி இருந்தது.

"வாருங்கள். சாப்பிட்டுடலாம் வள்ளி. அப்புறம், சப்பாத்திக்குக் குருமா இருக்காது" என்றபடி சிரித்தாள். சிரிப்பு என்பது, அன்னமரிக்கு, வார்த்தைக்கு முன்னும் பின்னும் வருகிற அலங்கார ஓசை.

சாப்பிட்டுக் கொண்டு இருக்கையில், அன்னமரி சொன்னாள்.

"இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை. இரவு பத்து மணிக்கு மேல், என் வீட்டுக்காரர் பேசுவார்."

"அப்படியா?"

"ஆமாங்க, வள்ளி. அவங்க இப்போ, ஸ்டேட்சிலே இருக்காங்க. கல்யாணம் ஆன, பத்தாம் நாளே, அவங்க போக வேண்டி வந்துருச்சி. படிப்பு முடிஞ்சதும் வேலையில இருக்காங்க. சீக்கிரமா வந்து என்னை அழைச்சுட்டுப் போவாங்க... உங்களுக்கு, ஸ்டேட்சில என்ன வேணும் சொல்லுங்க..." என்றபடி சிரித்தாள் அன்னமரி. சிரிப்பில், கழுத்தில அவள் அணிந்திருந்த சின்ன சிலுவை குலுங்கியது.

"பத்தாம் நாளிலா? எப்போ போனார் அவர்."

மனக்கணக்கு போட்டு விட்டு, அவள் சொன்னாள்.

"ஆறரை வருஷத்துக்கு முந்தி."

வள்ளிக்கு என்னவோ போல இருந்தது. என்ன கொடுமை என்று இருந்தது.

"என்ன படிப்பு?"

"கம்ப்யூட்டராம்" என்றாள், அவள்.

சாப்பிட்டு முடித்து, அவர்கள் அறைக்குத் திரும்பினார்கள்.

"வள்ளி, எல்லோரும் சொல்றாங்க. அவர், அங்கே யாரையோ காதலிச்சு, அந்த பொம்பிளையோட வாழறாராம். அப்படியும் இருக்குமா? எனக்கு வேறு உறவே இல்லை, வள்ளி. அமெரிக்கா போகப் போறார்னு, சொத்து எல்லாத்தையும் வித்து, பணம் கொடுத்தாங்க அப்பா. போன வருஷம், அப்பாவும் போயிட்டாங்க. என் கணவர் அப்படியும் செய்வாரா, வள்ளி? ஞாயிற்றுக்கிழமை மட்டுமே, ரெண்டு நிமிஷம் ஏன் பேசணும்?"

அன்னமரி, கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

உலகம் எத்தனை கொடிது என்று நினைக்க வேண்டி இருந்தது, வள்ளிக்கு.

(தொடரும்)

அம்பத்தூரில் மிகப்பெரிய தங்க நகைக்கடை

சதர்ன் ஜுவல்லர்ஸ்

A/C ஷோரூம்

பெருமையுடன் வழங்கும்

"தங்கப் புதுமை" சிறப்பு சிறுசேமிப்புத் திட்டம்

மாதம் ரூ. 150/- வீதம் பத்து மாதங்கள் செலுத்தி


முடிவில் ½ சவரன் தங்கம் பெறுவீர்!

முதல் பரிசாக ஒரு சவரன் தங்கம் பெறலாம்!

மற்றும் வெகுமதிகள், பரிசுகள் உண்டு.

80 X 20 Publicity

சதர்ன் ஜுவல்லர்ஸ்
(கோல்டன் பேன்ஸி எதிரில்)
418 M.T.H. ரோடு, அம்பத்தூர்,
சென்னை-600 053.



தள்ளுபடி விற்பனை

10% TO 15 %

1-4-97 முதல் 10.4.97 வரை

(6.4.97 ஞாயிறு கடை உண்டு)

* ராணி சாரீஸ்
* சகுந்தலா சாரீஸ்
* பாடிக்சாரீஸ் (FULL BODY CRACK OUR SPECIALITY)
* பிரிண்ட் சாரீஸ் (பிளாக் பிரிண்ட்)
* பெங்கால் காட்டன் சாரீஸ்

எல்லாமே புது ஸ்டாக்

MADURAI TEXTILES

மதுரை டெக்ஸ்டைல்ஸ்
2. சிவப்பிரகாசம் சாலை,
பாண்டி பஜார், சென்னை - 17.
(அகஸ்தியர் கோவில் அருகில்) PHONE : 4332197

கல்கி — பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

வாரம் ஒரு சவரன்

போட்டி — 9; முடிவு!

கலைஞர் அனுப்பிய செய்தி!

பரணில் தூக்கிப் போட்டேன்!

எனக்குத் தெரியாத ஜோதிடர்களே ஊரில் இல்லை. அந்த அளவுக்கு நான் ஜோதிடத்தில் நம்பிக்கையுடையவளாயிருந்தேன். என் கணவர் எவ்வளவோ சொல்லியும் நான் கேட்கவில்லை. ஒருநாள் பிரபல ஜோதிடர் ஒருவர் திடீரென்று விபத்தில் மரணமடைந்ததைக் கேட்டதும் ஆடிப் போனேன். 'எத்தனையோ பேரின் ஜாதகத்தைக் கணித்துப் பிராயச்சித்தம் கூறிய அவரால் அவரது விபத்தைத் தவிர்க்க முடியவில்லையே!' என்று என் கணவர் கூற, அன்று ஜாதகக் கட்டைத் தூக்கிப் பரணில் போட்டவள்தான்!

மல்லிகா, ஈரோடு – 2.



கலைஞர் அனுப்பிய செய்தி

கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் ஞாயிறு மாலை நான்கரை மணிக்கு – சரியான ராகு காலத்தில் என் திருமணம் நடைபெற இருந்தது. மதியம் மூன்று மணிக்கு நகர்மன்றத் தலைவர் ஏ.வி. மதி என்னிடம் வந்தார். "ராகு காலத்தில் திருமணம் செய்வது மணப் பெண்ணுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு பெரிய குறையாக ஆகிவிடும். எனவே ராகு காலத்துக்கு முன்பே திருமணம். பிறகு வாழ்த்துரை நிகழ்ச்சி!" என்று கலைஞர் சொல்லியனுப்பியதாகச் சொன்னார். அதன்படியே என் திருமணம் நடந்தது.

சி. பாலசுப்பிரமணியன், தஞ்சை – 2.

தாயார் கொடுத்த ஷாக்!

பத்தாண்டுகளுக்கு முன்பு நான் புகைபிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தேன். வீட்டிலுள்ளவர்களுக்குத் தெரியாது என்றுதான் நினைத்திருந்தேன். ஒருமுறை இருமல் வரவே என் தாயார் மருத்துவரிடம் என்னை அழைத்துச் சென்றார். டாக்டரிடம், "நிறைய சிகரெட் பிடிக்கிறான் டாக்டர்!" என்று அம்மா கூறினார். அவருக்குத் தெரியாது என நினைத்திருந்த நான் கூனிக் குறுகிப் போய் விட்டேன். அன்று சிகரெட்டைத் தூக்கி எறிந்தவன்தான். இப்போது பக்கத்திலுள்ளவர் புகைத்தாலும் எனக்கு அலர்ஜி.

எஸ். ரவிச்சந்திரன், சென்னை – 17.

அன்று விட்டவன்தான்!

நான் ஓர் ஏழைத் தொழிலாளி. யார் யாரோ புத்தி மதி சொல்லியும் என்னிடமிருந்த லாட்டரி சீட்டு வாங்கும் பழக்கத்தை விட முடியவில்லை. ஒருமுறை என் தந்தைக்காக மருந்து வாங்க வைத்திருந்த பணத்திலும் லாட்டரி சீட்டு வாங்கி விட்டேன். விளைவு, என் தந்தையின் மரணம். அன்று எடுத்த முடிவுதான், பதின்மூன்று வருடமாச்சு, நான் லாட்டரி சீட்டு வாங்கி.

வி. பரமசிவம், மதுரை – 16.

புலாலை மறந்தேன்!

அசைவம் விரும்பிச் சாப்பிடுவேன். டெலிவிஷனில் வரும் 'Living on the edge' நிகழ்ச்சியைத் தொடர்ந்து பார்ப்பேன். அதில் ஒருமுறை இறைச்சிக் கூடத்துக்குக் கொண்டு செல்லப்படும் மாடுகள் எப்படியெல்லாம் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுகின்றன என்று காண்பித்தார்கள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அன்று முதல் நான் சுத்த சைவம்!

பி. மனோகர், மைசூர் – 6.

முதியவரிடம் கற்ற பாடம்!

ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் தலைவருக்கு நான் செயலாளர். என்

மனையிலுள்ள டெலிபோன் எப்போதும் டித்தபடியே இருக்கும். நேரில் வந்தவர்க ளாடு பேச முடியாதபடிக்கு நான் போனில் பசிக் கொண்டே இருப்பேன். ஒருமுறை ஒரு பரியவர் தலைவரைச் சந்திக்க நேரம் கேட்டு நரில் வந்திருந்தார். அவரிடம் பேச முடியாத டிக்கு போன்! காத்திருந்து அலுத்துப் போன அவர் எழுந்தார். "இருங்கள்!" என்றேன். "பர ாயில்லை, நீங்கள் டெலிபோனை அட் டெண்ட் பண்ணுங்கள். நான் வெளியே போய் அங்குள்ள பப்ளிக் டெலிபோன் பூத்திலிருந்து ங்களைத் தொடர்பு கொள்கிறேன். அப் போது உங்களிடம் கலபமாகப் பேசலாமே!" என்று போய் விட்டார். டெலிபோன் போலவே நேரில் வந்திருப்பவர்களிடம் பேசுவதும் முக்கியம் என்பதை அன்றுதான் உணர்ந்தேன்.

ஆர். கோபாலகிருஷ்ணன், ஊரப்பாக்கம்.

பறந்தது ஜாதிக்கிளி!

எனக்கு ஜாதிப்பற்று அதிகம். மாலையில் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் பேத்தியை 'இட்டு' போக வேண்டும் என்பதற்காக மாலை யிலும் குளிப்பாட்டுவேன். திடீரென்று என் பேத்திக்கு ஜுரம் வர, டாக்டரிடம் அழைத் துப் போனேன். அவரிடம் மருத்துவம் பார்த் துக் கொண்டு வீடு திரும்பியதும், "பாட்டி நான் குளிக்க வேண்டாமா?" என்றாள் பேத்தி. "எதற்கு?" என்றேன். "டாக்டர் நம்ம ஜாதி இல்லையே!" என்றாள். அந்த நிமிடமே என் மனக் கூண்டிலிருந்த ஜாதிக் கிளி பறந்து போனது!

எஸ். கோமதி சுந்தரம், வீரவநல்லூர்.

ஆசையை மாற்றினேன்!

கஜினிமுகமது போல அடிக்கடி சென் னைக்குப் படையெடுத்துக் கொண்டே யிருந்தேன்! எதைப் பிடிக்க? பிரபலமான சினிமா டைரக்டர் ஒருவரிடம் உதவி இயக்கு னராகச் சேருவதற்குத்தான். பலர் சொல்லியும் கேளாமல் படையெடுத்தபடியே இருந்தேன். சமீபத்தில் ஓர் உதவி இயக்குனரை அவரது அறைக்குச் சென்று பார்த்தபோது, சாப்பாடின்றிப் பட்டினி கிடந்தார். சாப்பிட என்னிடம் பணம் கேட் டார். நான் வியப்போடு அவரைப் பார்த்தபோது உதவி இயக்குனர் களுக்கெல்லாம் சம்பளம் கிடையாது. ஷூட்டிங் இருக்கிற அன்று சாப் பாடு மட்டும்தான் கிடைக்கும் என்றார். அப்புறம் எதற்கு சென்னைக்கு வரப் போகிறேன்?

ஆர். ராஜதுரை, சீர்காழி.

ஏழை அவளல்ல!

பஸ்ஸில் என்னருகில் வந்தமர்ந்த ஏழைப் பெண் மீது எரிச்சல் வந்தது. நகர்ந்து அமர்ந் தேன். வழியில் ஒரு கோயில் வந்த போது "தாயே! எல்லா மக்களை யும் காப்பாத்தம்மா!" என்று உலக மக்கள் அனைவருக்காகவும் அந்தப் பெண் வேண்டி னாள். அவளின் உயர்ந்த உள்ளத்தை உணர்ந்து நெகிழ்ந்தேன். அந்த நிகழ்ச்சி ஏழைகள் மீது அன்பும் அனைவருக் காகவும் பிரார்த்தனை செய்யும் பக்குவத்தையும் ஏற்படுத்தி விட்டது எனக்கு.



ஜே. கிரேஸ்கமலம், வள்ளியூர்.

காந்திஜி கேட்ட கேள்வி!

பரங்கிப்பேட்டையில் நான் படித்துக் கொண்டிருந்த காலம். அப்போது காந்திஜி சிதம்பரம் வந்திருந்தார். அவரை அருகில் சென்று தரிசனம் செய்யும் வாய்ப்புக் கிடைத் தது எனக்கு. சிதம்பரத்தைச் சேர்ந்த காங்கிரஸ் ஊழியர் நைனியப்பன், காந்திஜியிடம் என்னைக் காட்டி, "இந்தியன் எக்ஸ்பிரஸ் திருபர் முராரியின் தம்பி!" என்றார். பட்டுச் சொக்காய், பட்டு ஜரிகை வேஷ்டியுடன் இருந்த என்னைப் பார்த்த காந்திஜி, "பகட் டான் ஆடைகள் எதற்கு? பருத்தி ஆடை அணியலாமே!" என்றார். "இனி அணிய மாட்டேன்!" என்று காந்திஜியிடம் உறுதி கூறிய நான், அவரிடம் ஹரிஜனநல நிதிக்கு ஒரு ரூபாயும் கொடுத்தேன். அன்று முதல் பருத்தியாடைதான்.

எம்.என். ராம்சந்தர், அரியலூர்.

இந்த வாரம் ஒரு சவரன் பரிசு பெறுபவர் :

எஸ். கோமதிசுந்தரம்,
89 A, S.P. சன்னதி தெரு,
வீரவநல்லூர் - 627 426.
நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்.

இருட்டுத் திரையில் பொறிப் பொறியாய் நட்சத்திரங்கள் தெரிந்தன. தோளை அழுத்தி மூச்சை நிறுத்தி... சுருட்டி சுண்டியிழுத்தது வலி. 'இதுவும் ஒரு உச்சம்; அனுபவி...!' என்பது போல் வன்மத்துடன் மீண்டும் மீண்டும்...

சக்தி வடிந்துபோய் தொய்ந்த அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது.

"என்னடி. சிரிக்கிறே...?"

"இல்லம்மா..." - பேச முடியாமல் முனகினேன். "மனசுக்கு எவ்வளவு பெரிய வலியானாலும் தாங்கி, துடைச்சுத் தூக்கியெறிஞ்சுட முடியுது... இந்த அல்ப விஷயம் - அப்பெண்டிக்ஸ் - என்ன பாடுபடுத்துது...?"

அம்மா பேசாமல் மாத்திரையை நீட்டினாள். "டாக்டருக்கு போன் பண்றேன். திரும்பவும் வலி வந்தா ஆபரேஷன் பண்ணணும்னு சொன்னாரில்லையா..."

"இப்போ இருக்க மாட்டார். காலைல ஏழு மணிக்கு வீட்டுல பிடி...." - சொல்வதற்குள் திரும்பவும் சுருட்டி விழுத்தது. முழங்கால்கள் மடங்கி கொக்கியாக வளைந்தன.

இரவே டாக்டர் முகுந்தனைப் பிடித்து விட்டாள் அம்மா.

"இப்பவே அழைச்சுட்டு வந்துடுங்க நர்ஸிங் ஹோமுக்கு; காலைல ஏழு மணிக்கு ஆபரேஷன் பண்ணிடறேன்ங்கறார்..."

பதற்றமில்லாமல் படிப்படியாகச் செயல்பட்டாள். இந்நகர் கேப்ஸில் டாக்ஸிக்குச் சொல்லிவிட்டு, தான் சாப்பிட்டு, கூடையில் ஃப்ளாஸ்க் தம்ளர், ஸ்பூன் என்று அடுக்கி, இருவருக்கும் மாற்றுடைகள், டெட்டால், யூடிகொலான், அட்ரஸ் புக், போனுக்குத் தனியாகச் சில்லறை...

மனப்பாடமான மளிகைக் கடைப் பட்டியல் போல் இலகுவாக சேகரித்தாள். ஞாபகமாக சாமி கும்பிட்டு, பக்கத்து வீட்டில் பால் பாக்கெட் எடுத்து வைக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டு என்னை எழுப்பி டாக்ஸியில் ஏற்றி...

காலையில் எழுப்பியதும் அம்மாதான். நாலரை மணியிருக்கும்.

"ஸிஸ்டர் வந்துட்டுப் போனா... குளிச்சுத் தயாராகணுமாம்..." பாத்ரூம் விளக்கைப் போட்டாள்.

"மடியாயிருந்தாத்தான் ஆபரேஷன் பண்ணுவாராமா டாக்டர் முகுந்தன்..."

"ஏன்டீ! உனக்குக் கொஞ்சம் கூட கலக்கமாயில்லையா...? யாருக்கோ ஆபரேஷன்ங்கறது போல கிண்டல் பேசறே..."

"எதுக்குக் கலங்கணும்...?"

"அதுவும் சரிதான்... நீ எதுக்காவது கலங்கியிருந்தாத்தானே இதுக்குக் கலங்குவே..."

மயக்கம்

கட்டில் விளிம்பில் அவள் உட்கார்ந்தபோது கசங்கிய காகிதமாகச் சோர்ந்து தெரிந்தாள். பாவம்! எனக்கில்லாத கலக்கத்தைச் சேர்த்து சுமக்கக் கடமைப்பட்டது போல் வெதும்புகிறவள்... அதுவும் ரகுவரன் மூர்க்கமாகப் பிரிந்து போன பிறகு அவள் மெலிந்த தோள்கள் நிரந்தரமாய்ச் சரிந்துவிட்டன. இந்த இரண்டரை வருடங்களாய் நிமிரவேயில்லை...

ஆறு வருடங்கள் சுற்றி சுற்றி வந்து காதலித்தான். சினிமாத்தனமெல்லாம் இல்லாத மிடில் கிளாஸ் காதல்தான் எங்களுடையது. செல்ல சண்டைகள், விபரீத வாக்குவாதங்கள், பலமான கருத்து மோதல்களினூடே தொடர்ந்தது.

"உங்க பொண்ணுக்கு அறிவே கிடையாது..." உரிமையுடன் சமையலறை வரை போய் அம்மாவிடம் புகார் செய்வான்.

"ஆமாம் தம்பி..."

"நாளையிலேருந்து இங்க வரவே மாட்டேன்..."

"அது கிடக்கு விடு தம்பி... ஏதாவது புக்கைப் படிச்சுட்டு மேதாவி மாதிரி வாதாடும்... நீ எப்பவும் போல வந்து போ..."

மறுநாளே வருவான். அம்மாவுக்குப் பிடித்த பேரீச்சம் பழம் கையில் இருக்கும். கண்களில் அதே பழைய காதல். அவுன்ஸ் அளவும் குறையாமல் குளம் கட்டியிருக்கும்.

ரகுவரன் குளத்தையே இடம்பெயர்க்கக்கூடியவன் என்று அம்மாவோ நானோ எதிர்பார்க்கவில்லை.

"கல்கத்தாவில் மூன்று மாதம் ட்ரெயினிங். அருணா... போனெல்லாம் எதிர்பார்க்காதே. லெட்டருக்கு நிச்சயம் நேரமிருக்காது..." என்றபோது சிரித்தேன்.

"எதிர்பார்க்கவில்லை... ஆனால் வந்தா சந்தோஷப்படுவேன்..."

போன், லெட்டர் எதுவும் வரவில்லை. மூன்று அல்ல... நான்கு மாத இறுதியில் வந்தான்.



வங்காளப் பெண் கூட இருந்தான்.

"சுபா - அடுத்த மாசம் கல்கத்தாவில எங்க கல்யாணம்" - சுருக்கமாக முடித்துக் கொண்டான்.

அவர்கள் போனதும் அம்மா குலுங்கி அழுதாள்.

அவளை ஆசுவாசப்படுத்துவது முதல் கடமையாகிப் போனதாலோ...? மனித மனத்தின் இருட்டு ஆழத்தை இப்படி நிர்தாட்சண்யமாகத் தரிசித்ததாலோ... தெரியவில்லை. எனக்குக் கண்ணீர் வரவில்லை.

மாறாக வியப்பு... விலகி நின்று ஒரு திறமையான சூழ்ச்சியைக் கூறுபோட்டு ஆராயும் குறுகுறுப்பு. ரகுவரனை ஒரு ஷேக்ஸ்பியர் பாத்திரம் போல் புரட்டி அலசினேன். 'The dominant trait is selfishness...!'

- விடையென்று நான் நினைத்தது கிடைத்தபோது கர்வமாயிருந்தது.

ஸிஸ்டர் தியேட்டர் உடையை மாட்டி விட்ட போதும் அந்த கர்வம் உள்ளுக்குள் ஓடி சாகச உணர்வு தந்து கொண்டிருந்தது.

'ஆபரேஷன் என்ன பெரிய விஷயம்.... ஒரு கை பார்த்து விடுவோம் இதை...'

வீல் சேரில் உட்காரச் சொல்லி தியேட்டருக்குத் தள்ளிப் போனபோது விழிப்பாய் இருந்தது. டாக்டரின் உதவி மறுத்து, நானே ஆபரேஷன் டேபிளில் ஏறிப் படுத்துக் கொண்டேன்.

"கொஞ்சம் ஆக்ஸிஜன் சுவாசியுங்க." அனஸ்தடிஸ்ட் மூக்கில் பிளாஸ்டிக் கவசம் பொருத்திவிட்டு இடதுகை பற்றி அழுத்தி ரத்த நாளத்தைத் தேட ஆரம்பித்தார்.

டாக்டர் முகுந்தன் கை கழுவும் தொட்டியில் சோப்புக் குழைக்கும் ஓசை கேட்டது.

"எதாலே வெட்டுவீங்க டாக்டர்...?" மூக்குக் கவசத்தை நீக்கிவிட்டுக் கேட்கத் தோன்றியது. இரண்டு கைகளையும் பக்கவாட்டில் நீட்டி வைத்துக் கட்டியிருந்தார்கள்!

சீதா ரவி

சின்ன வயதில் வெறித்தனமாய் ஏறிச் சுற்றிய குடைராட்டினம். அதில் பல் வெறிக்கப் பார்க்கும் பச்சை பெயிண்ட் அடித்த குதிரை பொம்மை... இல்லையில்லை... பச்சை பெயிண்ட், நர்ஸிங் ஹோம் சுவரினுடையது. அதோ இடதுபக்க ஜன்னல்; எனக்கு நேரெதிரே வாசல். பூப்போட்ட பழுப்பேறிய திரைச்சீலை. வலது பக்கத்தில் அரக்கு மஞ்சள் காஞ்சி காட்டனில் அம்மா... கூப்பிட வேண்டும் அவளை... மீண்டும் ஒரு அசுர சுழற்சி உடலை, உயிரை, உயிர் கடந்த எனக்குள் ஒன்றைத் தூக்கி... அப்படியே விட்டத்தில் சுழலும் ஃபானுடன் அதன் சுழற்சியுடன் சேர்த்து...

கிடையாது! அது வேறு; நான் வேறு. இதோ ஜன்னல் வழியே அணில் பிள்ளைகள் வீறிடும் ஒலி, சிட்டுக் குருவிகள்... ஹமீர் கல்யாணி தில்லானா அவற்றுக்கு எப்படித் தெரியும்...? அப்புறம் தோடி ஸ்வரஜதி...! இடையிடையே முஸ்தஃபா முஸ்தஃபா... - பொல்லாத அணில்கள்...!

சுழற்சி மெள்ள வடிந்து கொண்டிருந்தது. உதடுகளின் வறட்சி, தொண்டையின் உலர்வு உடலின் எடையின்மை, தலையின் தனியான கனம்... படிப்படியாகப் புலனாக...

"ம்மா..." எனக்கே என் குரல் அந்நியமாய்க் கேட்டது.

தேவதை வேஷத்தில் அம்மா அருகே இருந்தாள். நெற்றியில் கைபதிந்தது.

"ம்மா..." நான் ஏன் இவ்வளவு குழைந்து போனேன்...? எப்படி இந்த பலவீனம் வந்தது...? உடம்பு முழுவதுமே ஒரு துக்கப் பந்தாக மாறிப் போனது...

"ம்மா... ரகுவரன் ஏன்மா அப்படி செஞ்சான்..." - என் குரலின் அன்னியத்தன்மை குறைந்து தெளிவு பெற்றிருந்தது.

என் விழிக்கடையில் உதிர்ந்த நீரை ஒற்றியெடுத்தாள் அம்மா.

"மயக்கம் தெளிஞ்சுடுத்து அருணா..." என்றாள், சலனமில்லாமல்.

மூழ்காத ஷிப் :

டாக்டர் சுனிதி சாலமன்

மனம் திறந்து பேச ஓர் அண்ணி!

தமிழ்நாட்டில்தான் பிறந்தேன். தமிழரைத்தான் திருமணம் செய்து கொண்டேன். என்றாலும் பலரும் என்னை மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்தவள் என்றே நினைக்கிறார்கள். இதனால்தானோ என்னவோ எனக்கு நெருங்கிய தோழிகள் என்று யாரும் சமவயதில் இல்லை.

எனவே, நான் குறிப்பிடப் போவது சுமதியைப் பற்றித்தான். என் அண்ணன் ரகுநாத்தின் மனைவி. அண்ணி என்பதால் அவரை இந்தப் பகுதிக்கு நான் தேர்ந்தெடுக்கவில்லை. சொல்லப் போனால் உறவினர்களிடையே - முக்கியமாக அண்ணி - நாத்தனார் ஆகியோருக்கிடையே - ஆழ்ந்த நட்பென்பது ரொம்ப அபூர்வம். எங்களுடையது இந்த அபூர்வ வகை.



• சுனிதி சாலமன், சுமதி

நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும்போதுதான் ரகுநாத்துக்கு திருமணமானது. என்னைவிட பதினோரு வயது அதிகமான சுமதியை எனக்குச் சீக்கிரமே பிடித்துப் போயிற்று. சாந்தமான குணம். மிக மிக மென்மையாகத்தான் பேசுவார். என் மென்மையான உணர்வுகளைப் புரிந்து கொள்வார். (அம்மாவிடம் நான் கொஞ்சம் தலைமுறை இடைவெளியை உணர்ந்ததுண்டு.) எனக்கு ஏழு சகோதரர்கள். சகோதரி என்று யாரும் கிடையாது. இந்த நிலையில் சுமதி எனக்கு ஒரு நல்ல தோழியாகவே விளங்கினார். அவர் எந்த அளவுக்கு எனக்கு ஆதரவு அளிப்பவர் என்பதை என் திருமண விஷயத்தின் போது முழுமையாகக் கண்டு கொண்டேன்.

மருத்துவக் கல்லூரியில் படிக்கும்போதுதான் விக்டர் சாலமன் எனக்கு அறிமுகம். கண்டதும் காதல் அல்ல. மற்றவர்களை விட நோயாளிகளின் நலன் மட்டும்தான் முக்கியம் என்ற அவர் கொள்கை எனக்குப் பிடித்திருந்தது. கேர்ள் பிரண்ட், பாய் பிரண்ட், காதல் என்பதெல்லாம் சகஜமாக இருந்த மருத்துவக் கல்லூரியில், பாடங்களில் மட்டுமே கவனம் செலுத்திய இவர் மீது எனக்கு மதிப்பும் அன்பும் தோன்றின. "நம் காதலை உன் அம்மா ஏற்றுக் கொள்வார்களா என்பதை அறிந்து கொள்" என்றார் அவர்.

எங்கள் பின்னணிகளில் நிறைய வித்தியாசம். நான் ஹிந்து. அவர் கிறித்தவர். நாங்கள் வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். பொருளாதாரத்தைப்

பொறுத்தவரை எங்கள் குடும்பம் மேல்தட்டு. தெருவிளக்கில் படிக்க வேண்டிய அளவுக்கு ஏழைமையான பின்னணியில் பிறந்த என் அப்பா, தன் அசாத்திய படிப்பாற்றலால் ஸ்காலர்ஷிப் உதவியுடன் யு.கே. சென்று படித்து, தோல் தொழில்நுட்பத்தில் சிறப்புப் பெற்று, வியாபாரத்தில் நிறைய செல்வம் சேர்த்துவிட்டு இறந்து போயிருந்தார்.

எங்கள் திருமணத்தில் அம்மாவுக்குச் சம்மதமில்லை. சகோதரர்களுக்கும்தான்! அந்தச் சமயத்தில் சாலமனுக்கு இங்கிலாந்தில் ஃபெலோஷிப் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. திருமணம் செய்து கொள்ளாமல், என்னை இங்கு விட்டுச் செல்வதை விட அந்த ஃபெலோஷிப் வாய்ப்பைத் தவற விடுவதே மேல் என்று தீர்மானித்தார் அவர்.

"உனக்காக இப்படியொரு வாய்ப்பை இழக்கிறார் என்றால் உன் மீது அவர் கொண்டுள்ள காதல் ஆழமானதுதான். வீட்டில் மற்ற அத்தனை பேரும் ஒத்துக் கொள்ளாவிட்டாலும், நான் உங்கள் கல்யாணத்தை நடத்தி வைக்கிறேன்" என்று கூறியதுடன் என் சகோதரர்களில் இரண்டு பேரின் மனதையும் சுமதி மாற்ற வைத்தார். மற்ற சகோதரர்கள் வராமலேதான் எங்கள் திருமணம் நடந்தது (இன்று எல்லோரும் கூடிவிட்டோம் என்பது வேறு விஷயம்).

வீட்டுப் பிரச்னைகள் என்றில்லை. மற்றவற்றையும் கூட சுமதியிடம் மனம்திறந்து பேசுவதுண்டு. சமீபத்தில் கூட எங்கள் அமைப்பில் ஒரு தொழிலாளி என் கையெழுத்தைப் போலியாகப் போடுவது பற்றித் தெரிய வந்ததும் கொதித்துப் போய் விட்டேன். அப்போது, இதுபற்றி அறிந்த சுமதி "வாழ்க்கையில் நம்பிக்கைத் துரோகம் கூட ஒரு பகுதிதான். விஷயத்தை மிகவும் பெரிதாக்க வேண்டாம் அவரிடமிருந்து ராஜினாமாக் கடிதத்தை வாங்கிக் கொண்டு வேலையிலிருந்து நிறுத்திவிடு" என்றார்.

பள்ளிப் படிப்பைத் தாண்டியதில்லை என்றாலும் நடைமுறை ஞானம் நிறைய உண்டு அவருக்கு. என் எல்லா சகோதரர்களுக்குமே அவர் மேல் ஒரு தனி பாசம். அவர் என்னைக் கிணற்றில் விழச் சொன்னால் கூட நான் விழுந்து விடுவேன்! அந்த அளவுக்கு அவர் சொல்வது சரியாகத்தான் இருக்கும் என்பதில் எனக்கு மிகவும் நம்பிக்கை.

திருமணமாகி பதின்மூன்று வருடங்கள் கழித்துத்தான் நான் கருத்தரித்தேன். எங்கள் இருவருக்குமே பெண் குழந்தை வேண்டுமென்று ஆசை. "ஒருவேளை குழந்தை பெண்ணாகவும் இருந்து கறுப்பாகவும் இருந்து விட்டால்?" என்ற பயம் என் மாமியாருக்கு (என் கணவரின் நிறம் கருமை). அவரைச் சமாதானப்படுத்த என் கணவர் ஸ்ரீநகருக்குச் சென்று எனக்கு குங்குமப்பூ வாங்கி வந்தார். சுமதியோ என்னிடம் மிகத் தெளிவாக, "குழந்தையின் நிறத்தைப் பற்றி என்ன கவலை? அது ஆரோக்யமானதாகப் பிறந்தால் போதும்" என்பார் அடிக்கடி.

என் கணவர் க்ளினிக் கட்டத் தொடங்கிய நேரம். பணத்தட்டுப்பாடு. இதனால் எனக்கும் என் கணவருக்கு மிடையே அவ்வப்போது சிறு சிறு மனஸ்தாபங்கள். சுமதி மட்டும் "பல்லைக் கடிச்சிட்டு மூணு வருஷம் பொறுத்துக்கோ. அதுக்கப்புறம் உன் வாழ்க்கையில் பிரச்னையே இருக்காது" என்று உற்சாக டானிக் கொடுப்பார்.

எங்காவது வெளியூர் போனால் என் கணவர் உட்பட யாருக்கு எதை வாங்கி வர மறந்தாலும், சுமதிக்கென்று எதையாவது வாங்காமல் நான் வந்ததில்லை. அவரது இரு மகன்களின் வளர்ப்பில் நான் அக்கறை செலுத்தியது போலவே, என் மகனின் வளர்ச்சியிலும் அவர் பங்கு கணிசமாக உண்டு.

சுமதிக்கு லைட்டான வண்ணம் கொண்ட உடைகள்தான் பிடிக்கும். என் ஓட்டோ பளிச்சென்ற வண்ணங்களுக்கு. நான் கலகலவென்று பேசுவேன். சுமதியோ ரொம்ப ரிசர்வ்ட். நாங்கள் இருவரும் எந்த விதத்திலும் ஒருவரை மற்றவர் மாற்றுவதற்கு முயற்சி செய்ததேயில்லை. எங்கள் நட்பின் ஆழத்துக்கு இதுகூட ஒரு காரணமாக இருக்கலாம்!

சந்திப்பு : **அருண் சரண்யா**

ஒரே ஒரு தபால் பெட்டி வசதி கூட இல்லாத கிராமங்களின் எண்ணிக்கை:

உத்திரப்பிரதேசம்	- 35,571	அஸ்ஸாம்	- 10,388
பீகார்	- 41,708	ஆந்திரா	- 30,000 +
மத்தியப்பிரதேசம்	- 33,290	கர்நாடகம்	- 30,000 +
ராஜஸ்தான்	- 17,310	தமிழ்நாடு	- 839
ஒரிஸா	- 36,200		

ஆதாரம் : "தமிழ்நாடு", தகவல்: ஆ. ஞானமுகசுந்தரம்

நான் வெயிட் போட மாட்டேன்!





விஜயகுமார் குடும்பத்தின் ரேஷன் கார்டிலுள்ள அனைத்து நபர்களும் நடிக்க வந்து விட்டார்கள். இப்போது மஞ்சுளாவின் இரண்டாவது மகள் ப்ரீதா. ரவிராஜாமினி செட்டியின் இயக்கத்தில் தமிழ் ப்ளஸ் தெலுங்கில் தயாராகி வரும் 'ருக்மணி கல்யாணம்' என்ற படத்தில் வினீத்துக்கு ஜோடி. இது ஒரு 'குடும்பப்' படமாம். அதாவது 'விஜயகுமார் குடும்பப் படம்' என்று கொள்க. திரையிலும் ப்ரீதாவிற்கு விஜயகுமாரே அப்பாவாக நடிக்கிறாராம்! தங்கை ஸ்ரீதேவி இந்தப் படத்தில் ப்ரீதாவிற்கு தோழியாம். ஸ்ரீதேவி அவ்வளவு வளர்ந்து விட்டாரா என்று கேட்ட போது, "இல்லையில்லை. அவள் எனக்கு இதில் 'யங் ஃபிரண்ட்' என்று அவசர விளக்கமளித்தார் ப்ரீதா.

இதுவரை நான்கு நாட்கள் படப்பிடிப்பு முடிந்திருக்கிறதாம். "அனுபவம் எப்படி?" என்ற போது, ப்ரீதா : "ஓ... இட்ஸ் ஃபன். ஐ லைக் இட்!"


நடிக்க வந்த புதிதில் மஞ்சுளா உண்மையிலேயே உடம்பைக் கச்சிதமாக வைத்திருந்தார். ஆனால் அதென்னவோ மஞ்சுளாவின் இரு வாரிசுகளுமே நல்ல 'புஷ்டி'யாக இருக்கின்றனர். இதுபற்றி ப்ரீதாவிடம் கேட்ட போது, "இல்லையில்லை! நான் 'வெயிட்' போட மாட்டேன். ஒழுங்காக 'ஜிம்' போய் உடற்பயிற்சி செய்கிறேன். சாப்பாட்டு விஷயத்திலும் ரொம்ப கண்ட்ரோல்தான்!" என்றார் நம்பிக்கையோடு.

மூன்று மகள்களும் படப்பிடிப்புக்குப் போனாலும் 'மம்மி' மஞ்சுளா ப்ரீதாவுடன் தான் செல்கிறாராம். ப்ரீதாவிற்கு முதல் படம் என்பதால் இந்தச் சலுகை!

- கிரிஜா ஜின்னா

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 525/-.

பொன்னைப் போல் கோதுமை
உங்கள் பொன்னான வாழ்வுக்கு !



சக்தி! சத்து!

சலுகை! சுவை!

வாங்கத் தூண்டும் விலை

ஒரு கிலோ
மைதா - ரூ.6.50

ஒரு கிலோ
ரவை - ரூ.6.60

ஒரு கிலோ
ஆட்டா மாவு - ரூ.5.50

- எவ்வயதினருக்கும் எந்தப் பருவத்திற்கும் ஏற்றவை கோதுமைப் பண்டங்கள் மற்றும் கோதுமைப் பொருட்களான மைதா, ரவை ஆட்டா மாவு ஆகியவை.



***கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களை அரசு பொது விநியோக அங்காடிகளில் குறைந்த விலைக்கு வாங்கலாம். விரும்பும் உணவு வகை செய்யலாம்.**

தமிழ் நாடு அரசு
உணவுப் பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

TNWPP

தமிழ்நாடு கோதுமை உருளை மாவு ஆலைகள் சங்கம்
129 அ பிரிவு முதல் மாடி, சிவாலயா கட்டிடம்
119, எத்திராஜ் சாலை, சென்னை - 105.
தொலைபேசி: 8265295, 8225248, 8225236.
தொலை நகல் (FAX): 8234569

அன்றாடம் கோதுமை உண்ணுங்கள்; ஆரோக்கிய வாழ்வை உறுதி செய்யுங்கள்


11வது ஜோடி!
தொட்டாலே நோய்கள் குணமாகும்!
– ஸ்பெஷல் ரிப்போர்ட்